Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°C 26°C

பக்கம் 32 ■ சுடர்: 28 ■ கதிர்: 309 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 16, புதன் 02.10.2013

## முதலமைச்சர் நியமனக் கடிதம் நேற்று விக்கியிடம் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 02
வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரனை நியமித்து அதற்கான நியமனக் கடிதத்தை, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நேற்றையதினம் யாழ்ப்பாணம், பழைய பூங்காவில் உள்ள தனது வதிவிடத்தில்வைத்துஉத்தியோக

21

## காணாமற்போனவர்களின் விவரங்களை அனுப்புங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 02
இலங்கையில் காணாமற்போனவர்கள் எவருமே இல்லை என்று தெரிவித்து வந்த அரசு சர்வதேச அழுத்தத்தால் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழுவை நியமித்துள்ளது. எனவே காணாமற்போனவர்களின் உறவுகள் உடனடியாக குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விவரங்களை அனுப்புமாறு காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் காணாமற்போனவர்கள் என்று எவருமே இல்லை என்று அரசு தொடர்ச் சியாகத் தெரிவித்து வந்தது.
இந்த நிலையில் சர்வதேசசமூகத்தின்தொடர்

21

## தொட்டிலடி சந்தியில் படையினர் சோதனை

வலி.வடக்கு, ஒக். 02
சங்கானை தொட்டிலடிச் சந்தியில் படையினர் மாலை வேளைகளில் வாகனங்களை மறித்து சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மாலை வேளை அந்தப் பகுதி ஊடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு

21

# கொந்தளித்து எழுந்தது கிழக்கு 13இற்கு ஆதரவாகத் தீர்மானம்

### கடும் அமளிக்கு மத்தியில் 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

கொழும்பு, ஒக்ரோபர் 02
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை பலப்படுத்துவது தொடர்பான பிரேரணை, கிழக்கு மாகாண சபையில் கடும் அமளிக்கு மத்தியில் நேற்று 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.
13 ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள் வதற்கான முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக இறங்கியுள்ள நிலையில், அதற்கு எதிராக 13 ஐ பலப்படுத்த வேண்டும் என்ற யோசனையை அரசின் பங்காளியான மு.கா. கிழக்கு மாகாண சபையில் முன்வைத்தது.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல் சமர்ப்பித்த 13ஆவது திருத்த ஆதரவுப் பிரேரணைக்கு முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து சபையில் நேற்று பெரும்அமளி ஏற்பட்டது. சபைநடவடிக்கையும்ஒத்திவைக்கப்பட்டது.
ஜூலை 23 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த தனிநபர் பிரேரணை மீது விவாதம் நடத்தி வாக்கெடுப்புக்கு விடுமாறு மு.கா. நேற்று கோரியது.
இதன்போது,13ஆவது திருத்த விவகாரம் நீதி மன்றத்தில் இருப்பதால் இந்தச் சபையில் அது பற்றி விவாதிக்க முடியாது என்று முதலமைச்சர் அனுமதி மறுத்தார்.இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீதுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீ லுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.
இதன்போது ஜெமீலுக்கு ஆதரவாக கிழக்கு மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுத பாணி உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் குரல் எழுப்பினர். இந்நிலையில், முதலமைச்சருக்கு ஆதரவாக ஆளும் தரப்பு சிங்கள உறுப்பி

21

### வெளியானது புலமைப் பரிசில் பெறுபேறு

## வடக்கில் ஏழாலை சைவசன்மார்க்க மாணவன் தனுராஜ் முதலிடத்தில்



ப.தனுராஜ்



யோ.கோபிகா



இ.விதுர்ஷியா



ந. அருண்



அ.அருவி

யாழ்ப்பாணம், ஒக்.02
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளும் மாவட்ட ரீதியான வெட்டுப் புள்ளிகளும் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தில் நேற்று வெளியிடப்பட்டன.
இந்தப் பெறுபேறின் அடிப்படையில் காலி, மஹிந்த வித்தியாலயத்தைச் சேர்ந்த சந்தரு பலகேவ என்ற மாணவன் 198 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
இதேவேளை, தமிழ்

21

## விசுவமடு விசுவநாதர் பாடசாலை சாதனை

### 30 பேர் தோற்றி 26 பேர் சித்தி

யாழ்ப்பாணம், ஒக்.02
முல்லைத்தீவு விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலையில் மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட நிலையில் முதல் 11 இடங்களைப் பெற்று சாதனை படைத்தனர்.
அத்தோடு குறித்த பாடசாலையில் 30 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 26 பேர் 154 இற்குக்கு மேல் புள்ளிகள் பெற்று சாதனை படைத்தனர்.
இதன்படி த.விதுர்சியா - 192 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 1 ஆம் இடத்தையும், சி. கிந்துஷன், த. ஜெராலின் ஆகியோர் 186 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தையும்,

21

## முதல்வர் செய்த முதல் பணி



கூட்டமைப்புக்கு வாக்களித்த 101 வயது மூதாட்டியுடன்

யாழ்ப்பாணம், ஒக். 02
வடக்கு மாகாண முதலமைச்சராக நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்ட க.வி.விக்னேஸ்வரன் தனது முதல் பணியாக முதியோர் தினமான நேற்று சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்துக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடினார்.
அத்துடன் அங்கு வசிக்கும் 101 வயதுடைய மூதாட்டி ஒருவர் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்

21

### மட்டக்களப்பில் வறுமையில் உள்ள குடும்பங்களிடம்

## பாலியல் லஞ்சம் கோரும் நிதி நிறுவன அதிகாரிகள்

### தடுத்து நிறுத்தக் கோருகிறது அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்



மட்டக்களப்பு, ஒக். 02
மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயதொழில் கடன்களை இலகு தவணை முறையில் வழங்கும் நிதிக் கம்பனிகளும், நிறுவனங்களும் மக்கள் கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் அவர்களிடம் பாலியல் லஞ்சம் கோருகின்றன.
இதன் காரணமாக வறுமையில் உள்ள குடும்பங்கள் தற்கொலை செய்யவும், குடும்ப வன் முறையில் ஈடுபடவும் தூண்டப்படுகின்றன இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
இணையத்தின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில்

21

## குர்ஷித் யாழ்ப்பாணம் வருகிறார்



யாழ்ப்பாணம், ஒக்.02
இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை யாழ். மாவட்டத்துக்கு முதல்முறையாக வருகை தர

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சவால்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவர் பௌத்தர்கள்!

## பொது பல சேனா எச்சரிக்கை

"முஸ்லிம் அடிப்படைவாதிகளின் அபாயகரமான சவால்களுக்கு முகங் கொடுக்கும் அஹிம்சை வாதிகளான பௌத்தர்கள், தமது பௌத்த தர்மத்தைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை எதிர்காலத்தில் ஏற்படும். உணர்வுள்ள பௌத்தர்கள் தமது பிரச்சினைகளுக்கு மோதலினூடாகத் தீர்வு காண்பர்."

இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் வண. கலபொட அத்தே ஞானாசார தேரர்.

கிழக்கிலுள்ள 10 முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள், சவூதி அரேபியாவிலிருந்து உதவிகளைப் பெற்று பௌத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. அது மட்டுமல்லாது, தமது சமய நியதிகளையும் இலங்கை அரசமைப்பின் ஒரு பகுதியாக்கிக் கொள்ளவும் எவ்வித அச்சமும் இன்றிச் செயற்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு - 07, சுதந்திர சதுக்கத்தில் உள்ள நூலகச் சேவை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

உலகிலுள்ள பௌத்தர்கள் பெரும் சவால்களுக்கு முகங் கொடுக்கின்றனர். அதுபோலவே இலங்கையிலுள்ள பௌத்தர்களும் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். உலகில், சமாதானம், நல்லிணக்கம் எனப் பேசிக்கொண்டிருப்பவர்கள் எமது சமயத்துக்கு எதிராக செயற்படுகின்றனர்.

அன்று கத்தி, துப்பாக்கிகளூடாக பௌத்தர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், இன்று வேறு வடிவத்தில் கிறிஸ்தவ, முஸ்லிம் அடிப்படைவாதிகளால் கட்டவிழ்த்து விடப்படுகிறது. பௌத்தர்களின் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள இந்த அரசின் ஆட்சியில்தான் பௌத்த மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். கிறிஸ்தவ அடிப்படைவாத அமைப்புகள் எமது கலாசாரத்தை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

**அபாயகரமான முஸ்லிம் அடிப்படைவாதம்**

பௌத்தர்கள் எதிர்நோக்கும் மிக அபாயகரமான சவால் முஸ்லிம் அடிப்படைவாதமாகும். 10 முஸ்லிம் அமைப்புகள் நாடு முழுவதும் பல இடங்களில் நிறுவப்பட்டு, சவூதி அரேபியாவுடன் தொடர்புகொண்டு பௌத்த எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

தென் தாய்லாந்து, பங்களாதேஷ் முதலான நாடுகளில் பௌத்தர்கள் தாக்கப்படுகின்றனர். பங்களாதேஷிலுள்ள பௌத்தர்கள் வாளை எடுத்துக் கொண்டுதான் கடைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலைதான் தற்போது கிழக்கில் உருவாகியுள்ளது.

கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பகுதிகள் முழுமையாக முஸ்லிம் அடிப்படைவாதமாக மாறியுள்ளன. அங்குள்ளவர்கள் தமக்கென ஒரு தனியான நீதிமன்றம், தனிச்சட்டம் ஆகியவற்றை நடைமுறைப் படுத்துகின்றனர். ஒரு நாட்டில் எப்படி இவ்வாறு செய்ய முடியும்?

அரசிலுள்ள பல அமைச்சர்கள் பௌத்த சக்திகளுக்கு எதிராகப் பேசுகின்றனர். ஆனால் பௌத்த சமயத்தைப் பாதுகாக்கும் சட்ட மூலமொன்றை நிறைவேற்ற முடியாமல் தான் அவர்கள் இருக்கின்றார்கள்.

**பௌத்தரும் ஆயுதம் ஏந்துவர்**

முஸ்லிம் அடிப்படைவாதத்தால் அச்சுறுத்தப்படும் பௌத்த தர்மத்தைப் பாதுகாக்க அரசியல்வாதிகள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், பௌத்தர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை எதிர்காலத்தில் உருவாகும். ஏனெனில் எமது மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு.

பௌத்தர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல்வாதிகள் தீர்வு காணாவிட்டால், உணர்வுள்ள பௌத்த மக்கள் மோதலினூடாகவே அதற்குத் தீர்வு காண்பர். அந்த நிலை ஏற்படாது என நாம் நினைக்க முடியாது" எனத் தெரிவித்தார் ஞானாசார தேரர். (ஐ-சி)

---

### விபத்துக்களில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஒக்.2

வெவ்வேறு சம்பவங்களில் கை விரல்களில் பாதிப்பு ஏற்பட்ட இருவர் நேற்று சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

சாவகச்சேரிப் பகுதியில் தளபாட உற்பத்தி நிலையத்தில் இயந்திரத்துக்குள் கை விரல் அகப்பட்டு காயமடைந்த நிலையில் சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுஜீபன் (வயது 27) என்பவரும், கைதடியில் கட்டட வேலையில் ஈடுபட்ட வேளையில் கொங்கிறீற் கல் கையில் வீழ்ந்த போது விரல் எலும்பு முறிந்த நிலையில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த எப்.ஏ.சல்பா என்பவரும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ-9)

---



# விளையாட்டுடன் கூடிய கல்வியே உயர் பெறுபேற்றுக்கு காரணம்

## விபரிக்கிறார் முதலிடம் பெற்ற மாணவன் தனுராஜ்

விளையாட்டுடன் கூடிய கல்வியே நான் யாழ்.மாவட்டத்தில் 194 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெறக் காரணம் எனத் தெரிவித்துள்ளார் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவன் பரமானந்தம் தனுராஜ். கடந்த ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது வட மாகாணத்தில் முதலாம் நிலையைப் பெற்றுக் கொண்ட ப.தனுராஜ் தன்னுடைய வெற்றிப் பாதை குறித்து உதயன் வாசகர்களுக்காக வழங்கிய செவ்வி.

***கேள்வி:-*** யாழ். மாவட்டத்தில் முதலாம் நிலை பெறுவீர்கள் என எதிர்பார்த்தீர்களா ?

***பதில்:-*** 190 புள்ளிகளுக்கு மேல் எனக்கு கிடைக்கும் என்று நம்பிக்கை இருந்தது. ஏனென்றால் பரீட்சையின் போது நான் எந்தத் தவறும் விடவில்லை. எல்லாக் கேள்விகளுக்கும் மிகச் சரியான விடையை எழுதியிருந்தேன். எனினும் ஏதாவது கவனயீனப் பிழை விட்டிருப்பேனோ என்ற ஒரு சந்தேகம் இருந்தது. ஆயினும் யாழ்ப்பாணத்தில் முதலிடத்தைப் பிடிப்பேன் என்று நினைக்கவேயில்லை.

***கேள்வி:-*** இவ்வாறு உயர்ந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்வதற்கான காரணிகள் எவை என்று நினைக்கிறீர்கள்?

***பதில்:-*** எனது பாடசாலையில் ஊட்டப்பட்ட சிறப்பான கல்விதான் எனது இந்த வெற்றிக்கு முக்கியமான காரணி. எமது பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் ஒவ்வொரு மாணவர்கள் மீதும் அக்கறை எடுத்து அதிக புள்ளிகளைப் பெறும் வகையில் ஊக்குவித்தார்கள். அத்தோடு தனியார் கல்வி நிலைய ஆசிரியர் மற்றும் என் அம்மா, அப்பா, மைத்துனி ஆகியோரின் அக்கறையும் என்னை ஆர்வத்தோடு கற்க வைத்தன. புலமைச் சுடர் முதலானமாதிரி வினாத்தாள்களை திரும்பத் திரும்பச் செய்து பார்ப்பேன். ஒரு போதும் பதற்றமடைய மாட்டேன். இவற்றின் மூலமே நான் இந்தப் பெறுபேற்றை அடைய முடிந்தது.

***கேள்வி:-*** புலமைப் பரிசில் பரீட்சைக்காக கற்றலில் அதிக நேரத்தை செலவிடுமாறு உங்களைப் பெற்றோர் வற்புறுத்தவில்லையா?

***பதில்:-*** விளையாட்டுக்கும் கல்விக்கும் நான் சம நிலையே கொடுக்கிறேன். அத்தோடு சிறு வயதில் இருந்தே எனது மைத்துனியின் கவனிப்பின் கீழே வளர்ந்து வருகிறேன். அவர் என்னை தேவையான சந்தர்ப்பங்களில் சுதந்திரமாகவும், கட்டுப்பாடாகவும் என்னை வெற்றியை நோக்கி வழிநடத்திச் சென்றார். அத்தோடு எனது பெற்றோரும் எனக்கு பூரண ஆதரவாக இருந்தார்கள். எவரும் என் மீது கல்வியைத் திணிக்க முற்படவில்லை. நான் ஒவ்வொரு நாளும் முதல் வேலையாக எல்லா தினசரிப் பத்திரிகைகளையும் படிப்பேன். பரீட்சை அன்று கூட காலையில் பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கும்போது நேரமாகிவிட்டதென்று பெற்றோர் கலைத்த பின் தான் பரீட்சை மண்டபத்துக்கு ஓடிச் சென்றேன். அந்தளவுக்கு பத்திரிகை வாசித்தல் என்பது எனக்குப் பிடித்தமான ஒன்று. இதைவிட சதுரங்கம், கிரிக்கெட் என்பவற்றிலும் ஆர்வத்துடன் ஈடுபடுவேன். இவ்வாறு தனியே கல்வியில் மாத்திரம் புலனைச் செலுத்தாது பரந்துபட்ட ரீதியில் இயல்பான கற்றல் மூலம் இந்த வெற்றியை சாத்தியமாக்க முடிந்தது.

***கேள்வி:-*** 2014 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களும் உங்களைப் போன்று உயர்ந்த பெறுபேறு பெற என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்?

***பதில்:-*** பாடசாலையில் கற்றவற்றை வீட்டிலும் மீட்டுப்பார்த்து, சந்தேகங்களைத் தெளிவுபடுத்தி, விளங்கிக் கொள்ள வேண்டும். உங்களால் எவ்வளவு இயலுமோ அவ்வளவுக்கு மாதிரி வினாத் தாள்களை செய்து பார்க்க வேண்டும். அத்தோடு அறிவை இன்னும் வளர்க்க வாசிப்புப் பழக்கத்தை அதிகப்படுத்த வேண்டும். பரீட்சையை நினைத்து பதற்றப்படாமல் எங்களால் எல்லா கேள்விகளுக்கும் சரியாக பதில் அளிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு சுதந்திரமாக மாணவர்கள் செயற்பட வேண்டும்.

**நேர்காணல்**
**தர்சன், பர்ஷான்**

---

### சிறுவர்தினத்தில் புலமை பரிசில் பெறுபேற்றால் மாணவர் கவலை

யாழ்ப்பாணம், ஒக்.2

மகிழ்ச்சியாக கொண்டாடவேண்டிய சர்வதேச சிறுவர்தினம் இலங்கையில் பல சிறுவர்களுக்கு துக்க நாளாக மாறியதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியானதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புலமைப் பரிசில் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகுமென எதிர்பார்க்கப்பட்ட போதும் நேற்றே பெறுபேறுகள் வெளியாகின.

யாழ்.மாவட்டத்துக்கு வெட்டுப் புள்ளி 154 என அறிவிக்கப்பட்டிருந்ததால் அதற்கு குறைவாகப் புள்ளிகள் பெற்ற மாணவர்களும் அவர் தம் பெற்றோரும் சிறுவர்தின மகிழ்வினை மறந்து துக்கம் தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.

மகிழ்வுடன் காண வேண்டிய சிறுவர்கள் துக்கத்துடன் காணப்பட்டதால் வருங்காலத்தில் சிறுவர் தினத்தில் இது போன்ற போது பரீட்சை முடிவுகளை வெளியிட்டு மாணவர்களை கவலைக்குள்ளாக்குவதை தவிர்க்கப்பட வேண்டும் என பெற்றோர்கள் கேட்டுள்ளனர். (ஐ-9)

---

### தட்டாதெருச் சந்தி விபத்து இராணுவ பஸ் சாரதிக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 2

தட்டாதெருச் சந்தியில் இராணுவ வாகனம் மோதி இளம் குடும்பப்பெண் உயிரிழந்த விபத்துடன் சம்பந்தப்பட்ட சாரதியை விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் தனது கணவனுடன் சென்றுகொண்டிருந்த போது பின்புறமாக இராணுவ வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் இராணுவ வாகனத்தின் சில்லு பெண்ணின் வயிறு நெஞ்சுப் பகுதியை நசித்துச் சென்றது. இதன்போது உயிரிழந்த அவரது சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

விபத்தில் இராச வீதி, கோப்பாயைச் சேர்ந்த சதீஸ்குமார் கீர்த்தனா (வயது 20) என்பவரே உயிரிழந்தார். இவர்கள் திருமணமாகி எட்டு மாதங்களான நிலையில் விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

---

# இலங்கையில் மத சுதந்திர மீறல் பொதுச் சபையில் சீறியது கனடா

## மனித உரிமை நிலை குறித்தும் கவலை

கொழும்பு, ஒக்.2

இலங்கையில் மத சுதந்திரம் மீறப்படுவது குறித்தும் மனித உரிமைகள் நிலை தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கடுமையாகச் சாடினார் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட்.

ஐ.நா. பொதுச்சபையின் 68ஆவது அமர்வில் நேற்றுமுன்தினம் கனடாவின் சார்பில் உரையாற்றிய அவர் தனது உரையில், இலங்கையில் மத சுதந்திரம் மீறப்படுவது குறித்து கடும் கவலை வெளியிட்டார்.

இலங்கையில் அண்மையில், பள்ளி வாசல் ஒன்றும் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றும் தாக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், முஸ்லிம் அரசியல் வாதியான அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து கனடா தொடர்ச்சியாக எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகிறது.

அதேவேளை, நியூயோர்க்கில் நடந்த பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் கடுந்தொனியில் கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

கொழும்பில் நடக்கவுள்ள மாநாட்டுக்கு தமது நாட்டில் இருந்து முழு அளவிலான பிரதிநிதிகள் [illegible] என்றும் அவர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

---

### 2000 நாய்க்கடிகள் தினமும்

நாளொன்றில் 2,000 வரையிலான நாய்க்கடிகள் இடம் பெறுகின்றன என்று சுகாதார அமைச்சின் நீர் வெறுப்பு நோய் ஆராய்ச்சிப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனால் நீர்வெறுப்பு நோயால் ஆண்டொன்றில் 500 பேர் வரை உயிரிழக்கின்றனர் என்றும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கை இவ்வாண்டில் அதிகரித்துள்ளது. இந்த நாட்டில் கட்டாக்காலிகளாக [illegible] இலட்சம் வரையிலான நாய்கள் நடமாடித் திரிகின்றன என்று அந்தப் பிரிவு கூறியுள்ளது. (ச-22)

---

### விருப்பு வாக்குகள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஒக்.2

வட மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஆசனங்களைக் கைப்பற்றிய இரு கட்சிகளின் வேட்பாளர்களது விருப்பு வாக்குகள் தொகுதி ரீதியாக யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று முதல் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்தார்.

கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற வட மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 20 கட்சிகள் போட்டியிட்டன. இதில் இரு கட்சிகள் மாத்திரமே ஆசனங்களைக் கைப்பற்றிக் கொண்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரு கட்சிகளிலும் போட்டியிட்ட வேட்பாளர்களது விருப்பு வாக்குகள், ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலைய ரீதியாக யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று முதல் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எனவே இரு கட்சிகளிலும் போட்டியிட்ட வேட்பாளர்கள் நேரடியாக யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு வந்து, வாக்கெண்ணும் நிலைய ரீதியான விருப்பு வாக்குகளைப் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கான ரயில்பாதை அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அரியாலை நாவலடிப் பகுதியில் ரயில் பாலம் புனரமைக்கப்படுவதுடன் பாதை அமையவுள்ள இடங்களில் கிரவல்மண் பரப்பும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (வ-135)

## மாந்தை கிழக்கில் கடும் வறட்சி கைவிடப்பட்ட மேட்டுநிலச் செய்கை

வலி.தென்மேற்கு ஒக்.2

வறட்சி காரணமாக மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அநேகமான கிணறுகளில் நீர்மட்டம் குறைந்தும் வற்றியும் காணப்படுவதால் விவசாயிகளுக்குப் பெரியளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது. கிணற்று நீரை நம்பி மேட்டு நிலங்களில் மேற் கொள்ளப்பட்ட கத்தரி, மிளகாய், எலுமிச்சை, வாழை போன்ற பயிர்கள் நீரின்றி வாடி வதங்குவதால் பயிர்ச் செய்கை கைவிடப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் விநாயகர்புரம், பொன்நகர், பூவரசம் குளம், சிராட்டைக்குளம், கரும்புள்ளியான், பாலிநகர் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் கிணற்று நீரை நம்பி மேட்டு நிலங்களில் கத்தரி, மிளகாய், எலுமிச்சை, வாழை போன்ற பயிர்களை மேற்கொண்டனர்.

பருவ மழை பெய்யாததாலும் அங்கு ஏற்பட்ட வறட்சி காரணமாகவும் பல கிணறுகளில் நீர் மட்டம் குறைந்தும் வற்றியும் காணப்படுவதால் பயிர்களுக்குத் தேவையான நீரைப் பெற முடியாமல் திண்டாடும் விவசாயிகள், வாடி வதங்கிய நிலையில் காணப்படும் பயிர்களைக் கைவிட்டுள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளன. அதே வேளை தொடர்ந்தும் மழை பெய்யாது விட்டால் அம்பாள் குளம், வன்னி விளாங்குளம், கொல்லவிளாங்குளம் ஆகிய கிராமங்க்ளில் மேற்கொள்ளப்பட்ட விவசாயமும் கைவிடப்பட நேரிடும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-115)

## சத்திரச் சந்தியில் சமிக்ஞை விளக்கு அமைக்க திருவள்ளுவர் தடை

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்.மாவட்டத்தில் சத்திரச் சந்தியில் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞை விளக்குகளைச் செயற்படுத்த அந்தப் பகுதியிலுள்ள திருவள்ளுவர் சிலை தடையாக உள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வீதி அகலிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தின் பிரதான வீதிகள், நகரின் முக்கிய வீதிகள் அகலிக்கப்பட்டு காப்பெற் போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து முக்கிய சந்திகளில் வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்த தீர்மானிக்கப்பட்டது. இதற்குரிய நடவடிக்கைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. முதல் கட்டமாக சத்திரச் சந்தியில் வீதி சமிக்ஞை விளக்கு பொருத்தும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி யாழ்.மாவட் டத்துக்கு வருகை தருவதற்கு முதல் நாள் இரவிரவாக இதனைப் பொருத்தும் நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அவசர அவசரமாகப் பொருத்தப்பட்டு மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையிலும் அவை இன்னமும் இயங்கவில்லை.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரைக் கேட்டபோது, சத்திரச் சந்தியிலுள்ள திருவ்ள்ளுவர் சிலை அகற்றினால்தான் அதனைச் செயற்படுத்த முடியும். அதற்கான நவடிக்கைகள் யாழ். மாநகர சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விரைவில் அவை செயற்படுத்தப்படும்- என்றனர். (வ-5)

### பாதிக்கப்பட்ட சுத்திகரிப்புப் பணியாளர்கள்

# மாநகர சபை முன்பாக நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஒக்.2

கடமையிலிருந்து நிறுத்தப்பட்ட தற்காலிக சுத்திகரிப்புப் பணியாளர்கள் தமக்கு வேலை வழங்கக் கோரி மாநகர சபை முன்பாக நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாநகர சபையில் கடந்த 4, 8 வருடங்களாகப் பணியாற்றிய தற்காலிக சுத்திகரிப்புப் பணியாளர்கள் நேற்றுத் தொடக்கம் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளனர். சம்பளப் பிரச்சினை மற்றும் புதிய நேர்முகத் தேர்வு நடத்தப்படும் எனக் காரணம் கூறி நிறுத்தப்பட்டதால் சுத்திகரிப்புப் பணியாளர்களின் தொழில் வாய்ப்புப் பறிபோனதுடன் குடும்பப் பொருளாதாரமும் பாதிப்படைந்துள்ளது.



புதிய நேர்முகத் தேர்வு நடத்தப்படும் எனக் காரணம் கூறி நிறுத்தப்பட்டதால் சுத்திகரிப்புப் பணியாளர்களது தொழில் வாய்ப்புப் பறிபோனதுடன் குடும்பப் பொருளாதாரமும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில் பாதிப்படைந்துள்ள சுகாதாரப் பணியாளர்கள் நேற்றுக்காலை 9 மணியிலிருந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது "நேர்முகத் தேர்வு உள்வாங்கப்பட்டவர்களுக்கு நடத்துக", "ஆணையாளரே நாங்கள் கேட்பது சலுகை அல்ல எமது உரிமை", "நீதி கிடைக்காவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம்", "வறுமையில் வாடும் எமக்கு நீதியைத் தாருங்கள்", "மூப்பின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்குங்கள்" போன்ற பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் யாழ் மாநகர சபைக்கு முன்னால் உண்ணா விரதத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாநகர சபையின் ஆதரவு இல்லாமல் தனியார் நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ள சுத்திகரிப்புப் பணிக்கான கேள்வி கோரலை உடனடியாக நிறுத்த வேண்டும். தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவேண்டும். 15 நாள்களாக வழங்கப்படும் வேலை நாள்களை 21 நாள்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

நிறுத்தப்பட்ட பணியாளர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் அவர்கள் முன்வைத்துள்ளனர். (வ-14-10)

### சிறுவர் தினத்தையொட்டி

## கிளிநொச்சியில் நேற்று இரு நடைப் பவனிகள்



கிளிநொச்சி, ஒக். 2

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நேற்று கிளிநொச்சி நகர்ப் பகுதியில் காலை 8 மணிக்கு இரண்டு சிறுவர் நடைப் பவனிகள் ஏ-9 வீதியில் இடம்பெற்றன.

கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து மாணவர்களுள் ஏ-9 வீதியின் ஒரு புறமும், கிளிநொச்சி திருநகர் ஆதவன் முன்பள்ளிச் சிறார்கள் தமிழ்ப் பண்பாட்டு உடையுடன் பொய்க்கால் குதிரை ஆட்டத்துடன் மறுபுறமும் நடை பவனியாக வந்தனர்.

சிறுவர் உரிமைகள் மதிக்கப்படல் வேண்டும் எனக் கோரும் பதாகைகளுடன் மாணவர்களும் முன்பள்ளிச் சிறார்களும் நடை பவனியாகச் சென்றனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், கணக்காளர் அல்பேட் குணம், மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள், சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரி, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ-6-9)

## பணிக்கமர்த்தக் கோரும் நீக்கப்பட்ட பணியாளர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.2

வேலையில் இருந்து நீக்கப்பட்ட பணியாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்குமாறு பாதிக்கப்பட்ட தற்காலிக தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுத் தொடக்கம் யாழ். மாநகர சபையால் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளனர். யாழ். மாநகர சபையில் 2003, 2004ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்து பணியாற்றிய பணியாளர்கள் 2008ஆம் ஆண்டு நேர்முகப் பரீட்சை மூலம் நீர்வேலைப்பகுதி, சுகாதாரப் பகுதிகளுக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர். அத்துடன் 2011ஆம் ஆண்டு சுகாதாரப் பணியாளர்களுக்கும், புதிய பணியாளர்களுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. இந்த நிலையில் தற்காலிக பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்று கடந்த 3 வருடங்களாகக் கூறப்பட்டுவந்த நிலையில் நேற்று தொடக்கம் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தொடர்புடைய பகுதிகளுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதனால் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பொருளாதார ரீதியாகப் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். எனவே, மீண்டும் யாழ்.மாநகரசபையில் வேலை வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

## டெங்குக் கட்டுப்பாட்டு கூட்டம் இன்று

நெல்லியடி, ஒக். 2

தற்போதைய சூழ்நிலையில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதால் டெங்கு நுளம்புகளின் பரம்பலைக் கட்டுப்படுத்தும் முகமாகக் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு பிரதேச டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டம் நடைபெறும் என்று கரவெட்டிப் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுபச் செல்வம் அறிவித்துள்ளார். (வ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காயில் இடம்பெற்றது உள, சமூக பிரச்சினை தொடர்பான கருத்தமர்வு

துணுக்காய், ஒக்.2
துணுக்காயில் உள, சமூகப் பிரச்சினைகள் தொடர்பான கருத்தமர்வு இடம்பெற்றுள் ளது. சமூக மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வு துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது. பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு மருத்து வர் சிவதாஸ் தலைமை தாங்கினார்.
இந்த நிகழ்வானது ஆரோக்கியமான சமூ கத்தை உருவாக்குதல் என்ற தொனிப் பொரு ளில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக துணுக்காய்ப் பிரதேச செயலர் கலந்து கொண் டார். துணுக்காய்ப் பிரதேச செய லர் பிரிவுக் குட்பட்ட 20 கிராம அலுவலர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வு வேள்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணை யுடன் மல்லாவி சமூக ஆத ரவு மையத்தின் ஏற் பாட்டில் நடைபெற் றமை குறிப்பிடத் தக்கது. (க-415)

வேலைவாய்ப்பு
VINAYAGAR FURNITURE/SUN FURNY CITY
A-9 Road,Kilinochchi.Tel.021-2285372/Mullaitivu
DAMRO Piyestra
Authorized Agent for Kilinochchi&Mullaitivu Districts
கீழ்வரும் வேலைவாய்ப்புக்குசுயவிபரத்துடன்
தகுதியானவர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
- Show Room Manager – Male – Kili/Mullai
- Sales Representative/Assistant– Male – Kili/Mullai
- Accounts Assistant/Internal Auditor (Male/Female)-Kili

# கொக்குவில் சந்தைக்கு முன்பாக விபத்து ஏற்படும் அபாயம்

## இருமருங்கிலும் நிறுத்தப்படும் வாகனங்களால்

வலி.தென்மேற்கு ஒக்.2
கொக்குவில் பொதுச் சந்தைக்கு முன்பாக காங்கேசன்துறை வீதியில் இரு பக்கங்களிலும் மோட்டார் சைக்கிள், சைக்கிள், ஓட்டோ போன்ற வாகனங்கள் வரிசையாக நிறுத்தப் படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு வருவதுடன் விபத்துக்கள் ஏற்படக் கூடிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது.
எனவே, மக்களின் பாதுகாப்புக் கருதி வாக னங்களை நிறுத்தி வைப்பதற்கான ஒழுங்கு களை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர் களை பொதுமக்கள் கோரியுள்ளனர்.
நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகத்துக் குட்பட்ட கொக்குவில் பொதுச் சந்தை காங் கேசன்துறை வீதிக்கு அருகில் குளப்பிட்டிச் சந்தியில் உள்ள சிறிய கட்டடத்தில் வசதியீனங் கள் மத்தியில் இயங்கி வந்தது.
வியாபாரிகளினதும் பொது மக்களினதும் நலன் கருதியும் இட நெருக்கடியைத் தவிர்க் கும் வகையிலும் பல மில்லியன் ரூபா செல வில் மேற்படி சந்தை நவீன முறையில் அமைக்கப்படுகிறது. இதனால் மக்களின் வசதி கருதி புதிய கட்டடத்துக்கு அருகில் தற்காலிக சந்தை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.
யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைக்கும் சுன்னாகத்தி லுள்ள சந்தைக்கும் இடையில் பிரதான வீதியில் குறித்த சந்தை அமைந்துள்ளதால் பல இடங் களிலிருந்தும் தினமும் மக்கள் தமது தேவை களை பூர்த்தி செய்வதற்காக இந்தச் சந்தைக்கு வருகின்றனர்.
புதிய சந்தைக்கான கட்டட வேலைகள் நடை பெறுவதாலும் தற்காலிக சந்தை அமைக்கப்பட் டுள்ளதாலும் சந்தைக்கு வரும் மக்கள் தமது வாகனங்களை சந்தை வளாகத்துக்குள் நிறுத்த இடமில்லாததால் சந்தைக்கு முன்பாகவுள்ள காங் கேசன்துறை வீதியின் இரு பக்கமும் நிறுத்து வதால் வாகனப் போக்குவரத்துக்கு மட்டுமல்ல பாதசாரிகளின் நடமாட்டத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.
(வ-115)

# கூட்டங்களில் புறக்கணிக்கப்படும் சம்மேளனங்களின் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஒக்.02
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் மாவட்ட மட்டத்திலான விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தாம் புறக்கணிக்கப்பட்டு வரு வதாக விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதி கள் தெரிவித்துள்ளனர்.
விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புக் களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு பிரதேச சபைத் தலைவர் வி.குகராசா தலைமையில் நேற்று முன் தினம் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்றது.
இதன்போது மாவட்ட விவசாய சம்மேளனங் களின் பிர திநிதிகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் விவசாய ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் இதனால் மாவட்ட விவசாயி களின் தேவைகள் குறை நிறைகளைக் கூறமுடியாத நிலைமை காணப்படுவ தாகவும் தெரிவிக்கப்பட்டது.
இதனை உறுதி செய்த விவசாய சம்மேளனங் களின் பிரதி நிதிகள் எதிர்காலத்தில் இடம் பெறும் கூட்டங்களில் தாமும் கலந்து கொள்ளும் வகை யில் அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(க-86)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நீக்கிலாப்பிள்ளை யாகப்பு விக்டோரியா



கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப் பிள்ளை யாகப்பு விக்டோரியா நேற்று முன்தினம் (30.10.2013)திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் தம்பியேல்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், நீக்கிலாப்பிள்ளை யாக ப்புவின் அன்பு மனைவியும், சவுரிமுத்து திரேசாவின் அன்புச் சகோதரியும், அருட்சகோதரி கேமன் ஜோசவ்வின்(திருக்குடும்பக் கன்னியர் சபை) அன்பு அண்ணியும், பீற்றர் அலோசியஸ் ரவீந்திரன் (பிரா ன்ஸ்), மேரிநீற்றா (றஞ்சினி -சில் லாலை), ஜெஸ்மின் நிர்மலா (றாணி- கனடா), கொன்செப்ரா மாலினி (றோகினி- சில்லாலை), மேரி ஆன் யூலியற் (றாஜினி -டென்மார்க்), ஜொவிற்றா றஜனி (றஜனி- மன்னார்), அன்ரனிற்றா (றமனி- யாழ்ப்பாணம்) ஆகி யோரின் அன்புத் தாயும், கலா, அன்ரன் தாஸியஸ், ரவி, குணராஜா, கொட்பிறி பில்லி, பாலமனோகரன், ராஜன் ஆகியோரின் அன்பு மாமியும், சிவா ஜெனிற்றி (கனடா), லின்டா, லிதியா, லொய்க், லெவன்(கனடா), ஸ்ரெ பன்,யோனத்தன், பியோனா (பிரான்ஸ்), அலெக்ஸ், அனிஸ்ரன் (சில்லாலை), ஜெனிபர், மெலனி, நத்தர்ஷா (டென்மார்க்), ஆன்சிலி அருண், கஜீபன், அபிவர்ணா(மன்னார்), மேரியூஜின், மேரிநீற்ரா, நிறோஜன் (சில்லாலை), தர்மிலன்(பிரான்ஸ்), ஷறோன்ஷாலினி, மொறின் ஷாமினி, நிர்மலன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லில்லி ஆனின்(கனடா) பூட்டியும், அவார்.
அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் (05.10.2013) சனிக்கிழமை புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இராசலட்சுமி அப்பாத்துரை



நாவலர் வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும் இல.10, பிரதான வீதி, நாக இலுப்பைக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலட்சுமி அப்பாத்துரை நேற்றுமுன்தினம் 30.09.2013 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் கிருஷ்ணகுமார், ரவீந்திரகுமார், விஜயகுமார், தவேஸ்வரி, நகுலேஸ்வரி, ஜகவிக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் திரேஸ்குமார், சுகர்சினி, மைதிலி, கமலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2013) புதன் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக வவுனியா கந்தபுர மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(சி12526-23-14)
தகவல்
குடும்பத்தினர்

## கதிர்காமு சுப்பிரமணியம்

(புதுக்குடியிருப்பு வாணிப வளாக உரிமையாளர்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா தோணிக்கல் சிவன்கோயிலடியில் வசித்து வந்தவருமான கதிர்காமு சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (30.09.2013) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு- பார்வதி தம்பதியரின் அன்புப் புதல்வ னும் கனகாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகரத்தினம் அமராவதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான காராளசிங்கம், கணபதிப்பிள்ளை, கந்தசாசமி, கனகம்மா மற்றும் மார்க்கண்டு (இளைப்பாறிய தபாலதிபர்- கொழும்பு), சின்னமணி, சின்னப் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரகலா (ஜேர்மனி), சந்திரகாந்தன் (கனடா), சந்திர லீலா (வவுனியா), சந்திரராஜனி (லண்டன்), இலக்கியவரதன் (லண்டன்), அகிலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தினகரன் (ஜேர்மனி), ஆனந்தி (கனடா), கதிர்காமராஜா (புஸ்-வவுனியா வாடி வீடு), சதானந்தன் (லண்டன்), சந்திரிகா (லண்டன்), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயப்பிரதா, சசிகரன், அனித்தா, பிரவீனா, ஜனோஜன், வினோஜன், கௌதமன், நாரணி, கீர்த்தன், பிரம்மா, வர்மன், மாஞ்சனன், மாதுமை, மதுசாரி, சாரினி, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் அனுஸ்கா, மைத்திரியா, அனிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வவுனியா தோனிக்கல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.296, சிவன்கோயிலடி,
வவுனியா.
024 567 0474- 0773382468
(சி12525-23-14)
தகவல்
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



(32234) (10,14)

எமது அன்புக்கும் பெரும்மதிப்புக்குமுரிய

## கந்தையா நடராசா

அவர்கள் இறைபதம் எய்திய செய்திகேட்டு ஆழ்ந்த கவலை யடைகின்றோம்.
அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்திஅடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.
சாந்தி!சாந்தி!! சாந்தி!!

பிள்ளையார் கோயில் வீதி,
திருநெல்வேலி.
சிவஞானசுந்தரம்
குடும்பம்

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
பா.சதீஸ்குமாரின்
அன்பு மனைவி
அமரர் **கீர்த்தனா சதீஸ்குமார்**

சின்னஞ்சிறு சிட்டாய் திரிந்த சித்திரமே
சிதையாத துன்பங்களை எங்கள் இதயங்களில் தூவி
வெகு விரைவில் விண்ணோடு சங்கமித்தது ஏன்!!
நீங்காத பாசங்களும் நேசங்களும் சேர்ந்திருந்த வேளை
தெரிந்திருக்கவில்லை பிரிவின் கொடுமை
காற்றோடு பறந்துவிடும் இளந்தென்றல் ஆற்றாது எங்கள் துயரை
நீங்காத வலிச்சுமையை சுமக்கச் செய்தாய் நீ!!
வாழ்நாள் முழுவதும் கண்ணீர்ச் சுமைகளுடன் நாங்கள்!
மண்ணை விட்டு விண்ணைத் தொட்டுவிட்டாலும்
எமது கண்ணீரும் துன்பமும் முற்றுப்பெறாது!!
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி
யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
G.P.S நண்பர்கள்
கல்வியங்காடு.
(சி12524-23-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிக வீதியமைப்புக்கு பயன்படுத்திய

## கற்கள் அகற்றப்படாததால் தேங்கி நிற்கும் வெள்ளம்

அச்சுவேலி, ஒக். 2
தொண்டமானாறு தடுப்பு அணைக்குச் சமாந்தரமாக அமைக்கப்பட்ட திருவிழாக் காலத்து தற்காலிக வீதியும் வீதியமைக்கப் பயன்படுத்தப் பட்ட கற்களும் உரிய முறையில் அகற்றப்படாமல் உள்ளதால் மாரி காலத்தில் மழை வெள் ளம் வெளியேறுவதில் தடைகள் ஏற்படும். இதனால் குடாநாட் டில் எதிர்பாராத வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாக மக்கள் அச் சம் தெரிவிக்கின்றனர்.

தொண்டமானாறு செல்வச்சந் நிதி ஆலய திருவிழாக் காலத் தில் பொதுமக்கள் ஆலயத்துக் குச் சென்று திரும்புவதற்கு வசதியாக உப்புநீர் தடுப்பு அணைக்குச் சமாந்திரமாக கடந்த 25 வருடங்களுக்குப்

### தொண்டமானாறு பகுதி மக்கள் அச்ச நிலை

பின்னர் கடந்த வருடம் தற் காலிகமாக பாதை அமைக்கப் பட்டது. அது உரிய முறையில் அகற்றப்படாமல் இருந்ததால் மழைவெள்ளம் பாய்ந் தோடு வதில் தடங்கல் ஏற்பட்டதை அடுத்து இந்த வருடம் திரு விழாக் கால வீதி அமைக்க முயன்ற வேளையில் தடை விதிக்கப்பட்டது.

உப்புநீர் தடை அணைக்கு பொறுப்பான திணைக்களம் வீதி அமைப்பதை தடுப்பதை மீறி வீதி அமைக்க வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகம் முயன்றபோது பொலிஸார் தலையிட்டு தடுத்து நிறுத்தினர். அதன் பின்னர் இந்த விவ காரத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அரச அதிபர் தலையிட்டு இரண்டு தரப்பினரிடையே சமரசம் ஏற்படுத்தப்பட்டது. திருவிழா முடிந்த பின்னர் வீதி அமைப்பை அகற்றுவதற்கு வலி.கிழக்கு பிரதேச சபை ஒப்புக் கொண்ட தையடுத்து வீதி அமைக்க அனுமதி வழங்கப்பட்டது.

தடுப்பு அணைக்குச் சமாந்தர மாக அமைக்கப்பட்டுள்ள வீதியில் 20 அடி நீளமான இடை வெளி யில் பாலம் அமைக்கப் பட்டு மிகுதி தூரத்துக்கு கல், மண், மண்மூடைகள் என்பவற் றைப் பயன்படுத்தி வீதி அமைக்கப்பட்டது. தடுப்பு அணையின் நீர்த்தடுப்பு மட்டத்திலிருந்து 3 அடி உயரத்தில் வீதி அமைந்துள்ளது. இதன் மூலம் மாரி காலத்தில் மழை வெள்ளம் கடலுக்குச் செல்ல பெரியளவில் தடை ஏற்படும் எனக் கூறப்படுகிறது. 540 அடி நீளமான தடுப்பு அணை யில் 20 அடி நீளமான 18 வான் கதவுகள் உள்ளன. இந்தக் கதவுகள் மழை வெள்ளத் தின் மற்றும் மழை வீழ்ச்சி அளவுக்கு ஏற்ப திறந்து விடுவ தன் மூலம் மழை வெள்ளம் சமுத் திரத்துக்குச் செல்லும்.

540 நீளத்தில் 20 தவிர ஏனைய 520 தூரத்துக்கு வீதித்தடுப்பு உள்ளதால் உரிய வேக அளவில் மழை வெள்ளம் செல் வதில் தடங்கல் ஏற்படுவதால் தொண்ட மானாற குடாக்கடல் நீரேரியோடு இணைந்த வலி காமம் கிழக்கு தென்மராட்சி வடமராட்சியில் பெருமளவில் வெள்ளம் தேங்கி நிற்கக்கூடிய அபாயநிலை ஏற் படலாம் என அச்சம் தெரி விக்கப்படுகின்றது. வீதி அமைக் கும்போது ஏற்றுக் கொள்ளப் பட்ட சமரசத்துக்கு அமைய வீதி அமைப்பு அகற்றப் படாமல் இருப்பதாலும் மாரி காலம் ஆரம்பமாக உள்ளதாலும் இயல்பு நிலையில் வெள்ளம் பாய்ந்து செல்வதில் தடை ஏற்படும் இடத்து ஏற்படக் கூடிய வெள்ள அபாயம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என விசனம் தெரிவிக்கப்படு கின்றது. (வ-11)



கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் செயற்பட்டு வந்த இராணுவமுகாம் பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டதையடுத்து மக் கள் தத்தமது வீடுகளைச் சீர்செய்வதிலும் பாதுகாப்பு வேலி களை அமைப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (வ-135)



சர்வதேச முதியோர் தினமான நேற்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்துக்குச் சென்று அங்குள்ள முதியோருடன் கலந் துரை யாடி அவர்களுக்குப் பழங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் வழங்கினார். (வ)

## நூல் வெளியீடு

வடமராட்சி, ஒக்.2
நெல்லண்டை பத்திரகாளி அம் மன் ஆலய தரும பரிபாலன சபையின் அனுசரணையுடன் "தும்பளை முருகா" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் 4 ஆம் திகதி மாலை 4 மணிக்கு தும்பளை முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

அருணகிரிநாதர் குருபூசையை யொட்டி வெளியிடப்படும் இந்த நூல் வெளியிட்டு விழா பருத் தித்துறை நகர பிதா சட்டத் தரணி சபா. ரவீந்திரன் தலை மையில் நடைபெறவுள்ளது. இந்த நூலின் வெளியீட்டு ரையை ஓய்வு நிலை ஆசி ரியை திருமதி சிவமலர் சுப்பிரமணியம் நிகழ்த்துவார். இந்த நூலை வ.சி.ஸ்ரீஸ்கந்த ராசா ஆக்கித் தொகுத்துள் ளார். (வ-8)



# தமிழ் வைத்தியர்கள் 37 பேர் நியமனம்

யாழ்.ஆஸ்பத்திரிக்கு முதற்கட்டமாக

யாழ்ப்பாணம், ஒக்.2
யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முதற்கட்டமாக நியமனம் செய்யப்படவுள்ள 37 தமிழ் வைத்தியர்களும் எதிர்வரும் 9 ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்க வுள்ளனர். அவர்கள் அனை வரும் தமிழ் வைத்தியர்கள் என்று அரச மருத்துவ அதிகாரி கள் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து வைத்தியராகப் பணி புரியத் தகுதியுள்ள வைத்தியர் களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப் படவுள்ளன. நியமனக் கடிதங் களைப் பெறும் வைத்தியர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி நிய மனம் வழங்கப்பட்ட வைத்திய சாலைகளில் தமது பணி களைப் பொறுப்பேற்பர்.

அவ்வாறு நியமனம் பெறும் வைத்தியர்களில் தமிழ் வைத்தி யர்கள் 37 பேர் யாழ்.போதனா வுக்கு நியமனம் செய்யப் படவுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது. கடந்த காலங்களைப் போல் அல்லாது இம்முறை யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்படும் அனைத்து வைத்தியர்களும் தமிழ் வைத் தியர்களாகவே உள்ளனர். இதன் மூலமாக நோயாளர் களுக்கு தொடர்பாடல் சுகாதார வசதிகள் இலகுவாக இருக்கும். இது தவிர இரண்டாவது



பட்டியலின்படி 21 வைத்தியர் கள் போதனா வைத்திய சாலைக்கு நியமிக்கப்படவுள்ள னர். அடுத்தமாத இறுதியில் அவர்கள் அங்கு தமது கடமை களைப் பொறுப்பேற்கவுள் ளனர். அவர்களுக்கான நிய மனமும் எதிர்வரும் திங்கட் கிழமை வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் சிறப்புப் பிரிவுகளில் வெற்றிடங்கள் உள்ளதால் அங்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல பல வைத்தியர்கள் ஆர்வத்துடன் விண்ணப் பிக்கின்றனர் என் றும் சங்கம் மேலும் தெரிவித்தது.

இதுதவிர யாழ். போதனா வைத் தியசாலையிலி ருந்து இடமாற் றம் செய்யப்பட்ட 15 வைத்தி யர் களும் யாழ்.மாவட் டத்தில் உள்ள வைத்தியசாலை களில் பணியைப் பொறுப்பேற்க வுள்ளனர். அதன்படி பொறுப் பேற்கவுள்ள வைத்தியர்களின் விவ ரம் வருமாறு:

ஆர்.ராஜசேகரன்- கோப்பாய் வைத்தியாலை, ஏ.காந்த நேசன்- மானிப்பாய் வைத் திய சாலை, கே.உருத்திரன்- கோண் டாவில் வைத்திய சாலை, கே.அற்புதராஜா- அனலை தீவு வைத்திய சாலை, திருமதி எஸ்.ஜெயவதனி- அளவெட்டி வைத்தியசாலை, திருமதி ஜேயாளினி- பண்ணை மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு, பி.ஜெசிதரன், திருமதி சி.சிவ தாசன் ஆகியோர் யாழ். சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை, கே.இளங்கோ ஞானியர்- தெல் லிப்பழை ஆதார வைத்திய சாலை, திருமதி ஆர். காந்த நேசன்- வட்டுக் கோட்டை வைத் தியசாலை, ஏ.பார்த்தீபன்- தெல் லிப்பழை ஆதார வைத்தியசாலை, எஸ்.குணதாசன்- வேலணை வைத்தியசாலை, ரி.கலைச் செல்வி- வல்வெட்டித் துறை வைத்தியசாலை, வி.அச்சுதன்- சாவகச்சேரி ஆதார வைத் தியசாலை, ஜி.தாரணி- யாழ். போதனா வைத்திய சாலை பாலியல் நோய்த் தடுப்பு பிரிவு. இவர்கள் தமது பணிகளைப் பொறுப் பேற்கவுள்ளனர்- என்று சங்கம் தெரிவித்தது. (வ-4)

# அரசிடம் 69 கோரிக்கைகளை முன்வைத்த இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.2
வடக்கு, கிழக்கு மக்களின் பாரம் பரிய இடங்களை அவர்களி டமே மீண்டும் கையளித்தல் வேண்டும். இனப் பிரச்சினைக் குத் தமிழ் பேசும் மக்கள் ஏற் கக்கூடிய தீர்வை முன்வைக்க வேண்டும்.

கல்விக்காக மாணவர்களிட மிருந்து பணம் அறவிடு வதைத் நிறுத்த வேண்டும் உட்பட 69 கோரிக்கை களை இலங்கை ஆசிரியர் சங்கம் அர சிடம் முன்வைத்துள்ளது.

சங்கத்தின் 56 ஆவது மாநாடு திருகோணமலையில் நடை பெற்றது. மாநாட்டின் போதே மேற்கண்ட கோரிக்கைகள் அரசிடம் முன்வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கைகளில் சில வருமாறு:-

பாடசாலைக் கட்டமைப்பை இராணுவ மயமாக்கலையும், அதிபர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதையும் நிறுத்துதல், வடமாகாணப் பாடசாலை களில் சிங்களம் கற்பிக்கும் இராணுவ அதிகாரிகளை உடன் நீக்கிக் கொள்ளல், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல், அமைச்சர் களின் அரசியல் தலையீட்டை நிறுத்துதல், மனித உரிமை ஆணைக் குழுவின் தாம தத்தை தவிர்த்தல்,

பரீட்சை மோசடி, ஒழுங்கீனங் களை உடன் நிறுத்துதல், பரீட்சை மோசடிக்காரர்களுக்கு அதி உச்ச தண்டனை வழங்குதல், அரசியல் இலாபத்துக்காக கொண் டாட்டங்களுடன் நியமனம் வழங்குவதை உடன் நிறுத்து, மக்களின் ஒன்றுகூடல், ஆர்ப்பாட்டம், எதிர்ப்புத் தெரி வித்தலுக்கான உரிமையை உறுதிப்படுத்துதல், மாண வர்களுக்கு கொடுக்கப்படும் போஷாக்கு உணவுக்காக தேவையான நிதியை வழங் குதல்.

வலய, மாகாண கல்வி அமைச்சு, மத்திய அமைச்சு ஆகிய பிரச் சினைகளைத் தீர்க்கும் போது ஆசிரியர்கள் இடைஞ்சலுக்கு உட்படாத வகையில் திட்ட மிட்டு செயற்படுத்தல் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு கடமை தொடர்பான கடிதங்கள், சுற்ற றிக்கைகளை தமிழ் மொழியில் வழங்குதல். தற் போது மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் இடக் கொடுப் பனவுக் கடனைச் சம்பளத்தின் 10 மடங் காகக் கணக்கிட்டு வழங்குதல்.

18 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை நீக்கி, 17 ஆவது சட்டத் திருத்தத்தைச் சக்திமிக்க தாக்குதல், ஊடக சுதந்தி ரத்தை உறுதிப்படுத்துதல், தனியார் பல்கலைக் கழகம் ஊடாக இலவசக் கல்வியை நாசப்படுத்துவதை நிறுத்து தல், கல்வி அமைச்சின் மீளாய்வு குழுவை இயங்கவைத்தல், பலாலி ஆசிரியர் கலாசாலை உட்பட மூடப்பட்டுள்ள ஆசிரிய கல்லூரிகளை இயங்க வைத் தல் ஆகிய கோரிக்கைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள் ளன. (வ-4)

கல்விக்காக மாணவர்களிடமிருந்து பணம் அறவிடுவதை நிறுத்த வேண்டும் உட்பட 69 கோரிக்கை களை இலங்கை ஆசிரியர் சங்கம் அர சிடம் முன்வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறட்டை விட்டுத் தூங்குகிறது இலங்கையிலுள்ள தூதரகம்

## கடுமையாகச் சாடுகின்றார் வைகோ

சென்னை, ஒக்.2
சொந்த நாட்டு மக்களைப் பாதுகாக்கத் தவறிய இந்திய அரசைப் போலவே இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகமும் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கின்றது என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ சாடியுள்ளார்.
இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
தமிழக மீனவர்கள் 1984 ஆம் ஆண்டு முதல் இலங்கைக் கடற்படையால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். இதுவரை 600க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் ஊனமாக்கப்பட்டு அவர்களின் படகுகளும், மீன்பிடி வலைகளும் முற்றிலும் திட்டமிட்டுச் சேதமாக்கப்பட்டு பிழைக்க வழியின்றி முடமாக்கப்பட்டுள்ளனர். வருவாய் ஈட்டும் ஆதாரங்களை அழித்து அவர்களை செயலற்றவர்களாக்கி விட்டது சிங்கள இராணுவம்.
இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்களின் படகுகள் இலங்கை அரசுக்குச் சொந்தமாக்கப்படுகின்றன. சொந்த நாட்டு மக்களைப் பாதுகாத்து அவர்களின் உடைமைகளை முறையாகப் பாதுகாத்து தாய்நாட்டுக்கு அனுப்ப வேண்டிய கடமையில் இருந்து தவறியது. இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம். இந்திய அரசைப் போலவே அதுவும் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருக்கிறது.
சிறிய நாடான இலங்கை தமிழக மீனவர்களைத் தாக்குவதையும் கைது செய்வதையும், சிறையில் அடைக்கப்படுவதையும்அவர்களின்உடைமைகளை சேதப்படுத்துவதையும் கண்டிக்கும் யோக்கியதையோ, விரட்டி அடிக்கும் துணிச்சலோ, எந்த நாட்டை எங்கள் சொந்த நாடென்று நினைக்கிறோமோ அந்த இந்திய நாட்டிடம் இல்லை என்பதைச் சொல்வதற்கே அவமானமாக இருக்கிறது.
தமிழக மீனவர்கள் மீதான இத்தாக்குதலை இலங்கை அரசு தொடரும் பட்சத்தில் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைவிதித்து. தூதரக உறவைத் துண்டித்து தமிழக மீனவர்களைப் பாதுகாக்க முன்வர வேண்டுமெனவும் இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்" என்றுள்ளது.(ற)



## விமானம் தாங்கிக் கப்பலில் தீ விபத்து

புதுடில்லி, ஒக்.2
இந்தியாவின் ஒரே விமானந் தாங்கி போர்க் கப்பலான ஐ.என்.எஸ். விராத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மும்பை கடற் பகுதியில் ஐ.என்.எஸ். விராத் போர்க் கப்பல் கடந்த வாரம் நிறுத்தப்பட்டிருந்தது.
அப்போது அதில் உள்ள அதிகாரிகளின் உணவு விடுதியின் அருகில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அங்கு இருந்த குளிர்சாதன வசதி இயந்திரத்திலேயே தீ பற்றி எரிந்துள்ளது. இச்சம்பவத்தில் யாருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. உடனடியாக தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று கடற்படை தலைமை அலுவகம் தெரிவித்துள்ளது.
அண்மையில் மும்பைக் கடற்படைத் தளத்தில் இந்திய நீர்மூழ்கி ஒன்று தீவிபத்தினால் வெடித்துச் சிதறியது. அதில் இருந்த 18 மாலுமிகளும் உயிரிழந்திருந்தனர். (ற)

## சோனியா போன்று கட்சியை வழிநடத்துவேன்

### லாலுவின் மனைவி

பாட்னா, ஒக்.2
சோனியா காந்தியும், ராகுல் காந்தியும் எப்படி காங்கிரஸ் கட்சியை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறார்களோ, அதே போன்று நானும், எனது மகனும்எங்களதுராஷ்ட்ரீய ஜனதா தளக் கட்சியை வழிநடத்திச் செல்வோம் என்று லாலு பிரசாத் யாதவின் மனைவி ராப்ரி தேவி தெரிவித்துள்ளார்.
கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சித் தலைவர் லாலு பிரசாத் யாதவ் குற்றவாளி என நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்ததை தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
இந்நிலையில் ராஷ்ட்ரீய ஜனதா தளக் கட்சியை யார் தலைமையேற்று வழி நடத்துவார்கள் என ராப்ரி தேவியிடம் கேட்ட போது, அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.
லாலு - ராப்ரி தம்பதிக்கு தேஜ் பிரதாப், தேஜாஸ்வி யாதவ் என 2 மகன்கள் உள்ளனர். இதில் 24 வயதாகும் தேஜாஸ்வி தான் லாலுவின் அரசியல் வாரிசு என அவரது கட்சியினர் கூறுவதால், அவரையே ராப்ரி குறிப்பிட்டுள்ளதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)



பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி தனது பரப்புரைகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தி வருகின்றார். அவருக்கான ஆதரவும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருகின்றது. புதுடில்லியில் பஸ் ஒன்றில் மோடியின் உருவிலான முகமூடிகளை அணிந்து செல்லும் அபிமானிகள்.

## தண்டனையின் பின்னரே முடிவு

கோவை, ஒக்.2
தண்டனை விவரம் அறிவிக்கப்பட்ட பிறகு தான், லாலு பிரசாத் யாதவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிப்பு குறித்து முடிவு எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற சபாநாயகர் மீரா குமார் தெரிவித்தார்.
பீகாரில் நடந்த கால்நடை தீவன ஊழல் வழக்கில் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் குற்றவாளி என்று நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான தண்டனை விவரங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி அறிவிக்கப்படவிருக்கின்றது.
இந்நிலையில் கோவை வந்த நாடாளுமன்ற சபாநாயகர் மீரா குமாரிடம் இதுகுறித்துக் கேட்ட போது, "கால்நடை தீவன ஊழல் வழக்கில் நீதிமன்ற தீர்ப்பை கோவைக்கு வந்த பின்னர் தான் அறிந்தேன். ஆனால் அவர்களுக்கான தண்டனை விவரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. இந்த வழக்கில் லாலு பிரசாத்துக்கான தண்டனை விவரம் அறிவிக்கப்பட்ட பின்னரே இது குறித்து முடிவு செய்யப்படும்' என்று கூறினார். (ற)

# திறமையான பிரதமரே இந்தியாவுக்குத் தேவை

கொல்கத்தா, ஒக்.2
"நாடு, சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் இப்போது தான், மிகப் பெரிய அளவிலான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்த நேரத்தில் நமக்கு தேவை திறமையாக செயற்படக்கூடிய பிரதமர் தானே தவிர பொருளாதார மேதை அல்ல" என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் தேசிய தலைவர் ராஜ்நாத் சிங்.
கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சியில் ஒன்றில் பங்கேற்ற பா.ஜ. தேசிய தலைவரும் அந்த கட்சியின் தேர்தல் பிரசார குழு தலைவருமான ராஜ்நாத் சிங், அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் கூறியதாவது:



"நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இப்போதுதான் மிகப் பெரிய அளவில் பொருளாதார நெருக்கடியை சந்திக்கிறது. இதற்கு ஐ.மு.கூட்டணி அரசின் திறமையின்மை தான் காரணம். பா.ஜ., தலைமையிலான, தே.ஜ. கூட்டணி ஆட்சியின் போது, நாட்டின் பொருளாதாரம், வளர்ச்சி அடைந்திருந்தது. 2004ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான, ஐ.மு. கூட்டணி அரசு பதவியேற்றதும், பொருளாதாரம் தள்ளாடத் ஆரம்பித்து விட்டது.
இந்திய ரூபாவின் மதிப்பு வீழ்ச்சி அடைந்து அமெரிக்க டொலரின் மதிப்பு உயர்ந்து விட்டது. இதுபோன்ற நெருக்கடியான சூழ்நிலையில் திறமையாக செயற்படக் கூடிய பிரதமர் தான் நமக்கு தேவை; பொருளாதார மேதை, தேவையில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)

## வன்முறையற்ற தேசமாக மாறியுள்ளது இலங்கை

### கூறுகின்றார் சுதர்சன நாச்சியப்பன்

சென்னை, ஒக்.2
இலங்கை இப்போது வன்முறை இல்லாத தேசமாக உருவாகியுள்ளது என்று கூறியுள்ளார் இந்திய மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறை இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.
சென்னையில் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"இந்தியா தனது அயல் நாடுகள் மீது பெரும் அக்கறை கொண்டுள்ளது. இந்தியாவை விட சிறிய நாடுகளிடம் நட்புறவையும், வர்த்தகத்தையும் மேற்கொள்ள தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகிறது. இப்போது இலங்கை வன்முறை இல்லாத தேசமாக உருவாகியுள்ளது. மேலும் அங்கு வடக்கு மாகாண தேர்தல் நடைபெற்று ஜனநாயக ரீதியிலான ஆட்சி அமைக் கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கை அரசு தனது ஜனநாயக நிலைப்பாட்டை உலகுக்கு தெரிவித்துள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன்பு வரை இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு சண்டையின் காரணமாக, தமிழகத்துக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருந்துவந்தது. இப்போது அந்த அச்சம் இல்லாததால் வர்த்தகம்மேலும்மேம்படும். இலங்கை நட்பு நாடாக உள்ளதால் அந்நாட்டுடன் போக்குவரத்து திட்டங்களை உருவாக்கவும் மத்திய அரசு பரிசீலித்து வருகிறது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## போர்க்கப்பல் வழங்குவதற்கு எதிராக வழக்கு

சென்னை, ஒக்.2
இலங்கைக்கு போர்க்கப்பல் வழங்க இந்திய அரசுக்கு தடைவிதிக்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பொதுநல வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
இது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், இலங்கைக்கு போர்க்கப்பல் வழங்குவது தமிழர்களின் மனதை புண்படுத்தும் செயலாக அமையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தம்பித்தது அமெரிக்க அரசு

வொஷிங்டன், ஒக்.2
அமெரிக்க அரசின் சேவைகளின் ஒரு பகுதி ஸ்தம்பிதம் அடைந்ததால் அங்கு அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளது. குடியரசுக் கட்சி தலையிலான அந்த நாட்டுப் பிரதிநிதிகள் சபை அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றாததை அடுத்தே அந்த அசாதாரண நிலை

**இந்த ஸ்தம்பித நிலையால் 7 இலட்சத்துக்கும் அதிகமான அமெரிக்க அரச ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறையில் வீட்டுக்கு அனுப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது.**

தோன்றியுள்ளது.
வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமா யின் ஜனாதிபதி பராக் ஒபாமா அறிமுகப்படுத்திய சுகாதார மறுசீரமைப்பு திட்டத்தை தாம தப்படுத்த வேண்டும் என்று குடியரசுக் கட்சி நிபந்தனை முன்வைத்துள்ளது. அது தொடர்பில் இணக்கப்பாடு எட்டுவதற்கு வழங்கப்பட்டிருந்த காலம் முடிவடைந்ததை அடுத்து அமெரிக்க அரசின் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
இந்த நெருக்கடி நிலையால் சுமார் 7 இலட்சத்துக்கும் அதிகமான அமெரிக்க அரச ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறையில் அனுப்பப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பாட்டாலும் அவர்களுக்கான சம்பளம் மீளச் செலுத்தப்படும் என்பதில் எந்தவித உறுதிப்பாடும் இல்லை என்றும் கூறப்படுகின்றது. (ற)

## அதிர்கின்றது ஈராக்
### தொடர் குண்டு வெடிப்புகளால் 55 பேர் சாவு

பாக்தாக், ஒக்.2
ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தொடர் கார்குண்டு வெடிப்புகளில் 55 பேர் உயிரிழந்துள்ளனர். 120க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். ஈராக் தலைநகர் பாக்தாத் மாகாண எல்லைக்கு உள்பட்ட 9 இடங்களில் பயங்கரவாதிகள் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர். பாக்தாத்தின் வடக்கு பகுதியில் அதிக அளவில் வசிக்கும் ஷியா பிரிவினரைக் குறிவைத்து 6 இடங்களிலும் சன்னிப்பிரிவினர் வசிக்கும் 2 இடங்களிலும் என 9 இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.
குறித்த தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமைகோரவில்லை என்று கூறியுள்ள பொலிஸார், தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் தெரிவித்தனர்.
ஈராக்கில் அண்மைக்காலமாக இவ்வாறான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. அதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவே அச்சப்படும் நிலை அங்கு தோன்றியுள்ளது. (ற)

## கம்போடியா: வெள்ளத்தால் 30 பேர் சாவு

போனம்பென், ஒக்.2
கம்போடியாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் சிக்கி 30க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். 100க்கும் அதிகமானவர்கள் காணாமற் போயுள்ளனர்.
கம்போடியாவில் கடந்த இரண்டு வாரங்களாகக் கடும் மழை பெய்து வருகின்றது. அதனால் தாழ்வான பகுதிகளின் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளப் பெருக்கால் 9 மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
கடும் மழை காரணமாக அங்குள்ள மீகாங் நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. அதன் கரையோரப் பகுதிகளில் வசித்து வந்தவர்களில் 30க்கும் அதிகமானவர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. வெள்ளப் பெருக்கின் காரணமாக 67 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் 9 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கம்போடிய அரசு கூறுகின்றது.
அதேவேளை, இருவாரமாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஒரு லட்சம் ஹெக்ரெயருக்கும் அதிகமான விளைச்சல் நிலங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ற)

# ஈரான் பேச்சில் மயங்காதீர்கள்
## அமெரிக்காவை வலியுறுத்துகின்றது இஸ்ரேல்



நியூயோர்க், ஒக்.2
ஈரானின் பேச்சில் மயங்கி விடாது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு.
அமெரிக்க ஜனாதிபதியுடன் ஈரான் ஜனாதிபதி ரௌஹானி தொலைபேசியூடாகக் கலந்துரையாடியுள்ள நிலையிலேயே பெஞ்சமின் நெதன்யாகு இவ்வாறு எச்சரித்துள்ளார்.
"ஈரான் ஜனாதிபதி இனிக்க இனிக்கப் பேசுகின்றார். எனினும் பேசிக்கொண்டே கழுத்தை அறுக்கும் ஈரானின் தந்திரத்தில் அமெரிக்கா மயங்கிவிடக் கூடாது" என்று கூறியுள்ளார் அவர்.
அதேவேளை, தமது ஆட்சிக் காலத்தில் ஈரானில் அணு ஆயுத உற்பத்திக்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று ஈரான் ஜனாதிபதி றொஹானி உறுதி வழங்கியுள்ளார். அதையடுத்து அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவுகள் புத்துயிர் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 30 வருடங்களாக ஈரான் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகளை அமெரிக்க விலக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. இதேவேளை, அமெரிக்காவின் நட்பு நாடான இஸ்ரேல் ஈரானுடனான அமெரிக்காவின் சமாதான முனைப்புகளுக்கு ஆரம்பம் முதலே எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. (ற)



## விண்ணுக்குச் செலுத்தப்பட்டது புரோட்டோன்- எம்'

பைனானூர், ஒக்.2
ரஷ்யாவின் 'புரோட்டோன்-எம்' ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.
இந்த ரொக்கெட் ஐரோப்பிய நாடுகளின் தொலைத்தொடர்பு சேவைகளுக்கான செயற்கைக் கோளைப் பூமியின் சுற்று வட்டத்தில் நிலைநிறுத்தவுள்ளது.
இந்தக் ரொக்கட் கஜகஸ்தான் நாட்டில் உள்ள பைகானூர் விண்வெளி மையத்தில் இருந்து நேற்று முன்தினம்

**கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி ரஷ்யா செலுத்திய இதே போன்ற ராக்கெட் தொழில்நுட்ப கோளாறு காரணமாக வெடித்துச் சிதறியது. அதையடுத்து ஜூலை 21ஆம் திகதி செலுத்தப்படவிருந்த 'புரட்டோன் - எம்' மூன்று மாதங்களுக்குப் பின்பு ஏவப்பட்டுள்ளது.**

வெற்றிகரமாக விண்ணுக்குச் செலுத்தப்பட்டது.
கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவின் ரொக்கெட் செயற்திட்டம் ஒன்று தோல்வியில் முடிவடைந்து அது வெடித்துச் சிதறியது. தொழில்நுட்பக் குறைபாடு காரணமாகவே அந்தத் திட்டம் தோல்வியில் முடிவடைந்தது. அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட 'புரோட்டோன்-எம்' திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. (ற)

## நியூஸியில் நிலநடுக்கம்

கெர்மடெக், ஒக்.2
நியூஸிலாந்தின் வட கிழக்குப் பகுதியில் உள்ள கெர்மடெக் தீவுகளில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 6.7 ஆகப் பதிவாகியுள்ள இந்த நில நடுக்கம் 34 கிலோமீற்றர் ஆழத்தில் நிலைகொண்டிருந்தது.
குறித்த தீவில் மக்கள் வசிப்பதில்லை என்பதால் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. எனினும் அந்தப் பகுதியில் சுனாமித் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் எச்சரித்துள்ளது. (ற)

# கடத்திய அம்புலன்ஸில் படுத்திருந்த நோயாளி
## ஆர்வக் கோளாறு காரணமாக மாட்டிக் கொண்டான் கார்த் திருடன்

நியூயோர்க், ஒக்.2
ஆர்வக் கோளாறால் நோயாளியுடன் சேர்த்து அம்புலன்ஸைத் திருடிய கார்த் திருடன் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டான். இந்தச் சம்பவம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நடந்துள்ளது.
புளோரிடா மாகாணத்தைச் சேர்ந்தவன் 25 வயதுடைய பிரியன் திமோதி காடா ஜூனியர். கார்களைத் திருடுவதில் பலே கில்லாடி இவன். பொலிஸாருக்குப் பலமுறை 'டிமிக்கி' கொடுத்துக் தனது கைவரிசையைக் கச்சிதமாகக் காட்டி வந்தான். அதனால் புளோரிடாப் பொலிஸாருக்கு திமோதி தீராத தலைவலி.
நேற்றுமுன்தினம் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த திமோதி ஒரு வீதிச் சமிக்ஞை அருகே நடந்து சென்று கொண்டிருந்தான். வீதியில் சமிக்ஞைக்காக வரிசையாக வாகனங்கள் காத்திருந்தன. அதில் அம்புலன்ஸும் நின்று கொண்டிருந்தது. அதைக் கண்ட திமோதிக்கு விபரீத ஆசை ஒன்று ஏற்பட்டது. எப்போதும் கார்களைத் திருடுவதை விட்டுவிட்டு இன்று அம்புலன்ஸைத் திருடித்தான் பார்ப்போமே என்று காரியத்தில் இறங்கினான் திமோதி.
சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்ததும் அம்புலன்ஸ் புறப்படும் சமயம் துப்பாக்கியுடன் அம்புலன்ஸுக்குள் பாய்ந்தான் திமோதி. சாரதியை மிரட்டித் தள்ளிவிட்டு அம்புலன்ஸுடன் பறக்கத் தொடங்கினான்.
சற்று நேரத்தின் பின்னர்தான் "பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறியமை" திமோதிக்குப் புரிந்தது. ஏனெனில் அம்புலன்ஸுன் பின்புறம் நோயாளி ஒருவர் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார்.
காரைத் திருடினாலே விடாது விரட்டும் பொலிஸார், தான் அம்புலன்ஸோடு சேர்த்து நோயாளியையும் கடத்தியிருப்பதை அறிந்தால் சும்மா விடமாட்டார்கள் என்று திமோதிக்குத் தெரியும். என்ன செய்வது என்று தெரியாது ஏதோ ஓர் திசையில் அம்புலன்ஸோடு பறந்தான் அவன்.
அவன் எதிர்பார்த்தபடியே கொஞ்ச நேரத்தில் தலைக்கு மேலே வட்டமடிக்கத் தொடங்கியது பொலிஸாரின் ரோந்து ஹெலிகொப்டர். அதைத் தொடர்ந்து அவதானித்த படி

**அம்புலன்ஸைத் திருடிய சற்று நேரத்தின் பின்னர் தான் "பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறியமை" திமோதிக்குப் புரிந்தது.**

அம்பு லன்ஸை விரட்டத் தொடங் கின பொலிஸாரின் கார்கள். ஓடி ஓடிக் களைத்துப் போன திமோதி ஒரு கட்டத்தில் அம்புலன்ஸை நிறுத்திவிட்டு பொலிஸார் தன்னைச் சுட்டு விடுவார்களோ என்ற பயத்தில் நோயாளிக்குப் பக்கத்தில் படுத்துவிட் டான். பொலிஸார் அவனைச் சுற்றி வளைத்துக் கைது செய்தனர். திமோதியின் தாறுமாறான ஓட்டத்தால் பின்னால் இருந்த நோயாளிக்கு சிறிது காயம் ஏற்பட்டுள்ளதாம். இனிமேல் வாழ்க்கையில் அம்புலன்ஸை நினைத்தும் பார்க்காத அளவுக்கு தற்போது பொலிஸாரின் கடும் 'கவனிப்பில்' இருக்கின்றானாம் திமோதி. (ற)

# பயனுள்ளதாக அமைந்தன பேச்சுக்கள்
## இந்தியப் பிரதமருடனான கலந்துரையாடல் குறித்து பாக்.பிரதமர் கருத்து



நியூயோர்க், ஒக்.2
இந்தியப் பிரதமருடனான பேச்சுக்கள் பயனுள்ளனவாக அமைந்தன என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் கருத்துத் தெரிவித்துள்ளார்.
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்பும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே நவாஸ் செரிப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனான பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமானவை. இரு நாடுகளுக்கும் இடையே இயல்பு நிலை திரும்ப, பேச்சுக்களை முன்னெடுத்து செல்வதுதான் ஒரே வழி. பயங்கரவாதம் என்பது பாகிஸ்தானுடன் நின்றுவிடவில்லை. மற்ற நாடுகளும் அந்தச் சவாலை சந்தித்து வருகின்றன. காஷ்மீர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப் பட்டது. பலுசிஸ்தான் பகுதியில் இடம்பெறும் இந்தியாவின் அத்துமீறல்கள் தொடர்பாக மன்மோகன் சிங்கிடம் சுட்டிக்காட்டப்பட்டது" என்று தெரிவித்துள்ளார் நவாஸ் செரிப். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரின் அனுபவமும் இளையோரின் ஆற்றலும் ஒன்று சேர வேண்டும்

யாழ்ப்பாணம், ஒக். 2

"முதியோர்களின் அனுபவ அறிவும், இளையோரின் ஆற்றலும் ஒன்று கூடும் போது வினைத்திறனான செயற்பாடுகள் கூடுதலாக இருக்கும். அதனூடாக சமூகத்துக்கு நல்ல விடயங்களை அளிக்க முடியும்".

என நீராவியடி சைவ பரிபாலனசபை மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச முதியோர், சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அ.இ.ஞானசோதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்வேறு நாடுகளும் முதியவர்களை வெவ்வேறு வயதுப் பிரிவினராக வகைப்படுத்தியுள்ளன. எங்களுடைய நாட்டிலே 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் முதியவர்கள் என்று கணிக்கப்படுகின்றனர். நாங்கள் அனுபவம், அறிவு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதனூடாக முதுமை அடைகின்றோம். முதுமை அடைதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இதை சிறந்ததாக எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக ஆக்க முயல வேண்டும். உற்பத்தித் திறனைக் கொடுக்கக்கூடிய நிலையில் மற்றவர்களில் தங்கியிருக்காமல் எமது வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும். குடிப் பழக்கம்,



புகைப்பழக்கம் இருந்தால் அவற்றை நீக்கிவிட வேண்டும். இதைவிட உடற்பயிற்சி என்பது முக்கியம். சமூகத்திலே அவர்களின் அனுபவங்களையும், அறிவுரைகளையும் பங்கெடுக்கச் செய்ய வேண்டும். அவர்களின் அறிவுரைகளைக் கேட்டுச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இளைய சமுதாயத்தினர் முதிய சமுதாயத்தை தங்களது கூட்டங்களில் பங்குபற்றச் செய்து இணைத்துச் செயற்பட வேண்டும்.

குடும்பங்களில் சமூகத்தில் பராமரிக்கப்படும் தன்மை. குறிப்பாக முதியோர் இல்லங்களில் விடல் சில சமயங்களில் நன்று. ஆனால் முதியோர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். அடித்துத் துன்புறுத்தல், வார்த்தைகளால் நிந்தித்தல் என்பன உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சுதந்திரம் என்பது மிகக் குறைவு. எனவே அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அவர்களின் பழைய நினைவுகளை மீட்டெடுத்து அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருத்தல் வேண்டும்.

இதேபோன்று சிறுவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு எதிரான வன்முறைகள் உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவதுடன் மனவடுவாக மாறி அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும். எனவே பெற்றோர்கள் சிறுவர்களுக்கு எது நல்ல தொடுகை, எது கூடாத தொடுகை என்பதனை சொல்லிக் கொடுக்க வேண்டும். இதுவே அவர்களைப் பாதுகாக்கும். எனவே உள நலனைப் பாதிக்கும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அத்துடன் அன்பு வார்த்தைகளினூடான பரிவு என்பவற்றை பெற்றோர் அவர்களுக்கு வழங்க வேண்டும். அவர்களுடன் இணைந்து கலந்துரையாட வேண்டும். இதுவே உள வளர்ச்சிக்கு உதவும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-ரி)

## சேவை நேரம் நீடிப்பு

மக்கள் வங்கியின் யாழ்-ஸ்ரான்லி வீதிக் கிளை வாடிக்கையாளர்களின் நலன் கருதி ஒக்ரோபர் 1 ஆம் திகதியில் இருந்து, மாலை 6 மணிவரை தனது சேவை நேரத்தினை நீடித்துள்ளது. என்று கிளை முகாமையாளர் சி.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (ந)

## புனரமைக்கப்படாத வீதியால் மக்களுக்குச் சிரமங்கள்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊரியான் கிராமத்தில் அமைந்துள்ள பழைய கண்டி வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஊரியான் கிராமத்தின் முருகானந்தாக் கல்லூரிச் சந்தியில் இருந்து கோரக்கன்கட்டு தட்டுவன் கொட்டி வரை செல்லும் பழைய கண்டி வீதி கடந்த 2011 ஆம் ஆண்டு புனரமைப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது. புனரமைப்புப் பணிகள் அந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் குறித்த வீதியின், முருகானந்தா சந்தியில் இருந்து கோரக்கன்கட்டு சந்தி வரையான 2.5 கிலோ மீற்றர் நீளமான பகுதிக்கு மாத்திரம் கொங்கிறீட் இடப்பட்டது. ஆனால் அதன் சில பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. குறித்த வீதியின் இரு மருங்கிலும் தலா ஓர் அடி அகலத்துக்கு கிரவல் இடவேண்டிய தேவை உள்ள போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை. மேலும் புனரமைப்புப் பணிகளும் பூர்த்தியாகாத நிலையில் காணப்படுவதால் விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

எனவே அதிகாரிகள் குறித்த வீதியை உரிய முறையில் புனரமைப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



**கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

பதிவு இலக்கம்: ஜே/1572 — பதிவு திகதி: 01.03.1972

**கிளை முகாமையாளர் 208/16, விற்பனையாளர் 308/17, சாரதி 312/15 ஆகிய பதவி வெற்றிடங்களுக்கான வெளிவாரியாக நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல்.**

01. கிளை முகாமையாளர்: 208/16
பதவி வெற்றிடம்:02
சம்பள அளவுத் திட்டம்: 9200-70x10-75x10-10650
அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகைமை:
(அ)கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
(ஆ)கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

02. விற்பனையாளர்: 308/17
பதவி வெற்றிடம்:02
சம்பள அளவுத் திட்டம்: 8950-65x10-70x10-10300
அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகைமை:
(அ)கூட்டுறவுப் பணியாளர் கனிஸ்ர தரச் சான்றிதழ்.
அல்லது
(ஆ) எட்டாம் வகுப்புச்சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்

03. சாரதி: 312/15
பதவி வெற்றிடம்:01
சம்பள அளவுத் திட்டம்: 9450-75x10-80x10-11000
அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகைமை:
(அ) 05 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் கார் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

குறிப்பு:
01. விண்ணப்ப முடிவுதிகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச்சங்க பணியாளர் களுக்கு வயதெல்லை விலக்கழிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச்சங்க பணியா ளர்கள் தாங்கள் கடமைபுரியும் கூட்டுறவுச்சங்கத்தின் ஊடாக விண்ணப் பித்தல் வேண்டும். கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் தமது கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படாது விடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
02. தகுதியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை பற்றி விண்ணப் பதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.
03. சங்கம் கோரும் பிணைப்பணத்தினை ரொக்கமாக செலுத்துவதுடன் சங்கம் கோரும் ஆதனப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.
04. **விண்ணப்பமுடிவுதிகதி: 15.10.2013**
05. சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகளையும் இணைத்து பதிவுத்தபாலில் **"பொது முகாமையாளர்" கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம். தாவடிச்சந்தி** என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பொது முகாமையாளர்.**

(சி/12517)(4.8.3)

**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

27/23, ஈச்சமோட்டை வீதி, துரையப்பா லேன் யாழ்ப்பாணத்தில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 905 0213 (32212) (7.6.3)

**100 ஆவது பிறந்த தின் வாழ்த்து**

வட்டு, வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த
வீரகத்தி - வள்ளியம்மை
தம்பதியரின் செல்வப் புதல்வியும்
சீமான் மு.அரியகுட்டி அவர்களின்
அன்பு மனைவியுமாகிய
**செல்லம்மா**
இன்று (02.10.2013) புதன்கிழமை
தனது 100 ஆவது பிறந்த தினத்தை கற்பகப்பிள்ளையார் கோயிலடியிலுள்ள தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை மேலும் பல்லாண்டு காலம்வாழ்கவென வாழ்த்தும் செல்லங்கள்




மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்.

(32190)(11.6.3)

**பெண் வேலையாள் தேவை**

கோப்பாய் பகுதியில் வீட்டு வேலை செய்யவும் சிற்றுண்டி வகைகள் (வடை, றோள்) தயாரிக்கவும். பெண் வேலையாள் தேவை. சம்பளம் நாள் ஒன்றுக்கு 500/=

(32199) (6.3.11) தொடர்பு: 077 548 4438

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை சந்திக்கு அருகில் K.K.S வீதியில் நிலப்பரப்பு ¾ உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 372 8357 (32200) (6.3.11)

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972 இல் பிறந்த ஆசிரியையாகப் பணிபுரியும் மணமகளுக்குப் பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கின்றோம். கிறிஸ்தவம் அல்லது றோமன்கத்தோலிக்கம் விரும்பத்தக்கது. (32195) (7.6.3)

தொடர்பு: 011 720 9548, 077 827 6409

**காணி விற்பனைக்கு**

உடுவில் ஞானப்பிரகாசம் வீதியில் 2 பரப்புக் காணி மற்றும் அதே இடத்தில் அமைந்த வீட்டுடன் ஐந்து துண்டாகப் பிரிக்கப்பட்ட காணி உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 868 9782 (32198) (7.6.3)

**உயர்தர பரீட்சைகளின் பின்**

**தொழில்சார் தகைமை**

**Diploma in Computer Hardware & Networking**
Duration 3 Months

**Certificate in Laptop Repairs & Services**
Duration 2 Months

**CSC-ASIAN COMPUTER EDUCATION** Mega Special Offer
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 021 2225677 | சாவகச்சேரி 021 2270267 |
| கிளிநொச்சி 021 2283925 | வவுனியா 024 2226050 |

**பெண் உதவியாளர் தேவை**

இல.72, இராமநாதன் வீதியில் இயங்கும் ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகத்திற்கு (மிலேனியம் அருகில்) தமிழ் கணினி தட்டச்சுத் தெரிந்த பெண் உதவியாளர் ஒருவர் தேவை. இன்று (02.10.2013) பி.ப 2.00 மணிக்குப் பின் நேரில் வரவும்.

தொடர்பு: 077 703 3729 (32157) (4.3.8)

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு ராம கிருஸ்ண வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 4857
பாலகிருஸ்ணன் (32197)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோலையாகிறது வல்வெட்டித்துறை

## மரநடுகைத் திட்டம் ஆரம்பம்



வடமராட்சி, ஒக். 2

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள பிரதேசங்களில் வீதிகளின் இரு மருங்கிலும் மற்றும் பொது இடங்களிலும் குளிர்நிழல் தரக்கூடிய மரநடுகைத் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரஜைகள் குழுவின் முன்னாள் தலைவரான ச.செல்வேந்திரா மற்றும் நில அளவை யாளர் க.குமரகுரு குடும்பத் தினரின் அனுசரணையில் வல் வெட்டித்துறை நகராட்சி மன்றத் தின் வடிவமைப்புக்கு அமைய மர நடுகைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான அனு மதி நகராட்சிமன்றத்தால் வழங்கப் பட்டது.

இதன் முதல்கட்டமாக கம்பிக்கூடுகள் அமைக்கப்பட்ட நிழல் தரு மரங்கள் வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து பஸ் நிலையம் வரை முக்கிய இடங்களில் நடப்பட்டன.

இதன் அடுத்த கட்டமாக வல்வெட்டித்துறை சிவன் கோயிலுக்கு முன்பாகச் செல்லும், சிவபுர வீதியில் சுமார் இருபது மரங்களும், தீருவில் பொதுப் பூங்காவில் இருபது மரங்களும் நடப்படவுள்ளன என்று வல்வெட்டித்துறை நகர பிதா ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார். குளிர் நிழல் தரும் மரங்களை நடுவதன் மூலம் பூகோள வெப்பநிலை உயர்வைத் தடுப்பதுடன் , மழை வீழ்ச்சியை அதிகரிக்கவைத்து நிலக் கீழ் நீரைச் சேமிக்க முடியும் என்றும் சூழல் பாதுகாப்பை மேம் படுத்த மர நடுகைக்கான தமது அனுசரணைகளை வழங்க முன்வருமாறும் வல்வை மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ)

# பொது நீர்க்கம்பம் விஷமிகளால் சேதம்

கொழும்புத்துறை, ஒக்.2

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியில் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்த பொது நீர்க்கம்பமொன்று விஷமிகளால் அடியோடு உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உடைக்கப்பட்டு அடியோடு பெயர்க்கப்பட்ட நீர்க்கம்பத்தின் பகுதிகள் அருகில் உள்ள பாழடைந்த கிணற்றில் வீசப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய யாழ்.மாநகர சபையால் அமைக்கப்பட்டிருந்த பொது நீர்க்கம்பமே இவ்வாறு விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சமூகவிரோத அடாவடிச் செயற்பாட்டினால் அந்தப் பகுதியில் உள்ள பல குடும்பங்கள் குடிதண்ணீர் பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தூர இடங்களுக்குச் சென்று தண்ணீரைப் பெற்றுக் கொள்ளும்போது சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேபகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் வேறொரு பொது நீர்க் கம்பமும் விஷமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

# வரணி பொது நூலகத்தால் வீடுகளில் நூல்கள் சேகரிப்பு



தென்மராட்சி, ஒக்.2

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலக அபிவிருத்திச் சபையினர் தேசிய வாசிப்பு தினத்தை முன்னிட்டு வரணி பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று நூல்களை அன்பளிப்பாகப் பெறும் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளனர்.

நூலக அபிவிருத்தி கருதி வருடா வருடம் அபிவிருத்திச் சபையினர் வீடு வீடாகச் சென்று நூல்கள் அன்பளிப்பாகப் பெறப்படுவதுடன் பொது மக்களால் வழங்கப்படும் நிதி அன்பளிப்புகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு கிடைக்கும் நிதிக்கு நூல்கள் கொள்வனவு செய்து நூலகத்துக்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நூலக அபிவிருத்திச் சபையினால் நூலக வளாகத்தில் சிரமதானம் மேற்கொள்ளல், நூலகத்தைத் தூய்மைப்படுத்தல்,மாணவர்கள் வாசகர்களிடையே போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கல் போன்றவற்றையும் மேற்கொள்ள வுள்ளனர்.

மாதாந்தம் முன்பள்ளிச் சிறார்களின் கதை சொல்லும் நேரம் நிகழ்வை நூலகத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# 22 தொழிற்சாலைகள் நிறுவும் பணி தீவிரம்

## அச்சுவேலிப் பேட்டையில்

அச்சுவேலி, ஒக்.2

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் முதலாம் கட்டத்தில் 22 தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. முதலாம் கட்ட தொழிற்சாலைகளுக்கான உட்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் 25 ஏக்கர் நிலப்பரப்பு பயன்படுத்தப்படவுள்ளது. அடுத்த கட்ட தொழிற்சாலை நிர்மாணப் பணிகளுக்கு மேலும் 35 ஏக்கர் நிலப் பரப்பு தயார்நிலையில் உள்ளது.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் கட்டுமானப் பணிக்கு 65 ஏக்கர் விஸ்தீரணமான பிரதேசம் பயன்படுத்தப்படவுள்ளது. இதில் முதற் கட்ட தொழிற்சாலை கட்டுமானப் பணிக்கு 25 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படவுள்ளது.

தொழிற்சாலை அமைப்பதற்கு 25 மேற்பட்ட தொழில் அதிபர்கள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் முதற்கட்டமாக 22 பேருக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

தொழிற்சாலை கட்டுமானப் பணிக்கு குறைந்தது 40 பேர்ச் அளவுகொண்ட துண்டமும் கூடியளவாக 160 பேர்ச் அளவு கொண்ட துண்டமும் வழங்கப்படவுள்ளன. தொழில் அதிபர்கள் 40 பேர்ச் துண்டத்துக்கு மேல் விரும்பிய அளவு துண்டங்களை பெற்று அதில் தொழிற்சாலைகளை நிறுவிக் கொள்ளலாம்.



தொழிற்சாலைகளுக்கான நீர் விநியோகம் மின்சார விநியோகம், உள்ளக வீதி அமைப்பு, பாதுகாப்பு போன்ற உட்கட்டுமான வசதிகள் அனைத்து கைத்தொழிற்பேட்டைக்கு பொறுப் பான மத்திய நிர் வாக கட்டமைப்பால் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

அடுத்த மாதம் தொழிற்சாலை கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகலாம் என கூறப்படுகின்றது. அந்த வகையில் அடுத்த வருடம் தொழிற் சாலைகள் செயற்படலாம். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதியை கூடுமான அளவு வழங்கக் கூடிய தொழில் அதிபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

தற்போது தொழிற்சாலை நிறுவும் இடங்கள் சுத்தமாக்கப்பட்டு உள்ளக வீதி அமைப்பு, பெரியளவிலான நீர்தாங்கி நிர்மாணம் மற்றும் மத்திய நிர்வாக மையத்துக்கான கட்டுமானப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (வ-11)

# அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

## கொழும்புத்துறையில்

கொழும்புத்துறை, ஒக்.2

கொழும்புத்துறைப் பகுதியில் நாளுக்கு நாள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதால் பொதுமக்கள் மிகுந்த அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு எழிலூர்ப் பகுதியில் உள்ள பலசரக்குக் கடை உடைக்கப்பட்டு அங்கிருந்து பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

பால்மா, மீன்ரின், 'கிற்காட்' மற்றும் பெறுமதியான பொருள்களை திருடியுள்ளனர். வசதி குறைந்த பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வந்த கடையிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

அதேவேளை கடந்த வாரம் ஆனந்தன்வடலி வீதியில் உள்ள கடையொன்றின் கூரைச் சீற்றைக் கழற்றி திருட முயன்றபோது சீற் ஆணி கடையின் உள்ளே படுத்திருந்த கடைக்காரனின் மேல் விழவே அவர் கூக்குரலிட்ட போது திருடர்கள் ஓடி மறைந்த சம்பவமொன்றும் இடம்பெற்றுள்ளது.

சில்லறைக்கடைகளில் இடம் பெறும் இத்தகைய திருட்டுக்களில் பாரம் குறைந்த பெறுமதி கூடிய பொருள்களே திருடர்களால் எடுத்துச் செல்லப்படுவதாக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ-135)

# பால் பொருள் உற்பத்தியை அதிகரிக்க தேவை இயந்திரம்

யாழ்ப்பாணஒம், ஒக்.2

பால் பொருள்களை பெரிய அளவில் உற்பத்தி செய்யக்கூடியதாக இயந்திர சாதனங்களை வழங்குமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம், யாழ். அரச அதிபர் ஊடாக மாகாண ஆளுநருக்கு மனு அனுப்பியுள்ளது.

பெரிய அளவில் 'ரொபி, இனிப்பு' உற்பத்தி செய்யக் கூடியதாகவும், பொதி செய்யக் கூடியதாகவும் இயந்திரங்களை வழங்குவதுடன் இரண்டு கூலர் வாகனங்கள், ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கான பெரிய வாகனங்களில் பால் எடுத்து வரத் தேவைப்படும் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குமாறும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சாதனங்கள் கிடைக்கும் பட்சத்தில் உற்பத்திகளை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும் என்பதுடன் பாதுகாப்பாக பாலை வைத்திருக்கக் கூடியதாகவும் இருக்கும் எனவும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் (யாழ்கோ) பொது முகாமையாளர் திருமதி தயாளினி தெரிவித்தார். (வ-7)

# வடமாகாண சபைக்குத் தெரிவான உறுப்பினர்களை பாராட்டி தீர்மானம்

வடமராட்சி, ஒக்.2

வல்வெட்டித்துறை நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினராகக் கடமையாற்றி வடக்கு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கும் வடக்கு மாகாண சபைக்குத் தெரிவான ஏனைய உறுப்பினர்களுக்கும் வல்வெட்டித்துறை நகரசபையால் பாராட்டுத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

தீர்மானம் தொடர்பாக சபைத் தலைவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தச் சபையின் கௌரவ உறுப்பினராகச் சேவையாற்றிய எம்.கே.சிவாஜிலிங்கம் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் மூலம் மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமையையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதுடன் மாகாண சபையினூடாக எமது இனத்துக்கும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை

> எமது நகர சபை உறுப்பினர்கள் பேதங் களைப் புறந்தள்ளிவிட்டு எமது நகரத்தின் வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக் காகவும் ஒன்றிணைந்து பாடுபட மேலும் கடு மையாக உழைக்க முன்வர வேண்டும்.

நிலைநாட்டுவதற்கும் எமது நகரசபைக்கும் தன்னால் முடிந்த சேவைகளைத் தொடர்ந்தும் ஆற்ற வேண்டும்.

அதேவேளை கடந்த தேர்தலில் எமது உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தாம் சார்ந்த கட்சிக்காகவும் தமது விருப்பு வேட்பாளர்களுக்காகவும் உழைத்து இந்த வெற்றிகளில் பாடுபட்டாலும் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான பேதங்களைப் புறந்தள்ளிவிட்டு எமது நகரத்தின் வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் ஒன்றிணைந்து பாடுபட மேலும் கடுமையாக உழைக்கமுன்வர வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக எமது சபையின் உறுப்பினராகப் பல்வேறு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வந்த சிவாஜிலிங்கம் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை ஊடாகத் தன்னால் முடிந்த ஆதரவையும் உதவிகளையும் வழங்க வேண்டும். இந்தச் சபையின் சார்பிலும் வல்வெட்டித்துறை நகர மக்களின் சார்பிலும் அவரை வாழ்த்துகின்றோம் எனத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அவரைப் பாராட்டும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (வ-8)

## வீமன்காமம், கொல்லங்கலட்டி பகுதி

# மாணவர் வசதிகருதி மினிபஸ் சேவை

வலி.வடக்கு, ஒக்.2

மாவைகலட்டி, வீமன்காமம், கொல்லங்கலட்டி பகுதிகளில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்களின் நன்மை கருதி காங்கேசன்துறை வீதி வழியாக இடம்பெறும் தனியார் மினிபஸ் சேவையை காலை, மதியம், பிற்பகல் வேளைகளில் இந்தப் பகுதியூடாக நடத்த தனியார் மினிபஸ் சங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக தனியார் மினிபஸ் சங்கத்துடன் கலந்துரையாடியதன் பெயரில் குறித்த சேவையை மேற்கொள்ள தனியார் மினிபஸ் சங்கம் முன்வந்துள்ளது.

மக்கள் மீள்குடியமர்ந்த இந்தப் பகுதியில் உள்ள பாடசாலை செல்லும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுவதால் காங்கேசன்துறைப் பொலிஸாரும் தனியார் மினிபஸ் சங்கமும் கலந்துரையாடியதன் பெயரில் சங்கம் குறித்த பஸ் சேவையை நடத்த முன் வந்துள்ளமை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் எனப் பலரும் தெரிவிக்கின்றனர். (வ-86)



# வீதியால் நடந்து சென்ற பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு

வலி.வடக்கு, ஒக்.2

சைக்கிளில் வந்த இளைஞனால் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் அணிந்திருந்த சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சங்கிலி அறுத்துச் செல்லப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் அளவெட்டி தம்பனைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச்சங்கிலியை சைக்கிளில் வந்த சுமார் இருபது வயது மதிக்கத்தக்க நபரே அறுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் முறையிடப்பட்டுள்ளது.

இந்தக் களவு சம்பந்தமாக தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் கிழக்கின் ஆட்சிக்குச் சிக்கல் வரும்

## எச்சரிக்கிறார் மாகாணசபைக் குழுத் தலைவர் ஜெமீல்

அம்பாறை, ஒக்.2

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைக்கு கிழக்கு மாகாண சபை தீர்வு வழங்காமல் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்யுமானால், மாகாண ஆட்சிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழங்கி வருகின்ற ஆதரவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் கிழக்கு மாகாணசபைக் குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல் எச்சரித்தார்.

தவிசாளர் ஆரியவதி கலப்பதி தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்ற கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஆர்.எம். அன்வர், புல்மோட்டை முஸ்லிம்களின் காணிப்பிரச்சினை தொடர்பாக அவசரப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். இதனை வழிமொழிந்து உரையாற்றியபோதே முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண முதலமைச்சர், மக்கள் நலன்கருதி சில நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும், அவை எதுவும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. இந்த மாகாண சபை நிர்வாகம் செயற்றிறனற்றுக் காணப்படுகிறது.

கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் அங்கும் இங்குமாக சுவீகரிக்கப்பட்டு வருகின்ற போதும், அவற்றை கிழக்கு மாகாண சபையினால் தடுத்து நிறுத்த முடியாமல் இருக்கிறது.

புல்மோட்டை முஸ்லிம்களின் காணிப் பிரச்சினையும் தீர்வின்றி இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இதனை அந்தப் பகுதி சார்பான எமது கட்சியின் உறுப்பினர் அன்வர் சபையில் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான நிலைமை தொடருமாயின் கிழக்கின் ஆட்சிக்கு முட்டுக் கொடுத்திருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

இந்த மாகாண சபையின் சட்டம், ஒழுங்கை மீறி, இயல்பு நிலைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில், ஆட்சி மாற்றத்திற்கு வழிகோலும் வகையில்- நாம் செயற்பட வேண்டியேற்படும்.



கிழக்கு மாகாண சபையின் ஆட்சி நிறுவப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், உருப்படியாக எதுவும் செய்யாமல் சோர்வு நிலையில் காணப்படுகிறது. இவ்வாறான நிலை உறுப்பினர்களாகிய எம்மையும் மக்களையும் பெரும் கவலையடையச் செய்துள்ளது. -என்றார். (ச)

# பண மோசடியில் ஈடுபட்ட அதிபர் இடைநிறுத்தம்

## விசாரணைக்கு குழு நியமனம்

திருகோணமலை, ஒக்.2

திருகோணமலை, மொறவெவ பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

பாடசாலையின் வேலைத்திட்டமொன்றுக்காக மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில், குறித்த அதிபர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் என்.ஏ.ஏ.புஷ்பகுமார தெரிவித்தார்.

ஆரம்பகட்ட விசாரணைகளில் குறித்த அதிபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

அடுத்த கட்ட விசாரணைகளுக்காக அதிபருக்கு எதிராக குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

> **அடுத்த கட்ட விசாரணைகளுக்காக அதிபருக்கு எதிராக குற்றப் பத்திரிகை வழங்கப் பட்டுள்ளது.**

அதிபர் மீது சுமத்தப்பட்டிருக்கும் நிதி மோசடி தொடர்பில் விசாரிப்பதற்காக மாகாண கல்வி அமைச்சின் செயலரால் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த அதிபர் பணியாற்றிய பாடசாலைக்கு தற்காலிகமாக, பதில் அதிபர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# நவிப்பிள்ளையின் அறிக்கை வேடிக்கையான விடயம்

## அஸ்வர் எம்.பி காட்டம்

மனித உரிமை மீறல்களுக்கு பிரபல்யம் பெற்ற இடமாக பலஸ்தீனம் இன்னும் இருந்து வருகின்றவேளையில், நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பில் அறிக்கை விடுவதை வேடிக்கையான விடயமாகவே உலகம் நோக்குகின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப் பினரும் ஊடக அமைச்சின் கண்காணிப்பாளருமான ஏ.எச்.எம்.அஸ்வர் தொவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபைக்கான நவீன புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:

அன்றிருந்த ஜி.ஜி.பொன்னம் பலம் போன்ற தமிழ்த் தலைவர்கள் முஸ்லிம்களுக்காக உணர்வு பூர்வமாக குரல் கொடுத்துள்ளனர். அவர்கள் முஸ்லிம் தலைவர்களை வழிநடத்தியுள்ளனர். அந்தவகையில் அவர்களை என்றும் முஸ்லிம்கள் மறந்து விட முடியாது. இன்று பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு நாடு அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும் நிலையில், சர்வதேசத்தின் அழுத் தங்களுக்கு நாட்டை முகம் கொடுக்க வைக்கும் வகையில் பிரச்சார நடவடிக்கையை தீய சக்திகள் மேற்கொண்டு செல்வதனை அனுமதிக்க முடியாது. -என்றார். (ச)




சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கி மீனோடைக்கட்டு ஜலால்டீன் வித்தியால மாணர்கள் ஊர்வலமாக செல்வதைக் காணலாம்.

# ரூ.8,000 அபராதம்

அம்பாறை, நாவிதன்வெளி, அன்னமலை பிரதேசத்தில் 16 பறவைகளை வைத்திருந்த நபருக்கு 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பறவைகளையும் விடுவிக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

அன்னமலை பிரதேசத்தைச் சேர்ந்த நபருக்கே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சவளக்கடை பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அன்னமலை, தபாலக சந்தியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டபோது சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபரை வழிமறித்து சோதனை மேற்கொண்டனர்.

அதன்போது உரைப்பை ஒன்றில் உயிருடன் 16 பறவைகளை மறைத்து வைத்திருந்த நிலையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

இந்தப் பறவைகள் இறைச்சிக்காக அவர் கொண்டு சென்றுள்ளார். இந்தநிலையில் இந்த நபர் திங்கட்கிழமை கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

# 29,000 விதவைகள் மட்டக்களப்பில் மட்டும்

## அரச அதிபர் சாள்ஸ் கவலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 29,000 விதவைகள் உள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் கவலை தெரிவித்தார்.

சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் விசேட ஒன்று கூடல் ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானிலுள்ள சர்வோதய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 29,000 விதவைகள் உள்ளனர். அதேபோன்று கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் அதிகளவாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளனர்.

கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் முழுமையான எண்ணிக்கை இன்னும் அறிக்கையிடப்படவில்லை. ஏனெனில் சிலர் திருமணம் செய்



திருந்தும் அவர்கள் பதிவு செய்யாததால் அந்த விவரம் முழுமையாகத் தெரியவரவில்லை. இதே போன்று மட்டக்களப்பு அதிக மதுபானம் விற்பனை செய்யக் கூடிய மாவட்டமாகவும் உள்ளது.

பெண்களுக்கெதிரான வன்முறை, குடும்ப வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், பாடசாலை செல்லாத சிறுவர்கள் என சமூகச் சீரழிவுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகம் காணப்படுகின்றன. .-என்றார். (ச)

# மாணவிகள் சுகவீனம்; விசாரணை நடத்துங்கள்

## பெற்றோர்கள் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஒக்.2

மட்டக்களப்பு, கல்லடி விவேகானந்தா வித்தியாலயத்தின் விடுதியிலுள்ள மாணவிகள் அழுக்கடைந்த தண்ணீரைப் பருகி பாதிக்கப்பட்டமை தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கல்வித் திணைக்களத்திடம் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்தப் பாடசாலையில் திங்கட்கிழமை காலை சுகவீனம் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்தனர். இது தொடர்பில் பல்வேறு சந் தேகங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பாடசாலை விடுதியில் தங்[illegible] கல்வி [illegible] மாண[illegible] மிகவும் வறிய நிலைமையில், பின் தங்கிய பிரதேசங்களில் இருந்து வந்து கற்பவர்கள் இந்த நிலையில் பாடசாலையின் ஒரு பகுதியில் உள்ள விடுதியை மூடிவிடுவதற்கு கல்வித் திணைக்களத்தில் உள்ள சிலரும், பாடசாலையில் உள்ள சிலரும் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விடுதியில் உள்ள தண்ணீர் அருந்தும் குழாயில் திங்கட்கிழமை தண்ணீர் வராத காரணத்தால் அப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த கிணறு ஒன்றிலிருந்து நீரைப் பெற்று பருகுமாறு குறித்த விடுதியின் பொறுப்பாசிரியரினால் பணிக்கப்பட்டது என்று சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவர் தெரிவித்தார்.

[illegible] உள்[illegible] கூறிய போதிலும் உங்கள் பிரதேசத்தில் நீங்கள் இந்த நீரைத் தானே பருகினீர்கள் என்று குறித்த ஆசிரியை தெரிவித்தார்.

இந்த நீரைப் பருகிய சுமார் 70 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்ட போதிலும் அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாமல் விடுதிகளின் அறைகளில் நிர்வாகத்தினர் பூட்டி வைத்தனர் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து கேள்வியுற்று பாடசாலைக்கு சென்ற அதிகாரிகளிடம் மாணவிகள் தங்களுக்கு நடக்கும் அநீதிகளை தெரிவித்துள்ளனர்.

எமது சமூகம் கடந்த காலத்தில் அனைத்தையும் இழந்த நிலையில் நிற்கும்போது சமுதாயத்தை அரவணைக்க வேண்டிய கல்விமான்கள் அவர்களை துரத்த நினைப்பது கவலைக்குரிய விடயமாகும் என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

# வீடு இழந்தோருக்கு வழங்கப்பட்டது நிதி

மட்டக்களப்பு, ஒக்.2

நாவிதன்வெளி பிரதேசத்தில் கடந்தகால வெள்ள இடர்களால் வீடுகளை இழந்தவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தை சேர்ந்த 67 குடும்பங்களுக்கு இடர் நிவாரண சேவைகள் அமைச்சால் வீடு கட்டுவதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலர் எஸ்.கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீ.எச்.பிய சேன கலந்துகொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியை வழங்கினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மீது ஷிராணி பண்டாரநாயக்க வழக்கு



முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நகர்வு மனு ஒன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார். இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் நோட்டீஸ்க்கு எதிராகவே அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை வழக்கின் பிரதிவாதியான அவருக்கு தெரிவிக்காது, சாட்சிகள் கட்டளைச் சட்டத்தை மீறி வழக்கை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு முயற்சிப்பதாக அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நளீன் லதுஹெட்டி தெரிவித்தார்.

கொழும்பு பிரதான நீதிமன்றத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கணினி ஊடான சாட்சிகளை முன் வைப்பதாயின் அதுதொடர்பில் 40 நாள்களுக்கு முன்னரே சாட்சிகளுடன் வழக்கின் பிரதிவாதியின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்றும் அவர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

சாட்சிகள் கட்டளைச்சட்டத்தில் அவ்வாறே குறிப்பிடப்பட்டிருந்தாலும் வேறு வழக்குகளில் அவ்வாறு செய்யப்படுவதில்லை எனத் தெரிவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திலான் ரத்நாயக்க, குற்றச்சாட்டுகளை வாசிக்கின்றபோது அவ்வாறு செய்யலாம் என்று எடுத்துரைத்ததுடன், சாட்சிகளின் பிரதியொன்றும் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இடைமறித்த ஜனாதிபதி சட்டத்தரணி நளீன் லதுஹெட்டி பிரதிவாதியின் நகர்வு மனுவின் மூலமாக எடுக்கப்படும் வழக்கில், குற்றச்சாட்டுகளை வாசிப்பதற்கு இடமில்லை என்று நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி நளீன் லதுஹெட்டியினால் முன்வைக்கப்பட்ட காரணங்களுக்கு எதிர்ப்புகளை நவம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் முன்வைக்குமாறு பணித்த பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டி வழக்கையும் அன்றைய தினத்திற்கே ஒத்திவைத்தார்.

இதேவேளை, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் சர்வதேச ரீதியில் நடைபெறவிருந்த விவாதமொன்றை இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிவான் ஸ்ரீஸ்கந்தராஜா தடுத்து நிறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் நீதிவான்கள் வருடாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும், இதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் ஸ்ரீஸ்கந்தராஜா எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை குறித்து கூட்டத்தில் கலந்துரையாடப்பட உள்ளதாக வெளிநாடொன்றின் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் பணி நீக்கம் செய் யப்பட்டமை அரசியல் அமைப்பிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணிநீக்கம் செய்யப்பட்டமை குறித்து இலங்கை நீதிமன்றில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகிறது எனவும் இந்த நிலையில் விவாதம் நடத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்திருந்தார். இதன் காரணமாக ஷிராணி குறித்த விவாதம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

# பாடசாலை அதிபரின் மரணம் தற்கொலையே

## பொலிஸார் தெரிவிப்பு

நீர்கொழும்பு, சென் மேரிஸ் கல்லூரி அதிபரது சடலம் பாடசாலையின் குளியல் அறையில் இருந்து நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டுள்ளது. அவர் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸாரின் தீவிர விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகத்திற்கு இடமான முறையில், மரணமான அதிபரது கழுத்து மற்றும் கணுக்கால் பகுதிகளில் வெட்டுக் காயங்கள் இருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

குளியல் அறையில் இருந்து சிறிய அளவிலான கத்தி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. காலை முதல் அவர் அலுவலகத்தில் இருக்கவில்லை எனவும், மாணவர் ஒன்றுகூடலுக்கு அவர் வராததாலேயே சந்தேகம் ஏற்பட்டதாகவும் ஆசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

42வருடங்கள்கல்விச் சேவையில் ஈடுபட்ட குறித்த அதிபர் எதிர்வரும் 8 திகதி ஓய்வு பெறவிருந்தார். நீர்கொழும்பு, தளுபொத்த பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதான மக்ஸ்வெல் பெர்னாண்டோ, சென்மேரிஸ் கல்லூரியின் அதிபராக 2003 ஆம் ஆண்டு முதல் கடமையாற்றி வந்துள்ளார்.

# யால சரணாலயம் மீண்டும் திறப்பு

யால தேசிய சரணாலயம் நேற்று மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டது. நேற்று முதல் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சரணாலயத்தை பார்வையிட முடியும் என வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்திருந்தார்.

யால தேசிய சரணாலயம் கடந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து மூடப்பட்டிருந்தது.

# கட்டுநாயக்கவில் மாலைதீவுப் பிரஜை கைது

மாலைதீவுப் பிரஜை ஒருவர் பண்டாரநாயக்க சர்வ தேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது வீஸா காலாவதியான நிலையில் குடிவரவுச் சட் டங்களை மீறிய குற்றச்சாட்டிலுமே இவரைக் கைது செய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைதுசெய்யப்பட்ட இந்தச் சந்தேக நபர் நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



உடப்பு பிரதேசத்தில் உள்ள 20 பாலர் பாடசாலைகள் சேர்ந்து சிறுவர் தினத்தை நேற்று மிகவும் சிறப்பாகக்கொண்டாடினர்.

# ஹெரோயினுடன் மாட்டினார் பெண்



பம்பலப்பிட்டி பகுதியில் ஹெரோயின் மற்றும் ஹஷீஸ் போதைப்பொருள்களுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பெண் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடம் இருந்து 500 கிராம் ஹெரோயினும், 500 கிராம் ஹஷீஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன. பம்பலப்பிட்டி பகுதியில் தற்கா லிகமாகத் தங்கியிருந்த பெண் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் போதைப்பொருள்களுடன் ஓட்டோவில் தனது தங்குமிடத்திற்கு சென்றுக் கொண்டிருந்த சமயம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். ஓட்டோச் சாரதியும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# சவூதித் தூதுக்குழு ஹக்கீமுடன் பேச்சு

இலங்கைக்கு வருகை தந்துள்ள சவூதி அரேபிய அபிவிருத்தி நிதியத்தின் உயர்மட்ட தூதுக்குழுவினர், நீதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமை நீதியமைச்சில் சந்தித்து உரையாடினர்.

பிரஸ்தாப நிதியத்தின் இலங்கைக்கான நடப்பு நிதியாண்டிற்கான செயற்திட்ட யோசனைகள் பற்றியும், இங்கு ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்திட்டங்கள் பற்றியும் தூதுக்குழுவினர், அமைச்சருடன் கலந்துரையாடினர்.

தூதுக்குழுவினர் அமைச்சர் ஹக்கீமிடம் சில ஆலோசனைகளையும் முன்வைத்தனர். சவூதி அபிவிருத்தி நிதியத்தின் ஆசியாவிற்கான செயல்திட்ட பணிப்பாளர் அப்துல்லா அல் ஷெடோக்கி, அந் நிதியத்தின் கடனுதவி அதிகாரி முஹம்மத் டரய்பி, அதன் திறைசேரி திணைக்கள உயர் அதிகாரி அப்துல் அஸீஸ் ஆகியோரே அமைச்சரைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், பைசல் காசிம், கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ஏ.எம். ஜெமீல், மத்திய மாகாணசபை உறுப்பினர் உவைஸ் ஹாஜியார், வடமாகாண சபை உறுப்பினர் எச்.எம்.றயீஸ், கட்சியின் பிரதித் தலைவர் யு.ரி.எம். அன்வர், உச்ச பீட உறுப்பினர் தமீம் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# போனஸ் ஆசன உறுப்பினர்கள் வர்த்தமானியில் பெயர் விவரம்

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகளின் போனஸ் ஆசனங்களுக்கான உறுப்பினர்களின் பெயர் விவரம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிபெற்ற கட்சிகள் வழங்கிய பெயர்ப்பட்டியலுக்கு அமைய, இந்த உறுப்பினர்கள் பெயர்விவரம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# 1,660 ட்ரான்ஸ்போமர்கள் எதியோப்பியாவுக்கு ஏற்றுமதி

லங்கா ட்ரான்ஸ்போமர் நிறுவனம் இலங்கையில் உற்பத்தி செய்த 1,660 மின்சார ட்ரான்ஸ்போமர்கள் (மின் மாற்றிகள்) எதியோப்பியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

மின்சக்தி, எரிசக்தி, அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சியின் தலைமையில் லங்கா ட்ரான்ஸ் போமர் வேலைத்தளத்தில் வைத்து எதியோப்பிய மின்சாரக் கூட்டுத்தாபனத்தின் பிரதம பொறியியலாளர் பொகவே அபீராவிடம் இந்த ட்ரான்ஸ்போமர்கள் கையளிக்கப்பட்டன.

100 கோடி ரூபா பெறுமதி கொண்ட 1660 ட்ரான்ஸ் போமர்கள் ஏற்றுமதியா கின்றன. இந்த நிறுவனம் 1982 இல் உருவான மின்சார சபையில் இணைந்த ஒரு நிறுவனமாகும். உள்ளூர் உற்பத்தியாக ஆரம்பித்து பின்னர் ஏற்றுமதிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜோர் தான், ஐக்கிய அரபு ராஜ்யம், ஈரான், இந்தியா, கென்யா, உகண்டா, குவைட், மாலைதீவு உட்பட இருபது நாடுகளுக்கு ஏற்றுமதிகள் விரிவுபடுத்தப்பட்டன. சர்வதேச தரத்துக்கு இவை உற்பத்தி செய்யப்பட்டன.

வருடாந்தம் 4 ஆயிரம் ட்ரான்ஸ் போமர்கள் உற்பத்தியாகின்றன. 50 வீதமான உற்பத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. மொரீஸியஸ், தன்சானியா, உகண்டா ஆகிய நாடுகளுக்கும் இவற்றை ஏற்றுமதி செய்ய கொள்வனவு கேள்விகள் கிடைத்துள்ளன.

கடந்த 05 வருடங்களில் 6,500 ட்ரான்ஸ் போமர்கள் ஏற்றுமதியாகி உள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

# இலங்கையர் நால்வர் சென்னையில் கைது

போலி ஆவணங்களைத் தயாரித்து அதன் மூலம் இலங்கைவர முயன்ற நான்கு இலங்கையர்கள் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த பாக்கியநாதன் (வயது - 33), [illegible] (வயது - 26), [illegible] மற்றும் ஜீவன் தாரா (வயது - 19) ஆகிய நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் தங்கியிருந்த இவர்கள் மீண்டும் இலங்கை செல்ல மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு சென்றுள்ளனர். அப்போது, அவர்களின் கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களை குடிவரவு அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

இதில் அவர்கள் குறிப்பிட்டிருந்ததைவிட அதிக நாட்கள் சென்னையில் தங்கியிருந்ததும், அதற்காக போலிச் சான்றிதழ் தயாரித்திருந்ததும் தெரிய வந்தது.

அதைத்தொடர்ந்து அவர்கள் நால் வரும் மீனம்பாக்கம் விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விபத்தில் இளைஞன் பலி

மொரட்டுவை, கட்டுபெத்த பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் (வயது - 25) உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது வீதியை விட்டு விலகி மதகு ஒன்றுடன் மோதுண்டதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தின்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் மற்றும் சைக்கிளின் பின்னால் இருந்தவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் உயிரிழந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுவர் நலன்களைப் பாதுகாக்க பொறுப்பும் வீச்சும் தேவை

ஒவ்வொரு நாட்டினதும் சிறுவர்களே பின்னர் குறிப்பிட்ட தேசத்தின் பிரசைகளாகிறார்கள். அவர்களுக்கு இடையே புரிந்துணர்வையும், பொது நிலைப்பாட்டையும் உருவாக்குவதற்காக, ஐம்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர்-1954ஆம் ஆண்டில் - ஐக்கிய நாடுகள் சபையின் "யுனிசெவ்" அமைப்பினால் - சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கையில், ஒக்ரோபர் முதலாம் நாள் சிறுவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஏனைய நாடுகளில் வெவ்வேறு நாள்களில் கொண்டாடப்பட்டு வருகிறது. சிறுவர்தின நாள்களில் அவர்களுக்கு உள்ள அடிப்படை உரிமைகள் நினைவு கூரப்படுவது வழக்கம்.

உலகளாவிய மட்டத்தில் சிறுவர் உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. இலங்கையிலும் அதற்குப் பஞ்சமில்லை என்று கூறுமளவுக்கு பல்வேறு வகைகளில், வடிவங்களில் சிறுவர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன; மீறப்படுகின்றன.

ஏனைய பல நாடுகளில் நடைமுறையில் இருப்பது போன்று இங்கும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென விசேட சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

ஆயினும் சிறுவர் உரிமைகள், முழு அளவில் இல்லாவிடினும் அரைவாசியேனும் பேணப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் குறைவதாக இல்லை. சிறுவர்களுக்கு எதிரான, பாதகமான பல காரியங்கள் நடைபெற்று வந்தாலும், அவற்றைத் தடுப்பதற்கான பலமான நடவடிக்கைகள் குறைவாகவே உள்ளன.

சிறுவர்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான கல்வி, அவர்களில் பெரும்பான்மையோருக்குக் கிடைப்பதில்லை. குறிப்பாகப் போரினால் மிகவும் பாதிப்புற்ற வன்னி மாவட்டங்களில், பல்லாயிரக் கணக்கான சிறுவர்களுக்குக் கல்வி கானல் நீராகவே உள்ளது. அதேபோன்று, போஷாக்குள்ள உணவுகளை உட்கொள்ளக் கூடிய வசதியும் வாய்ப்பும் அவர்களுக்கு இல்லை. அதனால் அந்தப் பிரதேசங்களில் உள்ள சிறுவர்கள் ஏனைய சிறுவர்களை விடக் கீழ்த் தள்ளப்படுகிறார்கள்; பின்னடைகிறார்கள்.

இந்த நிலையை நீக்கும் பொருட்டு சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டாலும், சராசரி திருப்தி நிலைமைதானும் இல்லை என்பதே உண்மையாகும்.

இவற்றுக்கும் அப்பால், சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் நாடளாவிய ரீதியில் அதிகரித்துச் செல்வது, அவர்களின் எதிர்காலத்தை மிகப் பெரிய அளவில் சூனியமாக்கும் நிலையை உருவாக்கி வருகிறது.

சிறுவர்களது உரிமைகளைக் காக்க வேண்டியவர்களாலேயே அவர்களது உரிமைகள் மீறப்படுவது அதிகரித்து வருகிறது.

பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள் மற்றும் பலராலும், தெரிந்தோ, தெரியாமலோ, சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன.

தரம் ஐந்து புலமைப்பரிசில் தேர்வுப் பெறுபேறுகள் நேற்று வெளிவந்துள்ளன.

தமது ஓய்வு, பொழுதுபோக்குக்கான உரிமைகளை இழந்து, கற்று - தேர்வு எழுதியவர்களில் பத்து - இருபது வீதத்தினர் தேற ஏனையோர், தேற்றப்பட வேண்டியவர்கள் என்று வகுக்கப்படுவது வழமை என்றாகிவிட்டது.

சிறு பிள்ளைகளை உறவினர்களிடம் ஒப்படைத்து, பெற்றோர் வேறு பணிகளில் ஈடுபட, பிள்ளைகள் உறவினர்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகிறார்கள். இந்த நிலைமை அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது.

முன்னைய காலங்களைவிட சிறுவர் மகளிர் அமைச்சு - அதற்குரிய பிரிவினரால் உடன் நடவடிக்கை எடுப்பதும், விழிப்பாயிருப்பதும், மற்றவர்களை விழிப்புணர்வுடன் வைத்திருப்பதும் ஒரு சிறு வீதம் ஆறுதல் தரும் செய்தி.

சிறுவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் பற்றி அவர்களது அவசர தொலைபேசி இலக்கம் 1929இற்கு அறிவிக்கப்படும் இடத்து - உடன் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், குற்றம் சாட்டப்பட்டவரின் செல்வாக்கு, தாரதம்மியம், என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது - அவர் அதிலிருந்து மீள முடியாதவாறு.- கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சிறுவர்களின் பெற்றோரும், உறவுகளும் பிள்ளைகள் மீதும், அவர்களின் செயற்பாடுகள் மீதும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். தமது உறவினர்கள் பற்றியும் விழிப்பாக இருத்தல் அவசியம்.

சிறுவர் சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் நாடு முழுவதிலும் - வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற வேறுபாடு இன்றிப் - பரவி வருகிறது. அவற்றிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க வேண் டிய பெரும் பொறுப்பு பெற்றோர்கள், உறவினர்களிடமே உண்டு.

காலம் மாறிப் போச்சே என்ற பழைய பாடல் வரிகளுக்கு அர்த்தம் சேர்ப்பது போன்று, எமது பிரதேசங்களிலும் நாட்டிலும் சிறுவர் துஷ்பிரயோகம் வேக வேகமாகப் பரவி வருகிறது.

இத்தகைய சூழலில், சிறுவர் காப்பகங்களைக் கடுமையாகக் கண்காணிக்க வேண்டிய தேவையும் எழுகிறது. அவற்றுக்கான கட்டுப்பாட்டு விதிகளை இறுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம்.

இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள். அவர்களே நாட்டின் வருங்காலப் பிரசைகள். அதனை மனதிற் கொண்டு அரசு மட்டுமன்றி, பெற்றோரும், சமூக நலன்நாடிகளும் முன்னரை விட அதிக வீச்சுடனும் பொறுப்புணர்வுடனும் செயலாற்ற வேண்டிய வேளை இது.

# புள்ளடிகள் வெளிப்படுத்திய தமிழர்களின் எதிர்பார்ப்பு

உசிலமணி



வரலாற்று வெற்றியை வட மாகாணசபைத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றது. 1977ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு அமைவாக தமிழ் மக்களிடம் ஆணை கோரிய போதும் இதே வரலாற்று வெற்றியை அவர்கள் வழங்கினர்.

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அதே போன்றதொரு வரலாற்று வெற்றியையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கொடுத்திருக்கின்றனர். போரின் பின்னர் வடக்கு மக்கள் சந்தித்த நான்காவது தேர்தலாக வட மாகாணசபைத் தேர்தல் இருக்கின்றது. ஏனைய மூன்று தேர்தல்களிலும் பதிவான வாக்களிப்பு வீதத்திலும் பார்க்க, இம்முறை வாக்களிப்பு வீதம் பெருமளவில் அதிகரித்திருக்கிறது.

வாக்களிப்பு வீத அதிகரிப்பு மாத்திரமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வாக்கு வங்கி கணிசமான அளவில் அதிகரித்திருந்ததுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிரந்தர வாக்கு வங்கியிலும் சரிவு ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களின் பேரெழுச்சியாலேயே இந்த வரலாற்று வெற்றி பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட எதிர்பார்த்திராத வெற்றியை தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக்கும் பெற்றுக் கொடுத்து இருக்கின்றனர்.

தேர்தலில் இராணுவத்தினரின் நேரடி மற்றும் மறைமுக தலையீடுகள் ஒரு புறம் இருந்த நிலையில் மறுபுறத்தில் இராணுவத்தை வெளியேற்றியாக வேண்டும் என்ற கோரிக்கையுமே தமிழ்மக்களால் விடுக்கப்பட்டிருக்கின்றது. தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதிலிருந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராணுவத் தலையீடு தொடர்பில் குற்றம் சாட்டியிருந்தது. அதற்கு அப்பால் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கிய விக்னேஸ்வரனும் இராணுவத்தை வெளியேற்றுவது தொடர்பில் இறுக்கமான கருத்து வெளிப்படுத்தி வந்தார். இராணுவத்தினரும், ஆளும் கட்சியில் ஓர் அணியாக களமிறங்கியதாகவே வெளிப்படையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அக்குற்றச்சாட்டை இராணுவத்தினர் தொடர்ச்சியாக மறுதலித்து வந்த போதும், தமிழ் மக்கள் அந்தக் குற்றச்சாட்டுக்களின் நேரடித் தன்மையை அறிந்து கொண்டிருந்தனர்.

இராணுவத்தினரால் களமிறக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட நான்கு வேட்பாளர்களுக்காகவும், சிவில் உடையிலும், இராணுவ உடையிலும் வீடு வீடாக மிரட்டல் பாணியில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டமை மற்றும் தேர்தலுக்கு முதல் நாள் இரவிலும் கூட போஸ்டர்கள் ஒட்டப்பட்டமை என்பன மூலம் குற்றச்சாட்டின் நம்பகத்தன்மையை பொதுமக்கள் தெளிவாக ஊகித்து அறிந்திருந்தனர்.

தொடர்ச்சியாக இராணுவ அடக்குமுறைக்கு உட்பட்டிருந்த மக்கள் அவற்றுக்கு எதிரான ஒரு பலமான எதிர்ப்பைக் காட்டவே இந்தத் தேர்தலில் அதிகளவில் வாக்களித்திருப்பதாகக் கூறுகின்றார் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சின்னையா சிவரூபன். ஒரு நாயை துரத்தித் துரத்தி அடிக்கும்போது ஓடும். ஒரு கட்டத்திற்குப் பின்னர் ஓடுவதற்கு வழியில்லை என்றால் அது துரத்துபவரையே திரும்பித்தாக்கும். அதே போன்றுதான் தமிழ் மக்களும் இராணுவத்தினரின் அடக்கு முறைகளுக்கு உள்பட்டு அடக்கு முறைகளைப் பொறுக்காமல் திருப்பியடித்திருக்கிறார்கள். தங்கள் வாக்குகளை அதற்காகப் பாவித்திருக்கின்றார்கள் என்று வைத்தியர் குறிப்பிடுகின்றார். தேர்தல் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வுச் செயற்பாடுகளும், தேர்தலில் அச்சமின்றி வாக்களிக்கலாம் என்பதற்கான முழுமையான உத்தரவாதமும் தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கேற்ப தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் முழு நேரம் கடமையில் ஈடுபட்டிருந்தமையும் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் அதிகரித்ததற்கு ஒரு வகையில் காரணம் என்கின்றார், வடமாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன்.

அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பைப் பதிவு செய்வதற்கு தமிழ் மக்களிடம் வாக்கு என்ற ஆயுதம் மட்டுமே இருக்கின்றது. எங்களுக்கு இருக்கின்ற உரிமை வாக்குரிமை மட்டுமே. அந்த உரிமையைப் பயன்படுத்தி அரச அடக்குமுறைக்கு எதிரான தங்கள் கருத்தை உறுதயாக வெளிப்படுத்தும் விதத்திலேயே தமிழ் மக்கள் அக்கறையுடன் இத்தேர்தலில் வாக்களித்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

திட்டமிட்ட ரீதியிலான தமிழர் தாயகப் பகுதிகளின் சிங்களக் குடியேற்றம், கலாசார சீரழிவுகள், இவற்றுக்கு மேலாக நான்கு வருடங்களாக ஏமாற்றப்பட்ட விரக்தி என்பவற்றால் அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பைப் பதிவு செய்யவே, மக்கள் இவ்வாறு பெருமளவில் வாக்களித்திருக்கின்றனர் என்று கூறுகின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இதே கருத்தைப் பிரதிபலிக்கும் சட்டத்தரணியும், பவ்ரல் அமைப்பின் சட்ட ஆலோசகருமான க.சுகாஸ், தமிழ் மக்கள் அபிவிருத்தியைத்தான் விரும்புகின்றார்கள் என்று அரசு தொடர்ச்சியாகச் சொல்லி வருகின்றது. ஆனால் நாம் கேட்பது உரிமையையே. எனவே அரசின் கருத்தை நிராகரிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்கள் அதிகளவில் வாக்களித்திருக்கின்றார்கள் என்று குறிப்பிடும் அவர், இந்தத் தேர்தல் உரிமையா ? சலுகையா ? என்ற மோதலில் தமிழ் மக்கள் எப்போதுமே உரிமையை விட்டுக் கொடுப்பதில்லை என்பதை வெளிக்காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

தமிழ் மக்களின் இருப்பைத் தக்க வைப்பதற்கான போராட்டத்தில், தமிழன் என்ற உணர்வுடன் வாக்களித்ததாகத் தெரிவிக்கும், யாழ்.மாவட்ட செயலக நிறைவேற்றுத் தர அதிகாரி ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த பின்னர் ஒரு வயோதிபர் மாரடைப்பால் உயிரிழந்ததையும் சுட்டிக்காட்டுகின்றார். தனது மனப் பாரத்தை, தமது வாக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்ததன் மூலம் இறக்கி வைத்த நிம்மதியுடன் அவரது உயிர் பிரிந்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மக்கள் தமிழன் என்ற உணர்வை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமாக ஒரே ஒரு தமிழ்க் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் போட்டியிட்டதால், தமிழ் மக்களில் பெரும்பான்மையினோர் அதற்கு வாக்களித்ததாகக் குறிப்பிடும் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர் பா.கஜதீபன், 77 ஆம் ஆண்டில் தமிழீழத்துக்கு அங்கீகாரம் அளிக்கும் விதத்திலும் 2004ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை அனுமதிக்கும் வித்திலும் தற்போது தமது மண்ணையும் இருப்பையும் பாதுகாப்பதற்கு உரிய தரப்பைத் தேர்ந்தெடுக்கும் முனைப்பிலும் வாக்களித்ததாகக் குறிப்பிடுகின்றார்.

அரசியலுக்குப் புதுமுகமாகக் களமிறக்கப்பட்ட முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் மீதான நம்பிக்கையும் மக்களின் வாக்களிப்பை அதிகரித்துள்ளது.

மத்தியதர வர்க்கத்தினரை முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனின் களமிறக்கம் உற்சாகப்படுத்தியுள்ளது. இதனால் அவர்கள் பெரும்பான்மையாகத் தமது விருப்பு வாக்கை அவருக்கு வழங்கியுள்ளனர். விக்னேஸ்வரன் நிச்சயமாகத் தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வைப் பெற்றுத் தருவார் என்று அவர்கள் நம்பியுள்ளனர். இதனாலேயே தமிழ் மக்கள் பெரும்பான்மை பலத்தையும் தாண்டி வாக்களித்திருக்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

இந்தக் கருத்துடன் உடன்படும் சட்டத்தரணி க.சுகாஸ், சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவரே மாகாணசபை முதலமைச்சராக வேண்டும் என்பதுடன், இராஜதந்திரச் சமருக்கு அவரே பொருத்தமானவர் என்று தமிழ் மக்கள் தீர்மானித்தி ருக்கின்றார்கள். இதனால்தான் வரலாற்று வெற்றியை அவருக்கு வழங்கியுள்ளனர் என்று சுட்டிக்காட்டுகின்றார்.

இதில் விடயத்துடன் ஒத்துப்போகின்றார், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட சி.தவராசா. மக்கள் தங்களுக்கான அரசு என்கின்ற காரணத்தினால் வாக்களித்திருக்கின்றார்கள்.

இதில் அதிகாரங்கள் குறைவாக இருக்கலாம். ஆனால் எங்களை நாங்களே ஆளுகின்ற பொறிமுறை என்பதால் வாக்களித்திருக்கின்றார்கள். அத்துடன் நாடாளுமன்றத் தேர்தலோ அல்லது ஜனாதிபதித் தேர்தலோ தேசிய ரீதியிலானவை. ஆனால் மாகாணசபைத் தேர்தல் அந்த மக்களின் நேரடி பிரதிநிதித்துவத்துடன், ஆளுகையுடன் தொடர்புடையது. இவை எல்லாமே வாக்களிப்பு அதிகரிப்புக்கு காரணியாக அமைந்திருக்கின்றன என்கிறார் அவர்.

ஆனாலும் இதனை 1987ஆம் ஆண்டே நாம் ஏற்றிருந்தால் இத்தனை ஆயிரம் உயிரிழப்புக்களை தடுத்திருக்கலாம் என்றும் அவர் தமது ஆதங்கத்தை வெளப்படுத்துகின்றார்.

ஆளும் கட்சி யாழ்.மாவட்டத்தில் 4 ஆசனங்களையும் ஏனைய இடங்களில் கௌரவ வாக்குகளையும் பெற்றுக் கொள்ளும் என்பது சகலரது கணிப்பாக இருந்த போதும் அந்த முடிவுகளை மக்களின் வாக்களிப்பு மாற்றியமைத்திருக்கின்றது. தொடர்ச்சியாக இராணுவத்தினரின் அழுத்தங்கள், தமது வாழ்விடங்களை இராணுவத்தினர் அபகரித்தமைக்கு எதிர்ப்புக் காட்டுவதற்கு கிடைத்த சரியான சந்தர்ப்பமாகவும் இதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

வாக்களிப்புத் தினத்தன்று ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகிலும் சிவில் உடையில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்த நிலையிலும் அதனையும் தாண்டி 70 சதவீதம் வரையில் வாக்களிப்பு இடம்பெற்றிருக்கின்றது. மக்கள் துணிந்து விட்டார்கள். இனி எதுவும் இல்லை. இதனை விட்டால் வேறு வழியும் இல்லை. இதனால் அத்தனை அச்சுறுத்தல்களும் அவர்களுக்கு மேலும் மேலும் உந்து சக்தியைக் கொடுத்து வாக்களிக்க வைத்திருக்கின்றது.

இத்தனை அச்சுறுத்தல்களையும் தாண்டி வாக்களித்த மக்கள் பிரதானமாக எதிர்பார்ப்பது இராணுவ வெளியேற்றத்தைத்தான். ஏனெனில் அதனைக் கூட்டமைப்பு செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தே வாக்களித்தார்கள். அதனை நிறைவேற்ற வேண்டுமானால் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றிக்காகப் பாடுபட்டதை விட அதிகமாகப் பாடுபட வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.சிவகரன்,
மெய்யியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்

மகாத்மா காந்தியின்
பிறந்ததினம் இன்று

# மானிடம் வெல்ல அன்பு வேண்டும்



இன்று மகாத்மாகாந்தியின் 144 வது பிறந்தினமும் சர்வதேச அகிம்சை தினமுமாகும். இன்றைய இந்நாளில் மகாத்மா காந்தியின் அகிம்சை வழி அணுகுமுறையினை மீட்டுப்பார்ப்பது மிகவும் முக்கியமானது. சாதி, மதம், இனம், மொழி, பண்பாடு, வர்க்கம், தேசியகொள்கை போன்றவற்றால் வேறுபட்ட மக்களை அன்பால் இணைத்த மகாத்மாகாந்தி காட்டிய அன்பு எனும் உயாந்த விழுமியத்தினைப் பற்றி விரிவாக நோக்குவது இன்றைய நாளில் சிறப்புக்குரியது.
மானிடப்பிறப்பில் மனிதனுடன் கூடப் பிறப்பது அன்பு ஆகும். தமிழில் காணப்படும் அழகான சொற்களில் ஒன்றாக இவ் அன்பு காணப்படுகின்றது. இதனை நட்பு, உறவு, பாசம், காதல், சகோதரத்துவம் போன்றனவற்றுடன் இணைத்தும் நோக்கலாம். ஏனெனில் இவற்றுக்கு எல்லாம் அடிப்படையாகக் காணப்படுவது அன்பேயாகும். மனிதர்களிடையேயான உறவு மூன்று அடிப்படைகளில் அமையலாம்.
நட்பு - அன்பு என்பதும் .எதிரி - வெறுப்பு என்பதும் அவையாகும் இங்கு அன் பின் அடிப்படையிலான உறவு விரிந்து பரவி அந்நியரும் எதிரியும் மறைந்து எங்கும் சகோதரத்துவம் மலரவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.
மகாத்மா காந்தியின் போதனைகளை நோக்கும்போது எமது வாழ்க்கையில் நான்கு நிலைகளில் அன்பினை நாம் பின்பற்றலாம்.
இனிமையாகப் பிறரிடம் பேசுதல் . இரக்கம்,கருணை உதவி புரிதல், பொறுமை, மன்னித்தல் மறத்தல், கூட்டுறவும் ஒப்பரவும், என்பதனை வள்ளுவா அழகாக கூறுகின்றனார். "இனிக்கும் பழங்கள் போல இன் சொல் இருக்க கசக்கும் காய்களான கடுஞ் சொல் எதற்கு? ஒருவனைச் சந்திக்கும் பொழுது புன்முறுவலுடன் இனிமையாக வணக்கம் கூறி முகமன் கூறுவது மனிதனில் உள்ள உயரிய பண்பு ஆகும். ஆனால் இன்று மக்களது இயல்பான வாழ்க்கை முறைகளிலும் அரச அலுவலங்களிலும் பாராமுகமான போக்கும் எரிந்து விழுவதும் கடும் சொற்களையும் பயன் படுத்துவதும் மிகுதியாக உள் ளன. மற்றவர்ககளை அடிமைகள் போல நடத்தும் நிலை வளர்கின்றது.
இனிய சொற்களும் முகமலர்ச்சியும் மந்திரசக்தி வாய்ந்தவை. இந்த இனிய சொற்களில் உண்மையும் கலத்திருக்குமேயானால், இதன் ஆற்றல் பண்மடங்கு அதிகரிக்கும். இனிய சொற்களின் முழு ஆற்றலை நாம் இன்னும் முழுமையாக உணரவில்லை.
அன்பின் அடுத்த நிலை இரக்கம், கருணை, உதவி, தொண்டு என்பனவாகும். ஒருவர் துன்பத்தில் இருக்கும் பொழுது இரக்கம் காட்டாத அன்பு, உதவ முற்படாத அன்பு உண்மையான அன்பாகுமா? பிற துன்பத்தை உணருவதற்கு நமது உள்ளம் இளகியதாக இருக்கவேண்டும். உள்ளம் கல்லாகுமேயானால் உணர்வுகளுக்கு இடமேது. கண்ணிருந்தும் குருடர்களாயும் காதிருந்தும் செவிடர்களாயும் அல்லவா நாம் மாறி விடுவோம்" வாடிய பயிரைக் கண்ட போதெல் லாம் வாடினேன் என இராமலிங்க வள்ளலார் பாடுகின்றார்.
இது மனி தனின் மிக உயர்ந்த நிலை கௌதம புத்தர் இளவரசர் சித்தார்த்தராக இருந்த பொழுது துன்பம் என்றால் என்னவென்று தெரியாது வளர்க்கப்பட்டார். ஆனால் தற்செயலாக ஒரு நோயாளி, ஓர் ஏழை, ஒரு பிணம் ஆகியவற்றைக் காண நேர்ந்த பொழுது அவரின் மனம் வருந் தியது. மானிட இனத்தைத் துன்புறுத்தும் சவால்களை எண்ணி வருத்தினார். இச்சாவல் களுக்கு விடைகளாக நள்ளிரவில் தன்னந் தனியாக அரண் மனையை விட்டு வெளியேறினார் இதுதான் அன்பின் தோற்றம்.
பொதுநலம் என்பது அன்பின் அடையாளம் ஆகும். சுயநலம் மிகுந்த நிலையில் அன்பு மங்குகின்றது. பொதுநல நாட்டத்தின் விளைவே இரக்கமும் உதவியும் ஆகும். சுயநலத்தின் வெளிப்பாடு தான் என்ற உணர்வு. இது அன்புக்கு முரணானது. மனித உடல் உள ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியது.
அன்பின் அடுத்தநிலை பொறுமை, மன்னித்தல், மறத்தல், தியாகம் என்பனவாகும். பிறர் செய்த துன்பத்தைப் பொறுக்க மகத்தான ஆற்றலும் மனவலிமையும் எமக்கு வேண்டும். மன்னிக்கவில்லையென்றால் அங்கு வெறுப்பு, பழிவாங்கல் உணர்வுகள் பெருகும். வெறுப்பை வெறுப்பால் வெல்ல இயலாது. மாறாக, அன்பினாலேயே இயலும்.
நாம் எவ்வளவு தான் அன்பு செலுத்தியும் பயன் இல்லையே எனச் சிலர் சோர்வடைகின்றனர். உண்மையான அன்பு அன்பை தோற்றுவிக்கும் அன்பினைத் தோற்றுவிக்காத அன்பு மலட்டுத்தன்மையானது.
தவறுகள் மலிந்த உலகத்தில் மன்னித்தல் இல்லையென்ருல் மனித இனத்தின் வரலாறு என்றோ முடிந்திருக்கும். மன்னித்தலை விட மறத்தல் இன்னமும் உயர்வானது. மன்னித்து விடுகின்றபொழுது நான் மன்னிக்கிறேன் என்ற தன் முனைப்பும் கடந்த காலத்தின் நினைவுக் கற்பனையும் நிலைத்துநிற்க வாய்ப்புண்டு. அது அன்பு தழைக்கத் தடையாக அமையும். மன்னித்து அதை மறந்து விடும் பொழுது இக்குறைகள் மறைந்து விடுகின்றன. அநீதியைக் கண்டு பொறுத்தல் முறையோ? என்ற கேள்வி உங்கள் முன் தோன் றலாம். இது நியாயமான கேள்வி.
கூட்டுறவும் அன்பின் உயரிய சமுதாய ஒழுக்கலாறு களமாகும். ஒன்றையும் ஒன்றையும் (11) கூட்டும் பொழுது அது இரண்டாக பெரிதாகின்றது. அதுபோல கூட்டுறவில் சமூகம் பிறக்கின்றது. சுயநலம் குறைந்து பொதுநலம் வளர்கிறது இதனால் உறவு மலர்கிறது.
மானிட வரலாறு முன்னோக்கிச் செல்கின்றது என்பதில் ஐயமில்லை. மானிடரிடையே உண்டு வாழ்ந்த நிலை மாறி குடும்பமாய், சமூகமாய், கிராமமாய், நகரமாய், நாடாகி கூடி வாழ்ந்து இன்று உலகமாய் கூடி வாழும் நிலைக்கு வந்து நிற்கிறோம். சுதந்திரம், சமத்துவம் கோட்பாடுகளில் பல புதிய புதிய பரிசோதனைகளும் வளர்ச்சிக்களும் ஏறபட்டு உள்ளன. ஆனால் சகோதரத்துவம் என்ற கருத்தில் அத்தகைய வளர்ச்சி இல்லை. மகாத்மாகாந்தி புத்தரின் யேசுவின் வழியில் மானிட இனத்தை அன்பால் இணைக்க முயன்றார். நாம் அனைவரும் ஒன்றே என்ற உணர்வு அனைவரிடமும் உருவாக வேண்டும். இதுவே இன்றைய தேவை. இதை நாம் அடைந்தே ஆக வேண்டும். இல்லையெனில் மானிடம் அழிந்து விடும். நமது வாழ்வில் அன்பு சுடர் விடட்டும். அன்பை உலகை ஒன்றுபடுத்தி உலகினை ஆளட்டும். அதனை நன்கு உணர்ந்து அன்பி னை வளர்க்க நாம் இடையீறு இன்றி செயற்படவேண்டும்

---

த.கிருபாகரன்,
அத்தியட்சகர்,
அரச முதியோர்
இல்லம் , கைதடி.



# முதுமையின் திறவுகோல்



முதியோர் வாரத்தின் இரண்டாம் நாளில் இனிய எண்ணங்கள் மனதில் நிறைத்து தயாராகிக் கொண்ட உங்க ளுடன் பேனா முனைச் சந் திப்பில் ஒன்றானதையிட்டு மகிழ்வாக இருக்கின்றது. முதுமையின் திறவுகோலாக இன்று எம்மத்தியில் உள்ள இன்னுமொரு விடயம் தொடர்பாகப் பகிர்ந்துகொள்வதையிட்டு எண்ணங்கள் இறக்கை கட்டிப் பறக்கின்றன.
முதியவர்கள் இன்று மூத்த பிரஜைகளாக பரிணாம வளர்ச்சியில் முன்னோக்கித் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த உந்து விசையின் சக்தியில் ஈடாடிப் போகும் நிலையை தகர்த்தெறிதல் என்பது எம்மில்தான் தங்கியுள்ளது. நியூட்டனின் ஈர்ப்பு விசைக் கொள்கைக்கு அமைவாக தாக்கத்துக்கு சமனான மறு தாக்கம் உண்டு. அப்படியெனின் அறுபதின் மேல் எழ வல்ல பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதற்கு நாங்கள் சக்தி மிக்கவர்களாக இருக்க வேண்டும். இந்தச் சக்தியை நாம் எப்படி வளர்த்துக் கொள்வது? எப்படியாக நிலைத்திருக்க வைப்பது? என்பது பற்றி நடைமுறைக்குச் சாத்தியமான விடயங்களின் தேடலில் ஈடுபட வேண்டும் என்பது தெரிந்து விட்டதல்லவா?
நாம் தினமும் எத்தகைய பணிகளைச் செய்கின்றோம்? கேள்வியே கொக்கி போட்டு இழுக்கிறதல்லவா? தெளிவில்லை. சரி எழுதிப்பாருங்கள் நித்திரைவிட்டு எழுதல், உண்ணுதல், நடத்தல், கதைத்தல், வேலை செய்தல், குளித்தல், இருத்தல்.. இதைவிட குடித்தல், பேசுதல், வீசுதல், முறைத்தல், சண்டையிடுதல் களவாடுதல்... இம்சைகளின் அரசனாகி இறுமார்ந்து கிடக்கின்றோம். இப்படியானவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்? எண்ணிப் பாருங்கள்.
ஆத்மிகம், வரவேற்பு, அன்பு, சேவை செய்பவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்? இதையும் எண்ணிப் பாருங்கள் நீங்கள் திகைத்துப் போய்விட்டீர்கள் அல்லவா? இப்போதேன்றாலும் நம்புங்கள். உண்மையின் நிஜ வடிவத்தைத் திரும்பிப் பாருங்கள். "ஓடு மீன் ஓடி ஊறுமீன் வரும் வரைக்கும் வாடியிருக்குமாம் கொக்கு" இப்படியான காத்திருப்பு ஐம்பது வயதுவரை போதுமானது. சிந்தையைச் சிரசில் சுமந்து பார்க்க வேண்டிய நேரம் இதுதான். நிந்தித்து சிந்தித்து வாழும் மனி தர்களின் நிலை கிடப்பில் போட வேண்டியதுதான். சிந்தித்து பண்பட்டு வாழும் மனிதர்கள் முன் உதாரணங்கள் ஆக்கப்பட வேண்டியவர்கள்.
முகாரி இராகங்களை பாடிக்கொண்டு முன் வரிசையில் நின்றால் பாதிப்பை எண்ணி உடனடியாக பின்வரிசைக்கேனும் வாருங்கள். முதுமையின் கொடுமை, தனியாகும் போது தவிக்கும் நிலையை தவிர்க்க வேண்டும் என்பதற்காக மாற வேண்டும். எங்களது தினச் செய்திகளை உறங்கும் போது மீட்டுப் பார்க்க வேண்டும். அப்போது உண்மையின் வடிவங்களும் தேவையின் கோணங்களும் காட்சிப்படுத்தப்படும். பிரச்சினைகள் தொடர்ந்தும் எல்லா மனிதர்களிலும் அடைக்கலமாகிக் கிடக்கின்றன. அதனை முகம்கொடுத்து தீர்வை பெறும் சக்தியை நாம்கொண்ட ஆளுமையுள்ள முதுமையை கட்டியெழுப்ப வேண்டும். எங்களுடைய நடத்தைகள் எவ்வாறு உள்ளன என்பது புரியும்போது அறிதல் ஏற்படுகின்றது. அறிதல் மூலமான தெரிதல் நடத்தை மாற்றங்களுக்குத் துணையாக அமையும்.
மனத்தைரியம், உண்மைகளை பகுத்தறிந்து உணர்தல், விடயங்களை உள்வாங்கி ஆராய்ந்து முடிவெடுத்தல் பண்புகள் ஆன்மிக ஈடுபாட்டாலும், வாழும் கலை பயிற்சிகளாலும், தியானப் பயிற்சிகளாலும் மேலோங்கும்.
தனிமையைத் தவிர்த்து சொந்தக் காலில் நின்று உழைத்து தியானம், மௌனவிரதம் அனுஷ்டித்து, ஐம்புலன்களை அடக்கும் திறனைப் பெற்று தொண்டுகள், சேவைகள் செய்து சத்தான உணவுகளை அளவாக உட்கொண்டு நிதி வசதிகளை சீர்படுத்தி உழைப்பையும், ஓய்வையும் கடைப் பிடித்து வாழும் உறவும், நட்பும் கலந்த வாழ்க்கை தைரிய சக்தியின் பிறப்பிடமாக அமைந்து முதுமையில் இருப்பிடமாக மாறுவதால் புது உத்வேகம் உருவாகும்.
புதிய உத்வேகத்தில் பிறக்கும் தைரிய சக்தி, முதுமையில் வாழ்வியல் கோலங்களின் அலங்கோலங்களை ஜீரணிப்பதற்கு எதுவாக அமையும்.
நாங்கள் நான் என்ற நிலையில் இருந்து [illegible] இப்போது விருந்தினர்களாக மாறிக்கொள்ளும் நாம் எம்மைப் பார்க்க வேண்டும். பின் வீட்டைப்பார்க்க வேண்டும். இனிச் சமூகத்தைப் பார்க்க வேண்டும். இப்படியாக மன இயல்புமூன்று கூறுகளாக உருமாறும். இது தான் இலக்கை அடைந்தமைக்கான குறிகாட்டியாக அமையும்.
பார்த்தல், படித்தல், கேட்டல், செயல்கள் தைரிய சக்தியின் மேலீட்டால்; செய்தல், உணர்தல் ஒத்திசைதல் என அறுபதின் மேல் உரு மாறியிருக்கும். மொத்தத்தில் யுக்தியைப் பாவித்து சக்தியை பெறுதல் எமது பொறுப்பும் கடமையுமாகும். பிரச்சினைகளுக்கு முகம் கொடுத் தல் என்பது இதன் முடிவுரையாக அமையும். முடிவுரையில் புதிய ஒரு முகவுரையை முதுமைக்காக நாம் எழுதிக்கொள்ள வேண்டும். இந்த முகவுரையை அழுத்தமாகவும், திருத்தமாகவும், ஆணித்தரமாகவும் எழுதிக்கொள்வதற்கு நாங்கள் முனைய வேண்டும். நீங்களும் தயாராவது தெரிகின்றது. சமூகநலனின் அக்கறை கொண்ட உங் களது செய்கைகள் ஆரோக்கியமான முதுமைக்கு அடித்தளமாகட்டும். அற்புதமான சமுதாய மறுமலர்ச்சிக்கு கருப்பொருளாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் முதியோர் தின நிகழ்வுகளில்...



சர்வதேசமுதியோர், சிறுவர் தினநிகழ்வு யாழ்ப்பாணம் நீராவியடிசைவ பரிபாலன சபை மண்டபத்தில் இடம்பெற்ற போது. ஆங்கில விரிவுரையாளர் திரு எம்.எ.ஹரி யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி எ.இ.ஞான சோதியால் கௌரவிக்கப்பட்டார். (ந-ரி)



நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் சிறுவர் தின விழா நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, சிறுவர்களின் பேச்சு, நடனம் உட்பட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. சமுர்த்தித் திணைக்களம் மாணவர்களுக்கு கல்வி உதவிக்காக வழங்கும் உதவித் தொகைக்கான வங்கிப் புத்தகங்களை உதவி திட்டமிடல் பணிப்பாளர் வழங்கினார். (ந-7)



ஜே/101, சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உதவியாளர், கிராம உத்தியோகத்தர் பொது மக்கள் இணைந்து நடத்திய சர்வதேச முதியோர், சிறுவர் தின நிகழ்வு நீராவியடி சைவபரிபாலன சபை மண்டபத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது. அதன் போது யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடன நிகழ்வையும், நிகழ்வில் கூடியிருந்த முதியவர்கள், சிறுவர்களையும் காணலாம். (ந-ரி)



சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி சிறுவர் கழகத்தின் சிறுவர் தின விழா நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது. மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சித்திரம், பொது அறிவு ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன . (ந-9)

# நாட்டில் பிரிவினைவாதத்தை தூண்டி வடக்கில் நுழைய பொதுபலசேனா திட்டம்

வலி.வடக்கு, ஒக்.2

நாட்டிற்குள் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி இன மோதல்களை மீண்டும் ஏற்படுத்த பொதுபல சேனா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னரே இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம், பௌத்த மதங்களுக்கு இடையே விரோதத்தை கட்டவிழ்த்துவிட்டு மத வாதத்தைத் தூண்டி பிரச்சினையை பூதாகரமாக்கிவிட்டு வடக்கில் உள் நுழைவதற்கு முயற்சி எடுத்து வருகின்றது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வலி.மேற்கு சங்கானைப் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் தர்மபாலாக்களை உருவாக்கி, இரண்டாயிரம் பொதுக் கூட்டங்களை நடத்தி, இரண்டாயிரம் பிக்குகளை வடக்கில் உருவாக்குவோம் என பொதுபலசேனா பகிரங்க அறிக்கையை வெளியிட்டுள்ளமை மீண்டும் வடக்கில் அமைதியின்மையை ஏற்படுத்தி அழிவை ஏற்படுத்த பொது

தமிழ் மக்களையும் ஏனைய மதங்களையும் கொண்ட வடக்குப் பகுதியில் பௌத்த மதம் ஒன்று மட்டுமே உள்ளது எனக் கூறி ஏற்கனவே நொந்து போயுள்ள மக்களைத் தூண்டி மீண்டும் மிகப் பெரிய ஆபத்தினையும் குழப்பத்தினையும் கொண்டுவரு வதற்கு பொது பலசேனாவின் அறிக்கைகள் காரணமாக உள்ளது.

பலசேனா கங்கணம் கட்டியுள்ளது என்பதனையே வெளிப்படுத்துகின்றது. இத்தகைய செயல்களில் ஈடுபடவுள்ளதாக அறிக்கை வெளியிட்ட பொது பலசேனாவைக் கண்டிக்காது அரசு அமைதியாக இருந்து வருகின்றமை கவலை தரும் விடயமாக உள்ளது.

பொதுபலசேனா அரசின் முழுமையான ஆதரவுடன் தென்பகுதியில் உள்ள முஸ்லிம்களின் பள்ளிவாசல்களையும் இந்து மக்களின் இந்து ஆலயங்களையும் அழித்து துன்பங்களை ஏற்படுத்தி வருகின்றது.

தற்போது தமிழ் மக்களையும் பல்வேறு மதத்தினரையும் கொண்ட வடக்குப் பகுதியில் பௌத்த மதம் ஒன்று மட்டுமே உள்ளது எனக் கூறி ஏற்கனவே நொந்து போயுள்ள மக்களைத் துன்பப்படுத்தி மீண்டும் மிகப் பெரிய ஆபத்தினையும் குழப்பத்தினையும் கொண்டுவருவதற்கு பொது பல சேனாவின் அறிக்கைகள் காரணமாக அமைகின்றன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த பொதுபல சேனாவினால் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் பத்தாயிரம் விகாரைகளையும் பத்து லட்சம் கையொப்பங்களையும் ஐந்து மாபெரும் யாத்திரைகளையும் உடன் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (ந-86)

# வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஒக்.2

வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு.

தரம் 1

1ஆம் இடம்-ஸ்ரீ.கஜனி சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்.

2ஆம் இடம்-செ.சுவேதா அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

3ஆம் இடம்-க.கனிமொழி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

தரம் 2

1ஆம் இடம்-க.கருணன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

2ஆம் இடம்-பி.ஆன்சாமிளா மானிப்பாய் சென் ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

3ஆம் இடம்-கு.லோகிதா சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

தரம் 3

1ஆம் இடம்-சி.ஜெகதாயினி மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்.

2ஆம் இடம்-நி.நிலவினி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

3ஆம் இடம்-கௌ.மகிழினி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

தரம் 4

1ஆம் இடம்-எஸ்.மோரிஷனா மானிப்பாய் டிகன் ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

2ஆம் இடம்-சி.சிவானுஜன் மல்லாகம் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்.

3ஆம் இடம்-தெ.சோபானா தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

தரம் 5

1ஆம் இடம்-இ.தாரணி தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி.

2ஆம் இடம்-க.பவோசிகா பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

3ஆம் இடம்-சே.நிலுக்சி மானிப்பாய் சென் ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை. (ந-86)

# கச்சாய் நூல் நிலையத்தில் சிறுவர் தின நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக்.2

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூல் நிலையத்தில் சர்வதேச சிறுவர்தின நிகழ்வுகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெற்றது.

'அறிவினால் நிரம்பிய சமுதாயத்தை உருவாக்குவோம்' என்னும் தலைப்பில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வுக்கு விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் வ.நடராஜா, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி பு.மங்களேஸ்வரன், பிரதேச சபைச் செயலாளர் செல்வி தி.தர்சினி ஆகியோர் கலந்து கொண்டனர். முன்பள்ளிச் சிறார்களின் அரங்க நிகழ்வுகளும், மாணவர் கௌரவிப்பும் பரிசில் வழங்கலும் இடம்பெற்றன. (ந-9)

## தென்மராட்சியில் சிறப்புற நடைபெற்ற சிறுவர் தினம்

தென்மராட்சி, ஒக்.2

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சிறுவர் தின விழாகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. முன்பள்ளிகள், பாடசாலைகள், உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்கள் போன்ற இடங்களில் சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வுகளில் முன்பள்ளிச் சிறார்களின் பாடசாலைகளில் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ந-9)

## கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக.2

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகங்களில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் (நல்லூர்/ உடுவில்) பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

இதற்கு ஆகக் குறைந்தது 3 வருடம் சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடைய இலங்கை கல்வி நிர்வாக சேவை III மற்றும் யாழ். மாவட்ட பாடசாலையைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ந)

## சிறுவர் நாடகப் போட்டியில் முதல் மூன்று இடங்கள்

வடமராட்சி, ஒக.2

வடமராட்சி வலய பாடசாலை களுக்கு இடையே நடைபெற்ற சிறுவர் நாடகப் போட்டியில் முதலாம் இடத்தை பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலையும், இரண்டாம் இடத்தை தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் பெற்றுக் கொண்டன. இப் போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (ந-8)



வேலணை மேற்கு நடராஜா வித்தியாலய மாணவர்கள் மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவின் போது 'உதயன்' தலைமைப் பணிமனைக்கு வந்து பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள இயக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு.ஒக்.2
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள இயங்க வைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
போர்க் காலத்தின் போது இடம்பெயர்ந்த முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்ப் பகுதி மக்கள் தற்போது மீள்குடியமர்ந்துள்ள நிலையில் தமக்குரிய மருத்துவத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத் தொடுவாய் மத்தி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கிராமங்களில் தற்போது சுமார் 355 குடும்பங்கள் வசித்து வருகின்றன.
இவர்கள் தமக்கான மருத்துவத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமாயின் கொக்குத்தொடுவாய்ப் பிரதேச மருத்துவமனை மற்றும் அளம்பில், முல்லைத்தீவு மருத்துவமனைகளுக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.
இதனால் நேரம் மற்றும் பண விரயங்களுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.
எனவே மக்களின் அவல நிலையைப் போக்கும் பொருட்டு கொக்குத்தொடுவாய் கிராமத்தில் முன்னர் இயங்கிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள இயங்கவைத்து அதில் வார நாள்களில் நடமாடும் மருத்துவ சேவைகள் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## பாதுகாப்பை இழந்தது பாலியாற்றுப் பாலம்

### ■ திருடர்களின் கைவரிசையால் வந்த வினை

துணுக்காய்.ஒக்.2
முல்லை மாவட்டம் பாலியாறு புதிய பாலத்தில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் குழாய்கள் திருடிச் செல்லப்பட்டதால் பாலத்தின் பாதுகாப்பு கேள்விக் குறியாக மாறியுள்ளது.
மாந்தை கிழக்குப் பிரதேசத்தையும் மல்லாவி நகரப் பகுதியையும் இணைக்கும் இந்தப் புதிய பாலம் 8 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டது. இது அமைக்கப்பட்டு ஒரு வருடம் கூட ஆகாத நிலையில் பாலத்தில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் குழாய்கள் திருடிச் செல்லப்பட் டுள்ளன.



கடந்த 40 வருடங்களாக மாந்தை கிழக்கு மக்கள் பாலியாற்றுப் பகுதியைக் கடப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.
இந்த மக்களின் அவல நிலையை உணர்ந்த பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் பாலத்தை அமைத்தனர். ஆனால் இதில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் குழாய்கள் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.
இதனால் பாலத்தின் பாதுகாப்பு கேள்விக் குறியாக மாறியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-415)

## ஒருங்கிணைப்பாளர் நியமனம்

கிளிநொச்சி, ஒக்.2
கிளிநொச்சி மாவட்டச் செயலக விளையாட்டுத்துறை ஒருங்கிணைப்பாளராக இலட்சுமிகாந்தன் அனுராகாந்தன் விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.
மாவட்டச் செயலக விளையாட்டுத்துறை ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றிய ஜெயவர்த்தன ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து அனுராகாந்தன் அவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வடக்கு மாகாண பிரதேச செயலகங்களில் விளையாட்டு அலுவலராகப் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை கையகப்படுத்த தனியாள் முயற்சி

### முறைப்பாடு தெரிவித்தனர் ஜெயபுரம் மக்கள்

பூநகரி.ஒக்.2
பூநகரியிலுள்ள ஜெயபுரம் கிராம மக்களுக்கென ஒதுக்கப்பட்ட வயல் நிலத்தைத் தனியார் ஒருவர் அடாத்தாகப் பிடித்து துப்புரவு வேலைகளில் ஈடுபட்டமை தொடர்பாகப் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் பூநகரிப் பிரதேச செயலர் உட்பட உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜெயபுரம் குடியேற்றத் திட்ட மக்களுக்கென தேவன் குளத்தின் கீழ் 526 ஏக்கர் வயல் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
ஆனால் போர்ச் சூழல் காரணமாக அது இந்த நிலம் மக்களுக்குப்பகிர்ந்தளிக்கப்படவில்லை.
மீள்குடியமர்வின் பின்னர் தேவன் குளத்தின் அணைக்கட்டு பகுதியில் மட்டுமே மிதி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த வயல் நிலங்களில் மிதி வெடி அபாயம் உள்ளதாகக் கூறப்பட்டது.
ஆனால் தனியார் ஒருவர் மிதி வெடி அபாயமுள்ள பகுதியில் எவ்வாறு துப்புரவுப் பணிகளில் ஈடுபடமுடியுமென மக்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன் இது குறித்துப் பூநகரிப் பிரதேச செயலருக்கு மனுவொன்றையும் கையளித்துள்ளனர்.
இந்த நிலையில் ஜெயபுரம் கிராம மக்கள் மீள்குடியமர்வு இடம்பெற்ற நாளிலிருந்து வயல் நிலம் வழங்க வேண்டும் எனக் குரல் எழுப்பி வருகின்றனர்.
வன்னேரிக்குளத்தையும் தேவன் குளத்தையும் இணைக்கும் போது ஜெயபுரம் கிராம மக்களுக்கு வயல் நிலம் வழங்கப்படுவதற்கான சூழல் உருவாகுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## வீதியைப் புனரமையுங்கள்

முல்லைத்தீவு.ஒக்.2
முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு- ஒட்டுசுட்டான் வரையான 13.5 கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி புனரமைக்கப்பட்டு மக்கள் பயணிக்கக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து ஒட்டுசுட்டான் வரையான சுமார் 13.5 கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதி எதுவித புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதனால் இதனூடாக போக்குவரத்துக்களை மேற்கொள்வோர் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக உடையார்கட்டு, தேவிபுரம், வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை ஆகிய பிரதேச மக்களின் வவுனியா நகருக்கான போக்குவரத்துக்களையும் இதேபோல் ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, மன்னாகண்டல், கெருடமடு, கூளாமுறிப்பு போன்ற பகுதி மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். (க-6)

## மணலைப் பெறமுடியாத பயனாளிகள் முல்லை. அரச அதிபருக்கு முறைப்பாடு

துணுக்காய், ஒக். 2
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் இந்தியன் வீட்டுத் திட்டம் கிடைத்த போதிலும் மணலைப் பெறமுடியாத நிலையிலுள்ள பயனாளிகள் அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.
மாந்தைக் கிழக்குப் பிரதேசத்தில் இந்தியன் வீட்டுத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் வீடுகளை அமைப்பதற்குத் தேவையான மணல், மரம் என்பனவற்றைப் பெற முடியாத நிலையில் பயனாளிகள் உள்ளனர். அனுமதிப்பத்திரம் கிடைத்த போதிலும் மணலை எடுக்க முடியாதவாறு கனிய வளத் திணைக்களம் தடுத்து வருவதாகவும் இதனால் இந்தியன் வீட்டுத்திட்டங்கள் திரும்பிச் செல்லும் அபாய நிலை இருப்பதாகவும் மக்கள் முல்லை. அரச அதிபர் நா.வேதநாயகனிடம் கடந்த 26 ஆம் திகதி முறையிட்டுள்ளனர். இது தொடர்பாக வீட்டுப் பயனாளிகள் மேலும் தெரிவிக்கையில்:
எதிர்வரும் மாதம் பருவமழை ஆரம்பிக்கவுள்ளதால் ஆறுகள், குளங்களில் நீர் நிறைந்தால் மணலை எடுக்க முடியாத நிலை ஏற்படலாம். எனவே அதற்கு முன்னர் மணலை எடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு தருமாறு அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தோம் என்றனர்.
இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (க-415)



## குளவிகள் காணப்படின் உடனடியாக அகற்றவும்

### வவுனியாப் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்

வவுனியா,ஒக்.2
பாடசாலைகளில் குளவிகள் காணப்பட்டால் அவற்றை உடனடியாக அகற்றுமாறு வலயக் கல்வி பணிமனையினர் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.
வவுனியாவில் அண்மையில் தேர்தல் கடமைக்காக சென்ற ஆசிரியர் ஒருவர் குளவி கொட்டியதால் உயிரிழந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பாடசாலை வளாகத்தில் சிரமதானங்கள் மேற்கொள்வதுடன் டெங்கு, சுகாதாரச் சீர்கேடுகள், குளவிகளால் பாதிப்பு என்பன ஏற்படாத வகையில் எப்போதும் சுத்தமாக வைத்திருக்குமாறும் இனிமேல் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு அந்தந்தப் பாடசாலை அதிபர்களே பொறுப்பேற்க வேண்டுமென்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் அண்மையில் தேர்தல் கடமைக்காக சென்ற ஆசிரியர் ஒருவர் குளவி கொட்டியதால் பலியானதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே டெங்கு ஒழிப்புக்கெனத் தினமும் பாடசாலை வளாகத்தைச் சுத்திகரிக்கும் நடைமுறையை அமுல்படுத்தியிருந்தபோதும் குளவிக் கூடு இருப்பது பற்றிய அக்கறையின்மையானது உயிர்ப் பலியொன்றுக்கு வித்திட்டமை தொடர்பாக அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டதையடுத்து இந்த நடவடிக்கை உடனடியாக அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## திருடப்பட்டது மாதாவின் திருச்சொரூபம்

### நானாட்டான் பகுதியில் சம்பவம்

மன்னார், ஒக்.2
மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள புனித அடைக்கல மாதா ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 178 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அடைக்கலமாதா திருச் சொரூபம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இனம் தெரியாதவர்களினால் திருடிச் செல்லப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் இரவு 7 மணி வரையுமான நேரப் பகுதிக்குள் குறித்த ஆலயத்தினுள் சென்ற இனம் தெரியாத நபர்கள் கண்ணாடிக் கூண்டினுள் வைக்கப்பட்டிருந்த ஒன்றரை அடி உயரம் கொண்ட அடைக்கல மாதா திருச்சொரூபத்தை வெளியில் எடுத்து அச்சொரூபத்திற்குப் போடப்பட்டிருந்த ஆடைகளைக் கழற்றிப் போட்டுவிட்டு சொரூபத்தைக் கொண்டு சென்றுள்ளனர்.
ஆலயத்தில் பணி புரிகின்ற ஒருவர் ஆலையத்தினுள் சென்று பார்த்த போதே மாதாவின் சொரூபம் அங்கு இல்லாதமை தெரிய வந்தது. உடனடியாக அது குறித்து ஆலயத்தின் நிர்வாக சபையினர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.
இந்த நிலையில் முருங்கன் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த ஆலயத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். இதன் போது கிராமத்தவர்களும் வருகை தந்திருந்தனர்.



மேலும் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் தடயங்களைக் கண்டறியும் பொருட்டு மோப்ப நாய் கொண்டு வரப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மோப்ப நாய் நீண்ட தூரம் ஓடிய போதும் எவ்வித தடயங்களும் அகப்படவில்லை.
இறுதியில் மாதாவின் உடைகளை முருங்கன் பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.
குறித்த சொரூபம் திருடிச் செல்லப்பட்ட சம்பவம் அந்த கிராம மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.
இதேவேளை கடந்த வியாழக்கிழமை அதிகாலை மன்னார் முருங் கன் புராதன ரஜ மஹா விகாரையில் உள்ள 6 புத்தர் சிலைகள் இனம் தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரியில் போட்டிகள்

## நகரசபை ஏற்பாட்டில் நடக்கிறது

தென்மராட்சி, ஒக்.2
சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்கள் இடையே பல்வேறு தமிழ் ஆங்கிலப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
அதற்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிடமிருந்து கோரப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.
மாணவர்களிடையே சித்திரப் போட்டி, வாசிப்புப் போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.
சித்திரப்போட்டி கீழ்ப்பிரிவு (தரம் -4,5), மத்திய பிரிவு (தரம்-6,7,8), மேற்பிரிவு (தரம்-9,10,11) என நடத்தப்படும் ஒவ்வொரு பிரிவிலும் தலா மூன்று மாணவர்கள் வீதம் பங்குபற்றலாம். வாசிப்பு, விழிப்புணர்வு, தகவல், தேடல், நூலக அமைப்பு சார்ந்ததாக சித்திரம் அமைய வேண்டும்.
வாசிப்புப் போட்டி
கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு ஆகியவற்றில் ஒவ்வொரு பிரிவிலும் தலா 3 மாணவர்களும், குறுக்கெழுத்துப் போட்டியில் மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகியவற்றில் தலா 3 மாணவர்கள் வீதம் கலந்து கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆங்கிலப் போட்டிகள் ஆரம்பப் பிரிவு (தரம்-4,5), மாணவர்களுக்கு உரத்து வாசித்தல், கட்டுரை வாசித்தல் ஆகியவையும், கீழ்ப்பிரிவு (தரம்-6,7, 8,9) மாணவர்களுக்கு செய்தி வாசித்தல், குறுக்கெழுத்துப் போட்டி ஆகியவையும் இடம்பெறுமெனவும் இவற்றுக்கான விண்ணப்பப் படிவங்கள்பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பங்களை உரிய காலத்தில் அனுப்பி வைக்கு மாறும் அறிவித்துள்ளார். (வ-9)

# நிலக்கடலை அமோக விளைச்சல்



சாவகச்சேரி, ஒக்.2
மட்டுவில் வயல் வெளிகளில் பயிரிடப்பட்ட (கச்சான்) நிலக்கடலை தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.
கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் பயிரிடப்பட்ட நிலக்கடலை விளைந்த நிலையில் விவசாயிகளால் அறுவடை செய்யப்பட்டு வருகிறது.
இந்த வருடம் அமோக விளைச்சலை பயிர்ச்செய்கை தந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். பன்றிகளின் தாக்கம் மிகக் குறைவு என வும் விவசாயிகள் தெரிவித்தனர். கடந்த வருடமும் அதற்கு முன்னரும் பன்றிகளின் தொல்லையால் விவசாயிகள் வயலில் இதற்காக காவலில் ஈடுபட்டு நிலக்கடலையை பாதுகாத்தமை குறிப்பிடத்தக்கது.
நிலக்கடலை விளைச்சலை அதிகரிக்க சாவகச்சேரி கமநல சேவை நிலையம் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் விவசாயிகளுக்கு உரிய பயிர் மேம்பாடு தொடர்பாக கடந்த காலங்களில் விளக்கமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-138)

# விவசாயிகளின் அவலக் கதை

அக்கராயன், ஒக்.2
கடந்தகாலபோக நெற்செய்கைக்கென வங்கிகளில் கடன்களைப் பெற்ற கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் அவற்றை மீளச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர்.
காலபோக நெற்செய்கையின் போது பெய்த பருவம் தப்பிய மழையினால் நெற்பயிர்களை அறுவடை செய்து எடுக்க முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாத அவல நிலை உருவாகியுள்ளது. அத்துடன் வங்கிகள் கடன்களை செலுத்துமாறு விவசாயிகளுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றன.
தாம் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதற்கு இவ்வாண்டு காலபோக நெற்செய்கையின் அறுவடைக் காலம் வரை கால அவகாசம் வழங்குமாறு விவசாயிகள் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# நல்லொழுக்க தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 2
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தினம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை பட்டினசபை வீதி காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.றோட்டறிக் கழக மக்கள் தொடர்பு இயக்குநர் சி.அனுராஜ், தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற ஓய்வு நிலைப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தி , சட்டத்தரணி திருமதி பிரதீபா கருணாகரன், சங்கானை தெற்கு கிராம சேவையாளர் திருமதி கு.லலிதாம்பாள் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (வ-14)

## நூலக பத்திரிகைப் பகுதி கோண்டாவிலில் விரிவாக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.2
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டா வில் பொது நூலகத்தின் பத்திரிகைப் பகுதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை பத்திரிகைப் பகுதியில் சகல பத்திரிகைகளும் வாசகர்களது பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.
பார்வைக்கு வைக்கப்படும் பத்திரிகைகளில் வினாக்கள் தயாரிக்கப்பட்டு வாசகர்கள் இடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (வ-14)

## சுகாதார விழிப்புணர்வு செயலமர்வு நாளை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான இன்றைய இளைய சமுதாயத்தின் தேவை என்னும் தலைப்பிலான சுகாதார விழிப்புணர்வுச் செயலமர்வு நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரிவினால் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் செயலமர்வில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி, குடும்பநல சேவையாளர்கள் வளவாளர்களாக கலந்து கொள்வர். (வ-9)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 2
ஆலயத்தில் இருந்த பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.
4 ஆம் வட்டாரம், இறுப்பிட்டி, புங்குடுதீவிலுள்ள நயினை குளம் விநாயகர் ஆலயத்தில் குறித்த திருட்டு இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த தவராசா சசிகரன் என்பவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததோடு அவரது வீட்டிலிருந்து கோயில் பொருள்கள் சிலவும் மீட்கப்பட்டன. (வ-4)

## முன்பள்ளி மாணவருக்கு மாறுவேடப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.2
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான மாறுவேடப் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோண்டாவில் பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ள மாணவர்கள் தொடர்பான விவரங்களை கோண்டாவில் பொது நூலகத்தில் ஒப்படைக்குமாறு கோண்டாவில் பொது நூலகர் அறிவித்துள்ளார். (வ-14)

# இன்றைய நாள்

தருவது வித்தியா

உங்களுக்கு எப்படி?

**மேடம்**: தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**இடபம்**: மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.

**மிதுனம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**கடகம்** : திட்டமிடாத செலவுகளும் பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். சிறுசிறு காயங்கள் ஏற்படக் கூடும். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும்.

**சிங்கம்**: யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். எதிலும் பொறுமையுடன் செயல்படப் பாருங்கள்.

**கன்னி**: நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப் படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

**நாளை**

புரட்டாதி-17 வியாழக்கிழமை 03.10.2013
திதி: திரயோதசி காலை 06.45 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப.04.24 வரை
சுபநேரம்: 07.32 - 09.02 வரை
இராகுகாலம்: 0.32 - 03.02 வரை

**துலாம்**: சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**விருச்சிகம்**: துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். விருந்தினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு**: உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்**: வெளியூர் பயணங்களால் பயனடைவீர்கள். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

**கும்பம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

**மீனம்**: பழைய நல்ல சம்பவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வாகனச் செலவுகள் நீங்கும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 8 | 3 | | | | 4 | |
| | | 3 | | 4 | | | | |
| 7 | 4 | | | | | | 6 | |
| | | 9 | 6 | | | | 8 | 4 |
| 4 | | 5 | 8 | 3 | 1 | 2 | | 7 |
| 1 | 8 | | 9 | | 4 | 5 | | |
| | 1 | | | | | | 7 | 8 |
| | | | | 1 | | 6 | | |
| | 3 | | | | 8 | 4 | | 5 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 7 | 2 | 8 | 1 | 4 | 5 | 9 |
| 4 | 2 | 1 | 7 | 9 | 5 | 6 | 8 | 3 |
| 5 | 8 | 9 | 4 | 3 | 6 | 2 | 7 | 1 |
| 9 | 1 | 8 | 3 | 6 | 7 | 5 | 2 | 4 |
| 3 | 7 | 4 | 1 | 5 | 2 | 9 | 6 | 8 |
| 2 | 6 | 5 | 8 | 4 | 9 | 3 | 1 | 7 |
| 1 | 9 | 3 | 6 | 2 | 8 | 7 | 4 | 5 |
| 7 | 5 | 6 | 9 | 1 | 4 | 8 | 3 | 2 |
| 8 | 4 | 2 | 5 | 7 | 3 | 1 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பை பாதாளத்துக்குள் தள்ளுவதற்கு அரசு முயற்சி

"உலகிலுள்ள மிகவும் கேவலமான நகரான பாங்கொங் நகரைப் போன்று, கஸினோ சூதாட்ட நிலையத்தை நிறுவி கொழும்பை யும் அவ்வாறு மாற்றி யமைத்து, படுபாதாளத்துக்குள் தள்ள அரசு முயற்சிக்கிறது" என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் குற்றஞ்சாட்டினார்.

நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு தலைநகர வீதிகளில் இரண்டு வாரங்களுக்கு எந்தவொரு ஓட்டோவும் பயணிக்க இயலாத விதத்தில், அனைத்து ஓட்டோக்களையும் முடக்க அரசு நடவடிக்கை எடுத் துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்க அலுவலகத்தில் திங்கட்கிழமை இடம் பெற்ற அந்தக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பைப் பொறுத் தவரைத் தற்போது கோடீஸ்வரர்கள் மட்டுமே வாழக் கூடிய ஒரு நிலை காணப் படுகிறது. இந்தநிலை யில், அரசு இங்கு கஸினோ சூதாட்ட நிலையத்தை நிறுவி மேலும் இங்குள்ளவர் களை நிம்மதியாக வாழ விடாமல் செய்ய முயற்சிக்கின்றது.

இந்த கஸினோ நிலை யத்தை முதலில் டிஆர். விஜயவர்த்தன மாவத் தையில் மாத்திரமே வை நிறுவுவதற்காக அனுமதி வழங்கப்பட்டி ருந்தது. ஆனால், தற் போது அபிவிருத்தி என்ற பெயரில் கொழும்பு கொம்ப னித்தெரு மற்றும் ஜவா வீதிகளிலும் அரசு இந்த சூதாட்ட நிலையத்தை நிறுவ முயற்சி செய்து வருகி றது.

இந்தச் செயற்றிட்டத் துக்காக அங்குள்ள குடியிருப்புகளை அகற் றவும் அரசு மும்முர மாகச் செயற்பட்டு வருகிறது.

கெஸினோவை அமைப் பதன் மூலம் கொழும்பு நகரம் முழுவதும் பாங் கொக்கைப் போல மிக வும் கேவலமான நகராக மாற்றமடை யக் கூடிய சாத்தியக் கூறுகளும் காணப் படுகின்றன.

பாங்கொக்கை இர வில் தூங்காத நகரம் என்றும் சொல்லலாம். அந்தளவுக்கு அங்கு கஸினோ சூதாட்ட நிலையங்கள் அதிக ரித்துக் காணப்படுகி ன்றன. அதேபோன்று இங்கும் ஏற்பட்டால் நமது கலாசாரத் துக்கே அது கேள்விக் குறியாக அமைந்து விடும்.

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

அத்தோடு நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டை முன்னிட்டு அரசு மில்லியன் கணக்கில் செலவு செய்கின்றமை அனைவருக்கும் தெரிந்த விடய மாகும். ஆனால், இதற்காக தலை நகர வீதிகளில் இரண்டு வாரத்திற்கு எந்தவித ஓட்டோவும் பயணிக்கூடாது என அனைத்து ஓட்டோக்களையும் அரசு முடக்கவுள்ளது. இது பிழையான ஒரு செயற்பாடாகும்.

கொழும்பிலுள்ள பெரும் தொகையானோர்கள் தனது ஜீவனோபாய தொழிலாக ஓட்டோ ஓட்டித்தான் சம் பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் அரசின் இதுபோன்ற செயற்பாடானது அவர்களின் வயிற்றில் அடிப்பதற்கு சமமானதாகும். இப்படி யான ஒரு செயலை செய்து அந்த மாநாட்டை நடத்த வேண்டிய தேவை தான் என்ன? அரசு மக்களைப் பற்றிச் சற்று சிந்தித்து செயற்பட வேண்டும் - என்றார். (ச)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நடராசா

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகஸ்தர் - யாழ். மாநகரசபை, நிர்வாகப் பொறுப்பாளர் - வட மாகாண புற்றுநோய்ச் சங்கம், முன்னாள் பரிபாலன சபைத்தலைவரும், தேர்த்திருப்பணிச் சபைத் தலைவரும் - நாரந்தனை, சரவணை, கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்)



முகமாலை, எழுதுமட்டு வாழைப் பிறப்பிடமாகவும், சரவணை மேற்கு, வேல ணையை வதிவிடமாகவும், யாழ்ப்பாணம் - திருநெல்வேலியை தற்போது நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று (01.10.2013) செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந் தையா மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் (சிறியதாய்) வளர்ப்புமகனும், காலஞ்சென்றவர்களாகிய நாக லிங்கம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லோகாம்பிகை யின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், கௌரி (அதிபர்- யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) அவர்களின் பாசமிகு தந்தையும், பரந்தாமன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்) அவர் களின் அன்பு மாமனும், மாதுமையின் (உயர் தர மாணவி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) பாசமிகு பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, குலசேகரம்பிள்ளை,தம்பிராசா மற்றும் பேரம்பலம், பாக்கியம் ஆகியோ ரின் அன்பு சகோதரரும், செல்லம்மா, தங்கம்மா, நாகம்மா, இராசம்மா, காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, தியாகராசா, வரதராசன், திலகவதி, பத்மநாதன், தனபாலன் ஆகி யோரின் அன்பு மைத்துனரும், திரு.திருமதி வன்னியசிங்கம் அவர்களின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2013) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியை களுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 15/2, தாளையடிலேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7440

(32214) (45.6.3)

தகவல்:
**வ. பரந்தாமன்**
**(மருமகன்)**

## சோமநாதர் கிருஸ்ணராஜா

(கிராமசேவக உத்தியோகத்தர் - அல்வாய் வடமேற்கு, மந்திகை )



தேவதானம் துன்னாலை வடக்கைப் பிறப் பிடமாகவும் துன்னாலை கிழக்கை வதிவிட மாகவும் கொண்ட சோம நாதர் கிருஸ்ண ராஜா நேற்றுமுன் தினம் (30.09.2013) திங்கட்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் ஜெயக்குமாரியின் அன்புக் கண வரும், நிஷாந்தினி, கிருஷாந்தினி, மகாராஜ் ஆகியோரின் அன்புத் தந்தை யும், செல்வக்குமார் (சாரதி - சுகாதாரத் திணைக்களம் ) முகுந்தன் (சாரதி - மத்திய வங்கி), ஆகியோரின் அன்பு மாமனும், நவரத்தினம், தையல்நாயகி ஆகியோரின் மருமகனும், அஸ்வினி, அனோக் சன், அனுராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் சோமநாதர் - காலஞ் சென்ற இலட்சுமியம்மா தம்பதியரின் புதல்வனும், சிவராசா (ஓய்வு நிலை கிராமசேவையாளரும், சமாதான நீதிவானும்), குமரதாசன் (ஆசிரியர், யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை), கணநாதன் (வீடமைப்பு உதவிப் பரிசோதகர்), பத்மநாதன் (தாதிய உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை), புவனேஸ்வரி (ஜேர்மனி), சரவணபவன் (முகாமை யாளர் - கஜமுகன் பல்பொருள் வாணிபம் - துன்னாலை) தேவராணி, யோகராணி, அருள்ராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2013) புதன்கிழமை பிற்பகல் 2 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கியான் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(29541) (45.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அல்வாய் வடக்கு (J/400), மந்திகை (J/415) ஆகிய பிரிவுகளுக்கு கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றிய

## சோமநாதர் கிருஸ்ணராஜா

அவர்கள் 30.09.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி/12616) (4.6.3)

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

பிரதேச செயலரும்,
அனைத்து ஊழியர்களும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் **சோ. கணநாதன்**
அவர்களின் சகோதரர்

## சோமநாதர் கிருஸ்ணராஜா

*(கிராம சேவகர்)*

அவர்கள் அகால மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**யாழ்ப்பாணம்.**

(32204)(7,6,3)

# மரண அறிவித்தல்

## தம்பையா செல்லையா



தொட்டிலடி, சங்கானை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா செல்லையா நேற்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வர்களான கந்தையா-தெய்வானை தம்பதியரின் மரு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான ராசம்மா இராசரத்தினம், அழகரத் தினம் சேனாதிராசன், பூரணம் தம்பிராசா, அப்புத்துரை மற்றும் மனோன்மணி, தங்கம்மா ஆகியோரின் சகோ தரரும், ஞானேஸ்வரி, செல்வராணி, சற்குணலீலா, விக்கினேஸ்வரன், லலிதாம்பாள், சற்குணராசா (ராசன் தொட்டிலடி), ஞானசவுந்தரி, சகுந்தலாதேவி, காலஞ் சென்ற குகனேஸ்வரன் மற்றும் நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும்,சிதம்பரநாதன், விக்கினேஸ்வரன், சந்திரசேகரம், சிவலிங்கம் (பிள்ளையார் ஓட்டோ-தொட்டிலடி), ஜெயக்காந்தன், ராமலிங்கம், சுபாசினி, செல்வ ராணி(யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2013) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லை வீதி,
தொட்டிலடி, சங்கானை.

(32208)(6.3.11)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேம்படி மகளிர் பரிசளிப்பு தினம் இன்று

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு தினம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் திருமதி கே.பொன்னம்பலமும் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவி குருஜி நித்தி கனகரத்தினமும் கலந்து கொள்வர்.

## இன்று கூடுகிறது இடமாற்றச் சபை

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் இருந்து ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ள ஆசிரியர்களின் விண்ணப்பங்களை ஆராய்வதற்கான வலயமட்ட இடமாற்றச் சபை இன்று புதன்கிழமை கூடவுள்ளது. வடமராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இந்தச் சபை கூடவுள்ளது. (ந-35)

## மீசாலை நூலகத்துக்கு வாகனத் தரிப்பிடம்

மீசாலை பொது நூலகத்தில் வாச கர்களின் நலன்கருதி வாகனத் தரிப்பிடம் ஒன்று அண்மையில் அமைக் கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்தத் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நூல் நிலையம் சகல வசதிகளுடனும் இயங்கி வருகின்றது.

வாசகர்களின் வாசிப்புத் தேவையை நிறைவேற்ற சகல வசதிகளையும் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட நூலகமாக இது விளங்குகின்றது. (ந-122)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
28.04.1955

மறைவு
02.09.2013

### யோசப் கமலநாதன்
(போனா)

(ஓய்வுபெற்ற விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி)

காலமெல்லாம் காத்தவரே
கைபிடித்த என்னவரே
காத்திருக்க வைத்து சென்றதேனோ?
காண விழி துடிக்கிறதே!
முத்தான முத்துக்கள் மூவரையும்
முழுமூச்சாய் வளர்த்தவரே!
மூவரின் ஏற்றம் கண்டு
முழுமதியாய் மலர்ந்தவரே!

முத்தான வாழ்வு அமைந்ததென்று நாம் இருந்தோம்
கொத்தாக அமைந்த நம் குடும்பக்கூட்டை விட்டு
சொல்லாமல் நீர்மட்டும் பறந்ததேனோ?

02.09.2013 அமரத்துவமடைந்த எம் குடும்பத் தலைவனின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு எம்மை ஆறுதற்படுத்திய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் அவரது இறுதிச் சடங்கில் பங்குபற்றிய அனைத்து உறவுகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

34, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

(32203)(10,6,3)

## எட்டாம் ஆண்டு நினைவில்

அன்னை மடியில்
26.04.1953



ஆண்டவன் அடியில்
01.10.2005

### அமரர் பொன்னுத்துரை சரவணபவன் (ராசா)

மண்டைதீவு-6

திதி : அபரபக்க திரியோதசி
[2013.10.02]

"நாலிரண்டு ஆண்டுகள் நாட்கணக்கில் வந்ததப்பா
நாளெல்லாம் நின்நினைவே நிறைந்துள்ள
எங்களுக்கோ காலங்கள் நகர்ந்தாலும்
கவலை என்றுமே தீராதே – நாம்
நித்திலத்தில் வாழும் வரை நின் நினைவை
நிறைவாக்கி வாழுகின்றோம் ஐயாவே!
உன் ஆத்மாசாந்தி பெற ஆண்டவனை
அனுதினமும் வேண்டி நிற்கும்"

59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

அன்புத் தாயார்,
அன்பகலா சகோதர, சகோதரிகள்,
அன்பு மனைவி, அருமைச் செல்வங்கள்.

## சித்திரக் கண்காட்சி

கொக்குவில் இந்துக் கல்லூரியின் சித்திரக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் சித்திர அறையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகப் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தனும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ரி.துஷ்யந்தனும் கலந்துகொள்வர். (ந)

## பொலிஸாரின் நடவடிக்கையில் சிரமங்கள்

வவுனியா ஏ-9 வீதியில் குவிக்கப்பட்டு கடமையில் இருக்கும் வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் நடவடிக்கைகளால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் வவுனியா நகரத்துக்கும் ஓமந்தை, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் ஆகிய இடங்களுக்குமிடையில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் தரித்து நிற்கும் வீதிப் போக்குவரத்து பொலிஸார் அடிக்கடி வாகனங்களை இடைநிறுத்திச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் வாகனங்களில் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-402)

## மரண அறிவித்தல்

### முத்தையா ஜெகநாதன்

காரைநகர், சந்தம் புளியடியைச் சேர்ந்த முத்தையா ஜெகநாதன் 30.09.2013 திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அப்போதிக்கரி முத்தையா -இலட்சுமியம்மா தம்பதியரின் அன்பு மகனும், நகைக்கடை நல்லதம்பி- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகதீசன், நிறஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், துளசி, மோகன்ராம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கவீஷனின் பாசமிகு தாத் தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் இன்று (02.10 .2013) புதன்கிழமை மு.ப 10 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 03.10.2013 காலை 8.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெ.ஜெகதீசன் (மகன்)

(C/12354)
(6.3.11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
09★05★1937



உதிர்வு
02★09★2013

### திருமதி பகவதி கதிரவேலு

கடந்த 02.09.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.10.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் துயரச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலகடி,
கோப்பாய் வடக்கு.
077 968 7678

குடும்பத்தினர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(32213)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 * 03 * 1935

மறைவு
13 * 10 * 2012

### அமரர் முருகுப்பிள்ளை கறுவல்தம்பி
(பிரபல அண்ணாவியார்)

அன்னாரின் நினைவாக இன்று (02.10.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மருதங்கேணி வடக்கு,
தாளையடி.

குடும்பத்தினர்.

(32167)(4.3.6)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### சின்னத்துரை இரத்தினம்
(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர்)

தோற்றம்
15.04.1947

மறைவு
01.09.2013

எமது அன்புத் தெய்வம் இறைவனடி சேர்ந்த செய்திகேட்டுப் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து ஆறுதல் அனுதாபம் நேரிலும் தொலைத் தொடர்பு மூலமும் தெரிவித்தோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (02.10.2013) புதன் கிழமை காலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மு.ப.11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலர் மடம், கரணவாய் மத்தி, கரவெட்டி.

மனைவி, பிள்ளைகள்.

(32536)(6.3.4)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## நினைவஞ்சலி
8 ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு

தோற்றம்
28.09.1928



தோற்றம்
22.12.1933

மறைவு
29.12.2005

மறைவு
13.10.2012

அமரர் மினியாயபிள்ளை செல்லத்துரை — திருமதி பாக்கியம் செல்லத்துரை

அன்பு முகம் கொண்டு ஆறுதல்
பொழிந்து இவ்வுலக வாழ்வில்
தூண்கள் என துணை நின்ற இதய
தெய்வங்களே! நீங்கள்
இல்லாமல் போகவில்லை
இறையோடு இணைந்து விட்டீர்கள் – எம்
நினைவோடு கலந்து விட்டீர்கள்

57/37, திருமகள் வீதி.
அரியாலை.

மு. நீலவண்ணன்,
காந்தியூர், புலோலி, பருத்தித்துறை.

(29542) (4.5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள்



வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத் திட்டத்தின் கீழ் 90 பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு திங்கட்கிழமை காத்தான்குடி பிரதேச அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் காத்தான்குடி அரச கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.எம்.ஐ. எல். சாகலசூரிய பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கி வைத்தார். (ச)



கிழக்கு பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் பட்டப் படிப்பை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்திலுள்ள நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், துணைவேந்தர் கிட்னன் கோவிந்தராஜா கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

### வீடு வாடகைக்கு உண்டு



பலாலி வீதியில் உள்ள விவசாய பயிற்சி நிலையத்துக்கு (Farm School) முன்னால் 200m தூரத்தில் அழகிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. இது அலுவலக பாவனைக்கும் உகந்தது. சகல வசதிகளுடன் இரண்டு தளங்களை கொண்டது. அத்துடன் வாகனத்தரிப் பிடம் மற்றும் இணய வசதி, மின்சார வசதி, தொலைபேசி வசதிகள் போன்றன உள்ளன. 3450 சதுரஅடி விஸ்தீரணம் கொண்டது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத் தக்கது.

தொடர்புகளுக்கு: 077 2699960 அல்லது 077 1258025

இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும் (32231) (10,14)

# புத்தளத்தில் மீண்டும் தேர்தலை நடத்துக

## நீதிமன்றில் மனுத்தாக்கல்

புத்தளம் மாவட்டத்தின் புனித அன்ரு பாடசாலைகளில் இடம் பெற்ற வாக்கெண்ணும் நடவடிக்கைகளில் மோசடி இடம் பெற்றுள்ளது என கூறி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், மீண்டும் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனசெத முன்னணியின் தலைவர் பத்தரமுல்லே சீலரதன தேரரினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர், உதவி தேர்தல்கள் ஆணையாளர், புத்தளம் தெரிவத் தாட்சி அதிகாரி மற்றும் தேர்த லில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் புத்தளம் அன்ரு பாடசாலையிலிருந்து சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமான புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டு, நீதவான் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டதாக பத்தரமுல்லே சீலரதன தேரரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் சட்ட ரீதியில் முன்னெடுக்கப்படவில்லை எனக் கோரி 10 பேர் சத்திய கடதாசி முன்வைத்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடாத்துவதாக தேர்தல்கள் ஆணையாளர் உறுதியளித் துள்ளார் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய வாக்காளர்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளமை யினால், புத்தளம் மாவட்டத்தில் வாக் கெண் ணும் நடவடிக்கைகளின் பின் னர் வெளியிடப்பட்ட பெறுபேறு களை ரத்து செய்வதற்கு ஆணையிடுமாறும் சீலரதன தேரர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

### நீடூழி வாழ வாழ்த்துக்கள்



75வது பிறந்ததினம்

திருமதி பரிமளகாந்தி நாகலிங்கம்

HAPPY BIRTH DAY

02-10-1938

அன்போடும் பாசத்தோடும் இன்முகத்துடன் என்றும் எம்மை உயரவைத்து அரவணைக்கும் எம் அன்னையை வாழ்த்துவோம்.

பாசமான பிள்ளைகள்
ஆசையான மருமக்கள்
அன்பான பேரப்பிள்ளைகள்.

021 321 5855
குமரகோட்டம், மூளாய், சுழிபுரம்.

### வாழ்த்துக்களும் பாராட்டும்



கோரேஸ் டிலான் இறையின்பன் போல்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த முள்ளியவளை தமிழ் வித்தியாலய மாணவன் கோரேஸ் டிலான் இறையின்பன் போல் அவர்களை கல்வியில் மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

Best Wishes

செல்வா தாத்தா
நிமலரஞ்சன் அங்கிள்

(C/12518)(10,6)

### யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையில் 2013 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.




100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விவரம்:

1. சு.சங்கஜா - 153,
2. ந.றக்ஸ்ஷனா - 149,
3. த.தனோஜன் - 148,
4. சு.கிருஷாந் - 146,
5. த.அபினா - 141,
6. இ.ரதன் - 140,
7. த.சங்கர்சன் - 140,
8. வ.ஜனார்த்தன் - 135,
9. ச.கஜானா - 121,
10. ர.ஷபீனா - 119,
11. ர.றஜிந்தன் - 116,
12. சி.சிவானுஜசர்மா- 115,
13. ந.மதுஷா - 115,
14. தே.துஷாந் - 114,
15. ச.நிரூபன் - 108,
16. ம.திவ்வியன் - 105
17. ஜெ.திலக்சனா - 104
18. பி.லஜிந் - 100

இம் மாணவர்களுக்குக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(32215)(5,6)

வாழ்த்துவோர்:
யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலைச் சமூகம்,
கந்தரோடை, சுன்னாகம்.

### கார் விற்பனைக்கு

NP HT - xxxx Hyundai Sonata (H-Matic)இலக்க கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0783015882

### வீடு வாடகைக்கு

கோண்டாவில் சந்திக்கு அருகில்

தொடர்பு: 077 958 1531

(32230) (10,14)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல புதிய நிலையில் உள்ள Bajaj Discover 135 (சிவப்பு/ கறுப்பு) VF-xxxx உடனடி விற்பனைக்கு

தொடர்பு: 077 6784455

### பெயர் மாற்றம்

கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட மனோசா பாலகுமார் ஆகிய நான் எனது பெயரை மனோஜா பாலகுமார் என மாற்றிக் கொள்கின்றேன்.

மனோஜா பாலகுமார்

(29543) (10,6)

### Green card lottery



2015 அமரிக்க லொத்தர் விண்ணப்பம் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

திருமுருகன் கொம் நெற்

271A, கே.கே.எஸ் வீதி, யாழ்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி,
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், கோண்டாவில், தாவடி, இணுவில், சுதுமலை, மருதனார்மடம், உரும்பிராய், திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.

T.P: 075 070 7689, 077 465 5359

(32217) (10,6)

### Nano கார் விற்பனைக்கு

KO-XXXX தொடரிலக்கமுடைய Nano Car விற்பனைக்கு உண்டு.

(32218) தொடர்பு: 077 [illegible]5926

## வலிப்பு ஏற்பட்டு சிறுமி உயிரிழப்பு

தென்மராட்சி, ஒக். 2

சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்ட நேற்று 13 வயதுச் சிறுமி காய்ச்சலால் ஏற்பட்ட வலிப்புக் காரணமாக உயி ரிழந்தார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி டச்சு வீதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த லோகேந்திரன் நதீஸா (வயது 13) என்பவரே உயிரிழந்தவராவார். பிறந்தநாள் தொடக்கம் மாற்று வலுவுடையவராக (மூளை வளர்ச்சியின்மை)காணப்பட்ட சிறுமிக்கு இந்தச் நேற்று முன்தினம் காய்ச்சல் காணப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றதாகவும் இரவு திடீரென வலிப்பு ஏற்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது வழியில் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

### வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றுக்கு கீழ்வரும் பணியாள்கள் தேவை.

1. கணக்காளர்-: *(கணக்கியல் துறை சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.)*
2. சிட்டை எழுதுநர்
3. பொதி கட்டுபவர்கள்

(32225-23-14)

உடன் தொடர்புகளுக்கு: 0778730114

### யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை தரம் - 06 அனுமதி 2014

2014இல் தரம் 06இல் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பமுடிவு திகதி: 15.11.2013

(32222) (10,14)

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் திருமதி கௌரி பரந்தாமன் அவர்களின் அன்புத் தந்தை க. நடராசா அவர்கள்

நேற்று (01.10.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்ததனையிட்டு அன்னாரது குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொண்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை, கல்வியங்காடு.

(32234) (10,14)

பாடசாலைச் சமூகம்,

### தவறிவிட்டது

கிளிநொச்சி செலான் வங்கிக்கும் சதொசவுக்கும் இடையே A9 வீதியில் கறுப்பு நிற பேர்ஸ் ஒன்று தவறி விட்டது. யூனியன் இன்சூரன்ஸ் காட் உட்பட பெறுமதி யான பொருள்களும் அதனுள் இருந்தன. தயவு கூர்ந்து எடுத்தவர்கள் தந்துதவுமாறு வேண்டுகிறேன்.

(37542)(10,6) தொடர்புகளுக்கு: 077 3487146, 0770338898

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கை



எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் பிறந்து சரவணை கிழக்கில் வாழ்க்கைத் துணையுடன் வாழ்ந்து தற்போது திரு நெல்வேலியில் வாழ்ந்து வந்தவருமான நாரந்தனை சரவணை கர்ணந்தோட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் முன்னாள் தலைவரும் தேர் திருப்பணிச் சபையின் தலைவரும் சமூகத் தொண்டருமாகிய

அமரர் **கந்தையா- நடராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார், உற்றார், உறவினர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாரந்தனை சரவணை,
கர்ணந்தோட்ட
ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோயில்.

**ஆலய பரிபாலன செயலாளரும் தேர்த்திருப் பணிச் சபையினரும்.**

(32226-23-14)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கீர்த்தனா சதீஸ்குமார்



சதீஸ்குமார் கீர்த்தனாவின் அகால மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அன்னாருக்கு எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கை யாக்குவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினரும்,
சிறீநதியா நகைமாளிகை,
சிறீநதியா டிஜிற்றல் கலர்லாப்,
உரிமையாளரும் ஊழியர்களும்.

(சி/12523)
(10,14)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் இரத்தினம் (சிவப்பி)



கட்டைப்பிராய் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் நாகபூசணி அம்மன் கோயில் வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இரத்தினம் (சிவப்பி) நேற்றுமுன்தினம் (30.09.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்காளான இராமலிங்கம் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் -முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற துரைவீரசிங்கத்தின் சிறிய தந்தையும், வசந்தராணியின் மாமனும், கணநாதன் சுபாஜினி(ஜேர்மனி), சுதாகரன் மஞ்சுளா (ஜேர்மனி), ஆறுமுகசாமி சுமதினி (ஜேர்மனி), மதிமோகன் சுகந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஸாம்சன், சஹானா, பானுஜன், ஜதுசன், அகர்வா, அனுஜா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2013) வியாழக்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூசணி அம்மன் வீதி, கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## குகையில் கிடைத்த எச்சங்கள் பிரிட்டனுக்கு அனுப்பிவைப்பு

கொழும்பு.ஒக்.2

பலாங்கொடை, கூரகல குகையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச் சியில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் ஆய்வுகளுக்காக பிரிட்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அகழ்வாராய்ச்சிகளின்போதுகிடைத்த உயிரினங்களின் எச்சங்களை பிரிட்ட னின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக நிபுணர்கள் பரிசோதித்தனர் என்று தொல்பொருள் திணைக்களம் அறி வித்துள்ளது.

பின்னர் மேலதிக ஆய்வுகளுக்காக அந்த எச்சங்களை அவர்கள் பிரிட்ட னுக்கு எடுத்துச் சென்றனர் என்று திணைக்களத்தின் சப்ரகமுவ மாகாண உதவிப் பணிப்பாளர் திஸ்ஸ மதுரப் பெரும குறிப்பிட்டார்.

பலாங்கொடை, கூரகல குகையிலிருந்து சுமார் நான்காயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந் ததாக அனுமானிக் கப்படுகின்ற உயிரினங்களின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. இதில் மீன்வகைகள், நத்தைகள் மற்றும் ஆமைகளின் எச்சங்களும் அடங்குகின்றன.

இதனைத் தவிர மேலும் பல விலங்குகளின் எச்சங்களும் அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்பட்டன என்று தொல் பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த அகழ் வாராய்ச்சிகளின்போது கண்டு பிடிக்கப்பட்ட ஆதி மனிதனின் எலும்புக்கூடு தொடர்பான பரிசோதனையும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ச)

## 31 மீனவர்கள் விடுதலை

கொழும்பு.ஒக்.2

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த காரைக்கால் மற்றும் நாகை மாவட்ட மீனவர்கள் 31 பேரை விசாரணைக்குப் பின்னர் திருகோணமலை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த ஜுலை மாதம் 30 ஆம் திகதி கச்சத்தீவு அருகே மீன் பிடித்தபோது 65 மீனவர்களை இலங் கைப் படையினர் கைது செய்தனர்.

கடந்த 4 ஆம் திகதி 34 மீனவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில், எஞ்சிய மீனவர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். (ச)

## 17 ஆண்டுகளில் முதியோரின் எண்ணிக்கை இரு மடங்காகும்

கொழும்பு.ஒக்.2

2030 ஆம் ஆண்டாகும்போது இலங்கையில் தற்போதுள்ள முதியோரின் எண்ணிக்கை இருமடங்காகும்என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள மக்கள் தொகையில் 10 வீதமானோர் முதியவர்கள் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## இலங்கை விஞ்ஞானிகளுக்கு சர்வதேச சமூகத்தின் பாராட்டு

கொழும்பு.ஒக்.2

சிவப்பு மழை மற்றும் அரலகங்வில பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட எரிகல் குறித்து இலங்கை விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வு சர்வதேச சமூகத்தின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

சர்வதேச விண்வெளி மாநாட்டின் போது இந்த ஆய்வுகள் தொடர்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது என்று மருத்துவ ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்க குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டின்போது காடிவ் பல்க லைக்கழகத்துடன் இணைந்து சிவப்பு மழை மற்றும் அரலகங்வில எரிகல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அரலகங்வில பகுதியில் மேற்கொள் ளப்பட்ட ஆய்வுகள் தொடர்பான தொகுப்பை இணையத் தளத்தில் பலர் பார்வையிட்டுள்ளனர் என்று மருத்துவ ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பில் இத்தகைய தொகுப்பொன்று தயாரிக்கப்பட் டுள்ளமை இதுவே முதற்தடவை என்று மருத்துவ ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது. (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அல்வாய் வடக்கு மந்திகை கிராம உத்தியோகத்தருமாகிய

**சோமநாதர் கிருஸ்ணராஜா**
(கிராம உத்தியோகத்தர் தரம்1)

(30.09.2013) திங்கட்கிழமை அகால மரணமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்/செயலாளர்,
யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம். யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரிய நண்பன் திரு சதீஸ்குமார் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி கீர்த்தனா சதீஸ்குமார்**

அவர்கள் 30.09.2013 திங்கட்கிழமை அகால மரணமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை. கல்லூரிச் சமூகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

எங்கள் அன்புத் தெய்வம்

அமரர் திருமதி **செல்லத்துரை பாக்கியம்**

தோற்றம்
22
12
1933

மறைவு
13
10
2012



எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றதம்மா!
ஒரு நாள் சென்றது போல் உள்ளதம்மா!
உன் திருமுகத்தைக் காணாதது போல்
துடிக்குதம்மா!
எங்கள் மேல் கொண்டிருந்த பாசங்களை விட்டு
ஏன் தான் தனி வழியே சென்றாயம்மா?
காலமெலாம் உமக்காக
கண்களில் நீர் நிரம்பி வழியுதம்மா!

நீங்கள் பிரிந்து எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சை விட்டு ஆறாதம்மா எம் துயர்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(32233-23-14) உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத் தொடுவாய் காணி அபகரிப்பை விரைவில் தடுத்துநிறுத்த வேண்டும்

## நேரில் பார்வையிட்ட மாகாணசபை உறுப்பினர்



கொக்குத்தொடுவாய் கோட்டைக் கேணி பிள்ளையார் கோயில் அருகில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பு நட வடிக்கைகளை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு இதனைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரி வித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கொக்குத் தொடுவாய் பிரதேசம் அமைந் துள்ளது. இதன் கரையோர எல்லைப் பகுதியில் கோட்டைக் கேணி பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது.

இந்தக் காணிகள் 1973 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு உப உணவுப் பயிர்ச் செய்கை மேற் கொள்வதற்கு அரசால் பங்கிட்டு வழங்கப்பட்டன.

போர் நடவடிக்கைகள் காரண மாக தமிழ் மக்கள் அந்தப் பகுதி களில் இருந்து வெளியேறியி ருந்தனர். தற்போது அதற்கு அரு கிலுள்ள பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

குறித்த காணிகள் மிதிவெடி அபாயமுள்ள பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் குறித்த காணி களில் பெரும்பான்மை இன மக்களை குடியேற்றும் நோக் கோடு காடழிப்பு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

இந்தப் பகுதிகளுக்கு நேரடியா கச் சென்ற மாகாண சபை உறுப் பினர் துரைராசா ரவிகரன், மக் களுடன் கலந்துரையாடல் நடத்தி விவரங்களைத் திரட்டினார்.

இதனைத் தடுத்து நிறுத்துவதற் குரிய சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-5)

# வடக்குக்கு அதிகாரங்களை வழங்க மறுத்தால் ஆபத்து

## இலங்கை அரசை எச்சரிக்கிறது பா.ஜ.க.

இலங்கை அரசு, வடக்கு மாகாண சபைக்குக் காணி பொலிஸ் அதி காரங்களை வழங்க மறுத்தால் வரலாறு மீளவும் திரும்பாது என் பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லையென்று பாரதீய ஜன தாக் கட்சியின் மூத்த தலைவர் களுள் ஒருவரான இல. கணே சன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செவ் வாய்க்கிழமை காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றியீட்டியுள்ளது. அங் குள்ள மக்கள் அளித்த தீர்ப்பை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று அவர் அங்கு கூறினார்.

"இலங்கை அரசோ, மக்கள் ஜனநாயக ரீதியில் வழங்கிய தீர்ப்பை ஏற்கமறுக்கின்றது. மாகாண சபைகளுக்குரிய காணி பொலிஸ் அதிகாரங் களை வழங்க இலங்கை அரசு மறுத்து வருகின்றது. இலங்கை அரசு இவ்வாறு வழங்க மறுக்கு மாக இருந்தால் வரலாறு மீண் டும் திருப்பாது என்பதற்கான எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை" என்றும் இல. கணே சன் மேலும் குறிப்பிட்டார். (கு-5)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### குர்ஷித்

வுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இலங்கைக்கான உத்தியோக பூர்வபயணத்தை மேற்கொண்டு எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட் கிழமை கொழும்புக்கு வருகை தரும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மறுநாள் 8 ஆம் திகதி யாழ்ப் பாணத்துக்கு வரவுள்ளார்.

8 ஆம் திகதி நண்பகல் யாழ்ப் பாணத்துக்கு வருகை தரும் சல்மான் குர்ஷித், இங்கு பல் வேறு தரப்பினரையும் சந்தித் துக் கலந்துரையாடவுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திர சிறி யையும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரனையும் யாழ்ப்பாணத்தில் வைத்து தனித்த னியே அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள் ளார்.

அத்துடன் இந்திய அரசின் நிதி யுதவியில் இங்கு மேற்கொள் ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் அவர் பார்வை யிடுவதுடன் அன்று மாலையே கொழும்பு திரும்பவுள்ளார் எனத் தெரியவருகிறது. (கு-5)

### பாலியல்

சமகால மக்கள் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்பட்டதாகவும், இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறை கள் மற்றும் அதிகாரத் துஷ்பிர யோகம் பற்றி விவாதிக்கப்பட்டு மேற்படி தீர்மானம் நிறைவேற் றப்பட்டதாகவும் அதன் தலை வர் வி.கமலதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது புதிதாக வந்துள்ள நிதிக் கம்பனிகளும், தனியார் வங்கிகளும் மக்களுக்கு இலகு வான முறையில் கடன் வழங்கி வருகின்றன. பெரும்பாலும் வறுமையில் வாடும் குடும்பங் கள் கடன் திட்டங்களில் உள் வாங்கப்படுகின்றன. இந்தக் குடும்பங்கள் தவணைக் கடன் தொகையை மீளச் செலுத்தாத நிலையில் அவர்கள் வீடுகளுக் குக் கால நேரம் பாராது செல் லும் வங்கி அதிகாரிகளும், நிதி நிறுவனங்களின் ஊழியர்க ளும் கெட்ட வார்த்தைகளால் திட்டுகின்றனர். அது மட்டும் அல்லாமல் வீட்டில் இருக்கும் பெண்களிடம் பாலியல் ரீதியாக லஞ்சம் கோருகின்றனர். இத னால் குடும்பங்களுக்கிடையே கணவன் மனைவி சச்சரவு, தற்கொலை போன்ற சமூகப் பிறழ்வு நடவடிக்கைகள் அதிக ரித்துள்ளன.

கடனை அடைக்க வேண்டும் என்பதற்காகவே சில பெண் கள் பாலியல் தொழில் செய்ய வேண்டிய நிலை கூட இங்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சமூகச் சீர்கேட்டுச் சம்பவங்கள் குறித்து கடந்த ஐந்து மாதங்க ளுக்கு மேலாக எமக்கு அதிக மான முறைப்பாடுகள் கிடைக் கப் பெற்றுள்ளன. மக்களின் வறுமையை கருத்தில் கொண் டு கடன் வழங்கிவிட்டு அவர்க ளிடம் பாலியல் லஞ்சம் கோரு வது திட்டமிட்ட ஒரு சீரழிப்பு நட வடிக்கையாகவே தோன்று கிறது.

பொதுவாக மக்களின் தகுதி நிலை அறிந்து கடன் வழங்கு வதை விடுத்து விதிமுறைகள் இன்றி கடனை வழங்கிவிட்டு அவர்களிடம் பாலியல் லஞ்சம் கோருவது ஏற்றுக்கொள்ள முடி யாத செயல். எனவே இவற்றை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை. எமது தீர் மானம் தொடர்பான விரிவான அறிக்கையை மட்டக்களப்பு அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கவுள்ளோம்" -என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் இவ்வாறான சமூக விரோத செயற்பாடுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

'எனக்கும் இவ்வாறான முறைப் பாடுள் கிடைத்தன. போருக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட மக் களை இவ்வாறு தவறான வழிக்கு இட்டுச் செல்ல சிலர் முயற்சிக்கின்றனர். இது குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்- என்றார். (ஐ-10)

### வடக்கில்

மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றி யோரில் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவன் பரமானந்தம் தனு ராஜ் 194 புள்ளிகளுடன் யாழ். மாவட்ட ரீதியிலும், வடமாகாண ரீதியிலும் முதலிடத்தைப் பிடித் துள்ளார்.

நேற்றுக் காலை முதலே பரீட் சைத் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணையத்தில் புல மைப் பரிசில் பெறுபேறுகளை பார்வையிட முடிந்தது. இதன டிப்படையில் மாவட்ட ரீதியான வெட் டுப்புள்ளிகளும், முதல் மூன்று இடங்களைப் பெற்றோ ரின் விவரங்கள் வருமாறு:

**யாழ்ப்பாணம்** - வெட்டுப்புள்ளி - 154

1. பரமானந்தம் தனுராஜ் - 194 புள்ளிகள் - ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்
2. முகுந்தன் மாதுலன் - 193 புள்ளிகள் - சென்.ஜோன்ஸ் கல்லூரி
3. கம்ஷாயினி உதயகுமார் - 191 புள்ளிகள் - அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

**வவுனியா** - வெட்டுப்புள்ளி - 154

1. அருள்ஈசன் அருவி - 193 புள்ளிகள் - வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்
2. ★ரணேஸ் ஆதித்தன் - 191 புள்ளிகள் - வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்

★யதீந்திரா புகழந்தி - 191 புள்ளிகள் - வவுனியா சைவப் பிரகாச இந்துக் கல்லூரி

**முல்லைத்தீவு** - வெட்டுப்புள்ளி -153

1. இ.விதுர்ஷியா - 192 புள் ளிகள் - விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை.
2. கி.கிந்துஷன் - 186 புள்ளிகள் - விசுவமடு விசுவநாதர் ஆரம் பப் பாடசாலை.

த.ஜெராளின் - 186 புள்ளிகள் - விசுவமடு விசுவநாதர் ஆரம் பப் பாடசாலை.

**கிளிநொச்சி** -வெட்டுப்புள்ளி -153

1. யோகலிங்கம் கோபிகா - 191 புள்ளிகள் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்
2. மனோகரன் பவித்திரன் - 188 புள்ளிகள் - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்
3. சுதர்சனா சுதாஸ்கரன் - 186 - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்

**மன்னார்**-வெட்டுப்புள்ளிகள் -153

1. நடராஜா அருண் - 185 புள்ளிகள் - சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை (ஏனையோர் விவரங்கள் கிடைக்கவில்லை).

இதேவேளை பாடசாலைக ளுக்கு இன்று புதன்கிழ மையே உத்தியோ பூர்வமான முடிவுகள் அனுப்பி வைக்கப் படவுள்ளன. (ஙு-4-21-402)

### கொந்தளித்து

னர்கள் சிலர் கோஷமெழுப் பினர்.

"கிழக்கின் ஆட்சியை இன்றே மாற்றியமைப்போம்", "பொம்மை ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவோம்" போன்ற கோஷங் களும் சபையை அதிரவைத் தன. இதனால் சபையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. சபை நடவடிக்கைகளும் சில நிமிடங்களுக்கு ஒத்திவைக் கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம் பெற்றது. இதன்போது பிரே ரணை விடயத்தில் எமக்கு அநீதியிழைக்கப்படுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப் பி னர்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப் பினர்களும் ஒன்றி ணைந்து புதிய தவி சாளரைத் தெரிவுசெய்வோம் என்றும், ஆட்சியை மாற்றிய மைப் போம் என்றும் ஜெமீலும் தண்டாயுத பாணியும் கடும் தொனியில் எச்சரித்தனர். இத னால் குறித்த பிரேரணையை விவாதித்து வாக்கெடுப்பு நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

இதையடுத்து 15 மேலதிக வாக் குகளால் 13 இற்கு ஆதரவான பிரேரணை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பி னர் பிரியந்த பத்திரண எதிராக வாக்களித்தார். முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பி னர்க ளுடன ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு உறுப்பினர்கள் ஆத ரவாக வாக்களித்த னர்.

எனினும் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், முன்னாள் முத லமைச்சர் சிவனேசதுரை சந் திரகாந்தன், அமைச்சர்க ளான ரிஷாத் பதியுதீன் மற்றும் ஏ.எல். எம்.அதாவுல்லா ஆகியோர் தலைமையிலான கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் இந்த வாக்கெடுப் பில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த 21 ஆம் திகதி நடை பெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் வடக்கு மக்கள் எழுச்சிகொண்டு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு சரித்திர வெற்றியை வழங் கினர். இதன் எதிரொலியாக தற்போது கிழக்கிலும் எழுச்சி ஏற்படும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### முதல்வர்

கூட்டமைப்புக்கு வாக்களித் தமைக்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் இருந்து நேற்றுக் காலை தனது நியம னக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் அங்கிருந்து நேரடியாக சுழிபுரம் வழக்கம் பரை சிவபூமி முதியயோர் இல்லத்துக்குச் சென்றார். முதி யோர் தினமான நேற்று அவர் அங்கிருந்து முதியோர்களுடன் கலந்துரையாடினார். அத்து டன் அவர்க ளுக்கு உணவுப் பொருள்களையும் வழங்கினார்.

அங்கு வசிக்கும் 101 வயது டைய மூதாட்டி தனது தள்ளாத வயதிலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்கு வாக்களித் திருந்தார். அவருடன் அளவ ளாவிய முதலமைச்சர், தமழர் களின் உரிமைக்காக தனது வாக்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளித்து அதன் வெற்றிக்கு உதவி புரிந்த அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

முதல்வராக நியமனக் கடிதம் பெற்ற பின்னர் அவர் மேற் கொண்ட முதல் பணி இது வாகும். (கு)

### முதலமைச்சர்

பூர்வமாகக் கையளித்தார்.

தேர்தலில் வெற்றி பெற்று வட மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற் றியது. மாகாண சபையின் முதலமைச்சராக க.வி. விக் னேஸ்வரன் உறுப்பினர்க ளால் முறையாகத் தெரிந்தெ டுக்கப்பட்டார். இந்த செய்தி ஆளு நருக்கு உத்தியோகபூர் வமாக அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சராக க.வி.விக் னேஸ்வரனை ஏற்றுக் கொண் டுள்ளதாக ஆளுநரும் பதில ளித்திருந்தார். இந்த நிலையில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந் திரசிறிக்கும், வடமாகாண முத லமைச்சர் க.வி.விக்னேஸ்வர னுக் கும் இடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கலந் துரையாடல் இடம்பெற் றது.

இதனடிப்படையில் வடமா காண முதலமைச்சருக்கான நியமனக் கடிதத்தை வடமா காண ஆளுநர் மேஜர் ஜென ரல் ஜீ.ஏ.சந்திரசிறி நேற்றைய தினம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜய லக்ஷ்மி, ஆளுநரின் செயலா ளர் இ.இளங்கோவன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் க.வி.வினேஸ்வரன், நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நியமனக் கடிதத் தைப் பெற்றுக் கொண்டமைக் கான குறிப்பு ஒன்றை முதல மைச்சர் ஆளுநரிடம் கையளித்தார். (உ-5)

### காணாமற் போனவர்களின்

நெருக்குதல் காரணமாகக் காணாமற்போனோர் தொடர் பில் விசாரணை நடத்த ஜனாதி பதி ஆணைக்குழு நியமிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் எமக்கு நம்பிக்கையில்லை. இருப்பி னும் இதற்குத் தமது முறைப் பாடுகளைக் காணாமற்போ னோரின் உறவுகள் அனுப்ப வேண்டும்.

அவ்வாறு அனுப்பப்படா விட் டால் இலங்கை அரசு, இங்கு காணாமற்போனவர்கள் என்று எவருமேயில்லை என தாம் கூறியவை சரி என்று சர்வதேச சமூகத்துக்குத் தெரி விக்கும்.

இதுவரை காணாமற் போனோ ரின் உறவுளைத் தேடியலை யும் குடும்பங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். ஜனாதி பதி ஆணைக்குழுவுக்கு முறைப் பாடுகளை முதலில் பதிவு செய்ய வேண்டும். இதன் விசா ரணைகள் திருப்திகரமாக அமையாவிட்டால் நாம் சர் வதேச விசாரணையை வலியு றுத்திப் போராட்டம் நடத்து வோம்.

நாம் எது செய்வதானாலும் முதலில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட வேண்டியது கட் டாயம்.

மேலும் ஜனாதிபதி ஆணைக் குழு வடக்கு - கிழக்கில் காணா மற்போனவர்கள் தொடர்பில் மட்டுமே விசாரணை நடத்த முயல்கின்றது. தலைநகரிலும் தமிழர்கள் பலர் காணாமற் போயினர். அவர்கள் தொடர்பி லும் விசாரணை நடத்த வேண்டும் - என்றார். (கு-5)

### விசுமடு

அ.தனுஷா, க. டிலக்சியா ஆகி யோர் 185 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்தையும் த. ஜெக நிஷா, அ.அனோஜன் ஆகி யோர் 184 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்தையும், ஜெ. விந்துஷன், பி. ரெஜி னொல்ட் ஆகி யோர் 182 புள்ளி களைப் பெற்று 9 ஆம் இடத் தையும், சி. ஜீவகன் 180 புள்ளி களைப் பெற்று 11 ஆம் இடத் தையும் பெற்று மாவட்ட நிலை யில் முதல் 11 இடங்களையும் கைப்பற்றினர்.

வா. நர்த்தனன் 179 புள்ளிக ளுடன் 13 ஆம் இடத்தையும், தே. அனோஜன் 178 புள்ளிக ளுடன் 15 இடத்தையும்,சி. விஸ்வறேகா, ஆ. அபிநயன், வி. டல்சிகா ஆகியோர் 176 புள்ளிகளுடன் 21 ஆம் இடத் தையும், ச.தமிழினி 175 புள் ளிகளுடன் 26 ஆவது இடத் தையும் வி. விதுர் சாந்தன் 172 புள்ளிகளுடன் 32 ஆவது இடத்தையும், ஜெ. பபிதன், ர. லதுசியன் ஆகியோர் 171 புள் ளிகளுடன் 37 ஆவது இடத் தையும்.அ. நிதுர்ஷா 170 புள் ளிகளுடன் 41 ஆவது இடத் தையும் ரி. சிபானுஜா 167 புள்ளிகளுடன் 54 ஆவது இடத் தையும், வி. யசிகா, க.கர் ணிகா, ர. மருகிசன் ஆகியோர் 164 புள்ளிகளைப் பெற்று 59 ஆவது இடத்தையும், ஞா. தனுசியா 159 புள்ளிகளுடன் 83 ஆவது இடத்தையும்,ஜெ. ரிசாந்தினி 154 புள்ளகளுடன் 111 ஆவது இடத்தையும் பெற்று சித்தியடைந்தனர்.

பாடசாலை 87 வீத சித்தியுடன் முன்னிலை வகிக்கிறது. இந்த மாணவர்களின் வெற்றிக்காக ஆசிரியர் சுதர்சன் அரும் பணி ஆற்றியுள்ளார். (ஐ)

### தொட்டிலடி

வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது சில இடங்களில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள் ளன. இராணுவம் இருந்த வீடு களை மக்களிடம் கையளிக் கும் நிகழ்வுகளும் நடைபெற் றன.

இந்த நிலையில் தேர்தலுக்கு முதல் நாளில் இருந்து சங் கானை தொட்டிலடிச் சந்தியில் படையினர் சோதனை நடவடிக் கைகளை அதிகரித்துள்ளனர். மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை பயணிக்கும் வாக னங்கள் மறிக்கப்பட்டு படையி னரால் சோதனைக்கு உட்படுத் தப்படுகின்றன.

படையினரின் இந்தச் செயற் பாடு காரணமாக அந்த வீதியூ டாகப் பயணிப்போர் அச்ச உணர்வுடன் பயணத்தை தொடர்வதாகவும் தேவையற்ற இந்த பதற்ற நிலையை ஏற்ப டுத்தும் செயலை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கு மாறு பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

(கு-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றிஸ், மகாஜன அணிகள் உதைபந்தாட்டத்தில் சம்பியன்




யாழ்ப்பாணம் ஒக்.2
இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் 'சம போஷ' வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு ஆண்.பெண் இருபாலருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மட மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டன.

இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 2:0என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன்ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுசம்பியன் ஆனது. (கு-23)



## வென்றது வல்லை வி.க

யாழ்ப்பாணம். ஒக்.2
யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வல்வை விளையாட்டுக்கழக அணிக்கும் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைக்ள் வழங்கப்பட்டன.

இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (கு-23)



## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம் ஒக்2
யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாண சமர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு-23)

யாழ்ப்பாணம். ஒக்.2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையளாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதனத்தில் மின்னொளியில் இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்த்தில் தீக்கம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (கு-23)

## 20/20 ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் வென்றது

வலி.வடக்கு, ஒக். 2
யாழ்ப்பாணம் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டக் கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் 20/20 கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் மானிப்பாய் பரிஷ் விளையாட் டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைாதனத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மானிப்பாய்பரிஷ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழகம் 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கிரி 44 ஓட்டங்களையும், தயாளன் 30 ஓட்டங்களையும், ஆயீசன் 29 ஓட்டங்களையும் ரகுபதி 18 ஓட்டங்களையும் ஓட்டங்களையும் மகிழன் 13 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஹரி 4 பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 2 இலகுக்களையும் யாழினியன் 4 பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் பிரதீபன், வினோத் முறையே 12, 36 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 17.2 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்கையும்பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன்ஸ் விளையாட்டுக் கழக கழத்தைச் சேர்ந்த தர்சன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் பிரசாந். தயாளன் முறையே27.33 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள். (கு-86)



கராத்தே மத்தியஸ்தரகளுக்கான சரவதேச பயிற்சி செயலமரவு அண்மையில் கொழும்பு விளையாட்டு அமைச்சின் கேட்போர கூடத்தில் நடைபெற்றது. நியூஸ்லாந்து நாட்டைச் சேரந்த 'ஏ' தர நடுவர சிகான். ரொபட் சிமித்தினால் , உலக கராத்தே தோ சம்மேளனத்தின் புதிய விதி முறைகள் பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது. இதில் அகில இலங்கை ரீதியாக கராத்தே பயிற்றுனர்கள் கலந்துகொண்டதுடன் யாழ் நகரிலிருந்தும் பயிற்றுனர்கள் கலந்துகொண்டனர்.(கு-23)

## புதிய பாரதி சம்பியன்

யாழ்ப்பாணம் ஒக.2
கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்க இடையில் குறிஞ்சி விளையாட்டுக்கழகம் நடந்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த வாரம் குறிஞ்சி விளையாட்டுக்கழக மைதனத்தில் இடம் பெற்றது.

இறுதியாட்டத்தில் குறிஞ்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புதிய பாரதி விளையாட் டுக் கழக அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (கு-23)

## யாழ்.சென்றலை வீழ்த்தி கிண்ணம் வென்றது பரிஷ்

யாழ்ப்பாணம் ஒக.2
சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடருக்கு யாழ். மாவட்டத்திலிருத்து அணிகளைத் தெரிவு செய்வதற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட் டுக்கழக அணியினர் 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்கினை இழந்து 273 ஓட்டங்களை பெற்றது.

சபேசன் 97 ஓட்டங்களையும், வினோத் 41 ஓட்டங்களையும், சுபாஸ்3 1ஓட்டங்களையும், நிதரகன் 27 ஓட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ் சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பில் றெகான் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 50ஓட்டங்களுக்கு 3இலக்கினையும்,றஜீவ்குமார் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 26ஓட்டங்களுக்கு 3இலக்கினையும்,திருக்குமாரன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 47ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் யசிந்தன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 62ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழத்தினர்.

274 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ் சென்றல் விளையாட்டுக்கழக அணியினர் 47பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்கினை இழந்து 221 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் றஜீவ்குமார் 56 ஓட்டங்களையும் விஸ்ணு -ஆட்டம் இழக்காமல் 37 ஓட்டங்களையும்,றெகான் 42ஒட்டங்களயும் கலிஸ்ரன் 24 ஓட்டங்களயும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி சார்பில் கிசோ 7.3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 21ஒட்டங்களுக்கு 2இலக்கினையும், பந்து வீச்சில் கரிகரன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 32ஒட்டங்களுக்கு 2இலக்கினையும்,வினேத் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 57ஒட்டங்களுக்கு 3இலக்கினையும், பிரதீபன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 37ஒட்டங்களுக்கு ஓர் இலக்கினையும். வீழ்த்தினர். (கு-23)

# ஆண், பெண் பிரிவுகளில் பற்றிமா வி.க. வென்றது



யாழ்ப்பாணம். ஒக்.2
மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்காக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் ஆண், பெண் இரு பிரிவிலும் பற்றிமா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

ஆண்கள் பிரிவில் பற்றிமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றணதறு விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் பற்றிமா விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற் றது.

பெண்கள் பிரிவில் பற்றிமா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றணதறு விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் பற்றிமா விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (கு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# யுவராஜின் வருகை இந்தியாவுக்குப் பலம்

இந்திய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் அணிக்கு யுவராஜ் சிங் மீள அழைக்கப்பட்டுள்ளமை இந்திய அணிக்குப் பலத்தைச் சேர்க்குமென இந்திய அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், நேர்முக வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ள ஆஸ்திரேலிய அணிக்கெதிரான முதல் 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கும், ஒற்றை 20/20 சர்வதேசப் போட்டிக்குமான இந்தியக் குழாமில் யுவராஜ் சிங் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது, யுவராஜ் சிங்கின் உள்ளடக்கம் அணிக்கு மேலதிக பலத்தை வழங்கும் என்பதோடு, அணிக்கு வித்தியாசத்தையும் வழங்குமென சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் உடற்தகுதிப் பிரச்சினைகள் காரணமாக இந்திய அணியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்த யுவராஜ் சிங், தனது உடற்தகுதி தொடர்பாக மேலதிக கவனத்தை வெளிப்படுத்தியதோடு, தனது திறமையையும் நிரூபித்திருந்தார்.

யுவராஜ் சிங்கின் துடுப்பாட்டம் தவிர, அவரது பந்துவீச்சு இந்திய அணிக்கு மேலதிக பலத்தை வழங்கும் எனக் குறிப்பிட்ட சுனில் கவாஸ்கர், அதைத் தவிர, அவரது களத்தடுப்பும் தன்னைக் கவர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுவராஜ் சிங் முன்வரிசையில் துடுப்பெடுத்தாட வேண்டுமெனக் குறிப்பிட்ட அவர், யுவராஜ்சிங் 20, 30 ஓவர்களைச் சந்தித்தால் எந்த வொரு எதிரணியையும் அடித்து விளாச முடியுமெனக் குறிப்பிட்டார். (த)

# ஆஸிக்கும் எதிரான இந்திய அணி அறிவிப்பு

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இந்தியக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட குழாமாக இந்தக்குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இத்தொடரில் ஒரு 20/20 சர்வதேசப் போட்டியும், 7 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும் இடம்பெற்றுள்ளன. இந்தத் தொடரின் முதல் 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கும், 20/20 சர்வதேசப் போட்டிக்குமான இந்தியக் குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியக் குழாமில் யுவராஜ் சிங் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். அண்மையில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்தியக் குழாமிலும், மேற்கிந்தியத் தீவுகள் முக்கோணத் தொடரிலும் அவர் இடம்பெற்றிருக்காத நிலையில் அவர் தற்போது இந்தக் குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உள்ளூர்ப் போட்டிகளில் அவர் சிறப்பான பெறுபெறுகளை வெளிப்படுத்தியதாலும், அவர் உடற்தகுதியை நிரூபித்துள்ளதாலும் அவருக்கு இவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள முழுமையான குழாம்: மகேந்திரசிங் டோனி, ஷீகர் தவான், றோகித் சர்மா, விராத் கோலி, யுவ்ராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஷ்வின், புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, வினய் குமார், அமித் மிஷ்ரா, அம்பத்தி ராயுடு, மொஹமட் ஷமி, ஜெய்தேவ் உனத்கட் (த)

# மரதன் ஓட்டத்தில் கென்யாவின் வில்சன் கிப்ஷாங் புதிய சாதனை

பேர்லின் மரதனோட்டப் போட்டியில் கென்யாவின் வில்சன் கிப்ஷாங் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். 31 வயதான கிப்ஷாங் 2 மணித்தியாலங்கள் மூன்று நிமிடங்கள் 23 செக்கன்களில் போட்டித் தூரத்தை கடந்து இந்த மைல்கல்லை எட்டினார்.

ஜேர்மன் தலைநகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சக நாட்டு வீரரான மார்ட்டின் லேல் 2 ஆவது இடத்தையும், எத்தியோப்பியாவின் சேகேயா கேபேடி மூன்றாம் இடத்தையும் பெற்றனர். இதற்கு முன்னர் நடைபெற்ற பேர்லின் மரதன் ஓட்டத்தில் சக நாட்டு வீரரான பற்றிக் மக்கோவ் இந்தச் சாதனையை தன்வசம் வைத்திருந்தார். போட்டியின் தூரத்தை பற்றிக் மக்கோவ் இரண்டு மணித்தியாலங்கள் மூன்று நிமிடங்கள் 38 செக்கன்களில் நிறைவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)




# ரைற்றன்ஸ் அணியை வென்றது டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ

இடம்பெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் 16ஆவது போட்டியில் டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி வெற்றிபெற்றுள்ளது. தென்னாபிரிக்காவின் ரைற்றன்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி டக்வேர்த் லூயிஸ் முறையில் 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அஹமதாபாத் சர்தார் பட்டேல் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரைற்றன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 4 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் 2ஆவது விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களைப் பகிர்ந்தது. தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதையடுத்து அவ்வணி 188 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக எவின் லெவிஸ் 35 பந்துகளில் 70 ஓட்டங்களையும், டெரன் பிராவோ 44 பந்துகளில் 63 ஓட்டங்களையும், நவின் ஸ்ருவேர்ட் 15 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரைற்றன்ஸ் அணி சார்பாக மார்ச்சன்ட் டீ லாங்கர் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், மோர்னி மோர்க்கல், ஹென்றி டேவிட்ஸ், வன்டர்மேவா மூவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

189 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ரைற்றன்ஸ் அணி 17 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டதன் காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டது. அதன் பின்னர் போட்டியை ஆரம்பிக்க முடியாது போனதால் டக்வேர்த் லூயிஸ் முறையில் முடிவு கணிக்கப்பட்டது. அதனடிப்படையில் டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 6.4 ஓவர்களில் 65 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் விக்கெட்டுக்களை இழந்து 10.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் அதன் பின்னர் களமிறங்கிய வீரர்கள் சிறப்பாக ஆடியிருந்தனர். 16ஆவது ஓவரில் ரைற்றன்ஸ் அணி 2 விக்கெட்டுக்களை இழந்திருந்ததன் காரணமாக அவ்வணி டக்வேர்த் லூயிஸ் முறையில் தோல்வியடைய வேண்டி ஏற்பட்டது.

துடுப்பாட்டத்தில் ரைற்றன்ஸ் அணி சார்பாக ஹென்றி டேவிட்ஸ் 22 பந்துகளில் 42 ஓட்டங்களையும், ஜக்ஸ் ருடோல்ப் 28 பந்துளில் 31 ஓட்டங்களையும், பர்ஹான் பெஹர்டியன் 19 பந்துகளில் 29 ஓட்டங்களையும், ஏபி.டி.வில்லியர்ஸ் 13 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணி சார்பாக சுனில் நரைன் 4 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், லென்டில் சிமன்ஸ் 3 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சாமுவேல் பத்ரி, றயாட் எம்றித் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக டிரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணியின் எவின் லெவிஸ் தெரிவானார். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் தலைவராக ரஞ்சிப் பிஸ்வால் நியமனம்



இந்திய கிரிக்கெட் சபையின் முக்கியமான பதவிகளில் ஒன்றான ஐ.பி.எல் தலைவராக ரஞ்சிப் பிஸ்வால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நடந்து முடிந்த ஐ.பி.எல் போட்டிகளில் சூதாட்டப் பிரச்சினை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அப்போது ஐ.பி.எல் தலைவராக இருந்த மத்திய அமைச்சர் ராஜீவ் சுக்லா பதவியை ராஜினாமா செய்தார்.

கிரிக்கெட் சபை எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

இதனையடுத்து சென்னையில் நேற்று நடந்த கிரிக்கெட் வாரியத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் ஐ.பி.எல் தலைவர் பொறுப்பில் யாரை அமர்த்துவது என்பது குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

இந்திய அணியின் முன்னாள் மேலாளர் ரஞ்சிப் பிஸ்வால் மற்றும் பெங்கால் கிரிக்கெட் தலைவர் ஜக்மோகன் மோகன் டால்மியா ஆகியோரது பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன.

முடிவில் 43 வயதான ரஞ்சிப் பிஸ்வால் ஐ.பி.எல் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். ஸ்ரீனிவாசனின் ஆதரவாளரான இவர் இந்திய அணியின் மேலாளராக நீண்ட காலமாக பணியாற்றியவர்.

2011ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற போது அவர் தான் மேலாளராக இருந்தார். 2013ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றிய போதும் அணியை நிர்வகித்தவர் இவர்தான்.

முன்னதாக இந்திய அணி 2007ஆம் ஆண்டு 20 பந்துப் பரிமாற்றங்கள் உலக கிண்ணத்தை வென்று வரலாறு படைத்த போது, அந்தஅணியை தெரிவு செய்த குழுவில் ரஞ்சிப் பிஸ்வாலும் உறுப்பினராக இருந்தார். தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவராகவும் இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


## கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையில் உள்ள JX-xxxx இலக்கமுடைய மாருதி கார் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

(32174) (4,6,3) 077 805 2324



## Sri Lankan Chartered in Jaffna

* Qualified experienced lecturers from Colombo and Jaffna
* Modern Air-conditioned Classrooms
* Well planned lectures and lecture plans are given in the 1st Class
* Monthly payment plan

0773 722 104

K-A-I-M-S 146 -2/2 K. K.S Road, [Top of DFCC BANK]
We Make You Progress Everyday.



## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.

சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.10.2013 சனிக்கிழமை

1. காலை 8.00 – 10.00
2. காலை 10.00 – 12.00
3. மாலை 1.00 – 03.00
4. மாலை 3.00 – 05.00

எமது 3 மாத பயிற்சி நிறைவில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567



## மலிவு விற்பனை

இன்று முதல் யாழ். நகரில் முதன்முறையாக ஒரே கூரையின்கீழ் அனைத்து நிறுவனங்களினது உற்பத்திப் பொருள்களையும் மலிவு விலையில் பெற்றிட

Piyestra, Phoenix, Eagle, Nilkamal, DAMRO, NIPPONS, ARPICO FURNITURE, PABCO

மற்றும் எமது உள்நாட்டு உற்பத்திகளான கட்டில், மேசை, கதிரைகள், மர சோபா செற், ரி.வி. ஸ்ராண்ட் போன்றன.



Offer மேசை 6 கதிரை (Glass) 26250/=

ஆனைப்பந்திச் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்

(C/12521) 077 358 3879, 077 831 4201


## ஷேவாக், கம்பீரின் கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக் குறியில்



ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதால் ஷேவாக், கம்பீரின் கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது.

மோசமான நிலை காரணமாக மூத்த வீரர்கள் ஷேவாக், கம்பீர், யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் மற்றும் சகீர்கான் ஆகியோர் தொடர்ந்து அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இதில் யுவராஜ் சிங் மட்டும் தற்போது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இடம் பெற்றுள்ளார். மற்ற வீரர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டனர்.

தங்களையும் தெரிவு செய்து விடுவார்கள் என எதிர்பார்த்து காத்திருந்த ஷேவாக், கம்பீருக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது.

எனவே இவர்களது எதிர்காலம் கேள்விக் குறியாகத் தான் இருக்கிறது. ஷேவாக் கடைசியாக கடந்த ஜனவரி மாதம் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடினார்.

கம்பீர் இங்கிலாந்து தொடருக்கு நீக்கப்பட்டார். அதன்பிறகு அவருக்கு தொடர்ந்து வாய்ப்பு கொடுக்கவில்லை.

சகீர்கான், ஹர்பஜன் சிங்கும் இதே நிலையில்தான் உள்ளனர். ஆனால் டெஸ்ட் போட்டியை பொறுத்தவரை அவர்கள் மீண்டும் இடம்பெற முடியாது என்று கூறிவிட இயலாது.

(த)


## CIMA சாதனைச்சித்திகள் MCS இல்!



S.Kanisdda
Po -75%

Foundation level 100%
F.M:67% F.O:80% P.O:70% E.O:66%

Save 40000 Rs
Week days, 2nd Oct
Week End, 5th Oct

Type <CM><Name> & Sms to 772395895

MCS IT CAMPUS Near University of Jaffna
Supported by UNDP/JRRP 772 395 895


## மரண அறிவித்தல்



### திருமதி கீர்த்தனா சதீஸ்குமார்

இல.177/1, நாவலர் வீதியை சொந்த இடமாகவும் இராஜவீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கீர்த்தனா சதீஸ்குமார் கடந்த 30.09.2013 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சதீஸ்குமாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் ஜெயலக்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வியும் ஹரிவிக்னேசின் (மாணவன்-2014 உயர்தர வர்த்தகப் பிரிவு, யாழ். இந்துக் கல்லூரி) அன்புச் சகோதரியும் பாலகிருஸ்ணன் - புஸ்பராணி தம்பதியரின் பாசமிகு மருமகளும் புஸ்பராஜ், நேசரூபன், பிரதீபன், காலஞ்சென்ற வாகீசன், டில்கன் ஆகியோரின் மைத்துனியும் சிவானுஜா, அஞ்சலா ஆகியோரின் உடன்பிறவாத சகோதரியும் விதுசனாவின் அன்பு சித்தியும் காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் சின்னம்மா, காலஞ்சென்ற செல்லையா-செல்லம்மா தம்பதியரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2013) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

*இராஜ வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (32228-23-14)


## வடமாகாணத்துக்கு விநியோகத்தர் தேவை (Distributor)

வட மாகாணத்தில் முதல் தடவையாக ஜப்பானிய தொழிநுட்பத் தயாரிப்பான மோட்டார் சைக்கிள் பற்றறி (Motor Cycle Battery)



★ 9 Month warrenty
★ ISO 9001 Certificate
★ ISO 14001 Certificate

தொடர்பு:- F. Hasan T.P:- 0777 375575
Danajaya Distributors


## கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
27
03
1993

விண்ணில்
30
09
2013

### சதீஸ்குமார் கீர்த்தனா

மின்னியது செய்தி
விம்மினோம் - நெடியதுயர்
பின்னியது நெஞ்சில் - கலங்கினோம்
என்ன இது? ஏன் மறைந்தீர்?
இறைவனுக்கு உம்மை அழைக்கும் அவசரம் ஏன்
அன்பரீர் உங்கள் ஆன்மா இளைப்பாற
விண்ணவனைப் பணிகின்றோம் நாம்.

பிரிவால் துயருறும்: NEW SCIENCE WORLD சமூகம்.

(32229) (17,14)


## விற்பனைக்குண்டு

காங்கேசன்துறை வீதி(K.K.S. Road) சுன்னாகத்தில் தேசிய சேமிப்பு வங்கிக்கு (N.S.B) அருகில் வீடு, கிணற்றுடன் சேர்ந்த 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. திருமண மண்டபம், கடை, வியாபார நிறுவனம், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.

(32207) (7.6.3)

தொ.பே: 077 323 0033 visvaranji@yahoo.com



## மிகப் பிந்திய அதிரடி

வெறும் 850000/= ரூபா மட்டும் செலுத்தி ஐரோப்பிய நாடொன்றில் மாதம் 2 இலட்சம் உழைக்கலாம்

*உணவு,இருப்பிடம், ரிக்கற் இலவசம்
*இரண்டு வருட விசா
*படிக்க, உழைக்க சட்ட ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்
*9பேருக்கு மட்டுமே அரியவாய்ப்பு

(32206)(4,3,6)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 2.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தன் சக்திகளிலிருந்து சாத்தியமான அளவு சாறு பிழிவதே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கை இலட்சிய மாயிருத்தல் அவசியம்.
-ரிக்டர்

# புதன் பொய்கை A

உதயன் | ஒக்ரோபர் 02 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# பெண்களை வதைக்கும் சீதனம்



ராஜராஜன்

இன்று ஏகப்பட்ட சவால்களுக்குப் பெண்கள் முகம் கொடுத்து வருகின்றனர். பாலியல் ரீதியான தொல்லைகள், ஆணாதிக்கத்தின் வெளிப்பாடுகளால் ஏற்படும் துன்பங்கள், குடும்பச் சுமைகள் என்பன அச்சப்பட வைக்கும் அளவுக்கு இவர்களைத் துன்புறுத்தி நிற்கின்றன. இவற்றை விடக் குறிப்பிட்ட சில இன அடையாளங்களைக் கொண்ட பெண்கள் சீதனம் என்னும் பெயர் தாங்கிய கொடிய அரக்கனால் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவில் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இத்தகைய பெண்களை இந்தக் கொடிய அரக்கனின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டியவர்கள் வாய்மூடி மௌனிகளாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுதான் வேதனையைத் தருகின்றது.

ஆணுக்குப் பெண் என்பதும் பெண்ணுக்கு ஆண் என்பதும் அவர்கள் படைக்கப்பட்ட காலத்திலேயே எழுதப்பட்ட விதியாகும். ஓர் ஆணும் பெண்ணும் குடும்பம் என்ற பந்தத்தில் இணையும்போதுதான் மனித குலம் விரிவடைகின்றது. இந்த நியதி மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நகர்வன ஏன் ஓரறிவு படைத்த சில மரங்களுக்கும் பொருந்தும். ஆனால் ஆறறிவு படைத்த மனிதன்தான் இந்தப் புனிதமான உறவுக்கு விலை பேசி நிற்கின்றான். இத்தகைய நடவடிக்கை தமக்கொரு அவமானச் சின்னம் என்பதை ஆண்கள் ஏனோ புரிந்துகொள்வதில்லை.

### பகுத்தறிவைப் பயன்படுத்தாத மனித இனம்

மனிதர்களுக்கு மட்டுமே ஆறறிவு படைக்கப்பட்டமையானது அவர்கள் எதனையும் பகுத்து அறிய வேண்டும் என்பதற்காகத்தான். இதனால்தான் இந்த ஆறாவது அறிவு பகுத்தறிவு என அழைக்கப்படுகின்றது. ஆனால் மனிதன் அவ்வாறு நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. இந்தச் சீதனம் என்னும் கொடிய பேயை அவர்கள் இன்னமும் பூசித்துப் போற்றி வருகின்றனர்.

மேலும் ஆண்களும் பெண்களும் ஏதோவொரு சமன்பாட்டின் அடிப்படையிலேயே படைக்கப்பட்டு வருகின்றனர். மேலும் இறைவனின் படைப்பில் ஆண், பெண் என்று பேதங்கள் காட்டப்படுவதில்லை. ஆனால் இறைவனால் படைக்கப்பட்ட ஆண்கள்தான் பேதங்களை வளர்த்து வருகின்றனர். பெண்களை அடிமைப்படுத்தி வருகின்றனர். இதன் ஓர் அங்கமாகவே சீதனம் என்கின்ற சுமை பெண்களின் தலைகளில் ஏற்றி வைக்கப் படுகின்றன.

### ஆணாதிக்க மனஉணர்வு

இதற்கு ஆண்களால் கூறப்படும் காரணங்கள் விசித்திரமாகக் காணப்படுகின்றன. பெண்ணொருத்தியை திருமணம் புரிந்த நாள்முதல் அவளது கணவனாக ஆணே அவளைப் பராமரித்து வருவதாகவும் அவர்களது குடும்பத்துக்கு ஆகும் செலவுகள் யாவற்றையும் அவனே பொறுப்பேற்பதாகவும் ஆண்கள் தரப்பினரால் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் வீட்டில் தங்கி நின்று குடும்பத்தின் சகல வேலைகளையும் காலையிலிருந்து இரவு படுக்கப் போகும் வரை நிறைவேற்றி வைக்கும் பெண்களின் நிலைபற்றி இந்த ஆண்கள் மறந்துவிடுவதுதான் வேதனை தருகின்றது. வேலைக்குச் செல்லும் ஆண்களை விட இந்தக் குடும்பப் பெண்கள் அதிகநேரம் வேலை செய்கின்றனர். சில குடும்பப் பெண்கள் ஓய்வு என்பதை அறியாத நிலையில் உள்ளனர். அதிலும் மோசமான கணவன் அமைந்துவிட்டால் இவர்களின் நிலைபற்றிச் சொல்லவே வேண்டாம். இந்த நிலையில் ஆண்கள் மட்டும் தாம் சம்பாதிப்பதாகக் கூறிப் பெண்களிடம் சீதனத்தை வழங்குமாறு வற்புறுத்துவது நியாயமாகத் தென்பட வில்லை.

மேலும் படித்த ஆண்களில் பலரும் படித்து வேலைக்குச் செல்கின்ற பெண்களையே திருமணம் புரிவதற்கு விரும்புகின்றனர். ஆனால் தமது படிப்புக்கான செலவுகளைக் காரணம் கூறி அதிக சீதனத்தை எதிர்பார்க்கின்றனர். இதேவேளை இவர் எதிர்பார்க்கின்ற அந்தப் படித்த பெண்ணுக்கும் படிப்பதற்குச் செலவுகள் ஏற்பட்டிருக்கும். அத்துடன் வேலைக்குச் சென்று உழைக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமும் அவருக்கு உண்டு. அதிகாலையில் எழுந்து அரக்கப்பறக்க வீட்டு வேலைகள் யாவற்றையும் முடித்துவிட்டு அவசரம் அவசரமாகக் கிளம்பி அலுவலகத்தை அடைந்து பிற்பகல் வரை அங்கு வேலை செய்துவிட்டு வீடு திரும்பினாலும் அங்கே ஓய்வெடுப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காது. இரவுக்கான உணவு தயாரிக்கும் வேலைகள் தொடக்கம் ஏனைய கடமைகள் அவரை எதிர்பார்த்துக் காத்திருக்கும். ஆனால் கணவனானவன் வீடு திரும்பியதும் தான் வேலை பார்க்கும் அலுவலகத்தை நாள்பூராவும் தனது தலையில் சுமந்து நின்ற பாவனையில் உஸ்... அப்பாடா.. என முனகியவாறு ஓய்வெடுக்கத் தொடங்கி விடுவான். இதற்குள் அவன் வந்ததும் ஏதோவொரு பானத்தை அவனது மனைவி கையில் கொடுக்காதுவிட்டால் சிம்மகர்ச்சனைதான். தனது மனைவியும் நாள்பூராவும் கடினமாக உழைக்கிறாள் என்ற எண்ணம் இவர்களிடத்தில் இருக்கவே இருக்காது. தனது மனைவியாக வந்தவளிடம் நகை, பணம், வீடு எனச் சீதனம் என்ற போர்வையில் பிடுங்குவதற்குத்தான் இவர்களுக்குத் தெரியும். எவ்வளவு அநியாயம் இது?

### சீதன முறைமை சமூதாயத்தின் சாபக்கேடு

மேலும் பெண் குழந்தையொன்று பிறக்கும்போது அதன் பெற்றோரின் மனங்களில் கவலையின் சாயல் படர ஆரம்பித்துவிடும். இதற்கு அந்தக் குழந்தைக்கு அதன் திருமணத்தின்போது வழங்கப்பட வேண்டிய சீதனமே காரணமாகும். எப்போதோ வழங்க வேண்டிய சீதனத்துக்காக இவர்கள் இப்போதே கவலைப்பட ஆரம்பித்து விடுகின்றனர். இது எவ்வளவு கொடுமையான விடயம் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. அதனை அனுபவித்தவர்களுக்குத்தான் அந்த வலியும் வேதனையும் புரியும்.

**ஆணுக்குப் பெண் என்பதும் பெண் ணுக்கு ஆண் என்பதும் அவர்கள் படைக்கப்பட்ட காலத்திலேயே எழு தப்பட்ட விதியாகும். ஒரு ஆணும் பெண்ணும் குடும்பம் என்ற பந் தத்தில் இணையும்போதுதான் மனித குலம் விரிவடைகின்றது. இந்த நியதி மிருகங்கள், பறவைகள், ஊர்வன, நகர் வன ஏன் ஓரறிவு படைத்த சில மரங் களுக்கும் பொருந்தும். ஆனால் ஆறறிவு படைத்த மனிதன்தான் இந்தப் புனிதமான உறவுக்கு விலை பேசி நிற்கின்றான்.**



இதற்கு நிரந்தரமானதொரு முடிவு கிடைக்கும்வரை இத்தகைய வேதனைகள் தொடரத்தான் செய்யும்.

விடுதலைப் புலிகள் தமிழர் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்திய போது இந்தச் சீதனத்துக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் இதனை ஒழிப்பதற்கு அவர்களாலும் முடியவில்லை என்பதுதான் உண்மையாகும். வாங்குவர் இருக்கும்வரை கொடுப்பவரும் இருக்கத்தான் செய்வர். வாங்குபவரின் மனதில் ஏற்படும் மாற்றமே இதற்கு ஒரு முற்றுப் புள்ளியை இட முடியும்.

பல இடங்களில் திருமணத் தரகர்களின் மோசடி வேலைகளால் சீதனத்தை அள்ளிக் கொடுத்துவிட்டு நடுத்தெருவில் நிற்கும் குடும்பங்களையும் பார்க்க முடிகின்றது. இந்தச் சீதனம் என்னும் நெருப்புக்கு எண்ணெய் வார்த்துக் கொண்டிருப்பவர்கள் இந்தத் தரகர்கள்தான் என்றாலும் அது மிகையானதல்ல.

இனிக்க இனிக்கத் தேன் சொட்டக் கதைக்கும் இவர்கள் தமது தரகுப் பணத்திலேயே குறியாக இருப்பார்கள். சீதனத்துக்காக வழங்கப்படும் தொகை எவ்வுளவுக்கு எவ்வளவு அதிகரிக்கின்றதோ அதே வீதத்தில் தமது தரகுப் பணத்தின் தொகையும் அதிகரிக்கவே செய்யுமென்ற சூத்திரத்தை அறிந்த கணித மேதைகள் இவர்கள்தான். இதனால்தான் சீதனத் தொகையை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இவர்களில் சில நல்லவர்களும் இருக்கின்றார்கள் என்பதை மறுப்பதற் கில்லை. ஆனால் மொத்தமாகப் பார்க்கும் போது மேலே கூறிய கருத்து மிகவும் பொருத்தமானதாகவே இருக்கும்.

### சீதனம் என்னும் சமூக கொடுமை ஒழிக்கப்பட வேண்டும்

எனவே இந்த சமூகக் கொடுமையை அகற்றுவதில் அனைவரும் கைகோர்த்துக் கொண்டு முனைப்புடன் செயற்பட வேண்டும். இதன் மூலமாகவே பல ஏழைப் பெண்களின் கண்ணீரைத் துடைக்க முடியும். சீதனம் வாங்கித்தான் தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற இழிநிலை ஆண்களின் மனங்களிலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும். இதற்குச் சட்டங்களை இயற்றுவதால் மட்டுமே பயனில்லை. சமுதாயத்தில் பெரியதொரு மனமாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலமே பெண்கள் குடும்பத்துக்குச் சுமை எனும் இழிசொல் அகற்றப்படும். எதற்கெடுத்தாலும் பெண்களையே முதலிடத்தில் வைத்துப் பூசிக்கும் எம்மவர்கள் சீதனம் இல்லாததோர் புதிய உலகைப் படைப்பதற்கு முயன்றால் அவன்தான் இந்த உலகின் பெருமைக்கு வலுச் சேர்க்கும்.

அத்துடன் பெண் வீட்டாரிடம் சீதனம் என்ற பெயரில் கையேந்துவது மோசமானதொரு செயல் என்பதை ஆண்வீட்டார் புரிந்துகொள்ள வேண்டும். பெண்ணின் துணையின்றி ஆண் ஒருவனால் வாழ முடியுமென எந்த ஆணாலும் துணிந்து கூற முடியுமா? கூறவே முடியாது. அந்த நிலையில் பெண்ணும் வேண்டும், கூடவே சீதனமும் வேண்டுமென இவர்கள் நடந்து கொள்வதைதான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இந்த உலகிலே பெண்கள் முழுமையான சுதந்திரத்தையும் நிம்மதியையும் அனுபவிக்க வேண்டுமானால் முதலில் இந்தச் சீதனப் பேயை முற்றாக அழித்தொழிக்க வேண்டும். இதனை விடுத்து மகளிர்தினம், பெண் விடுதலை, பெண்களின் உரிமை என்றெல்லாம் நாம் கூறுவதில் அர்த்தமே கிடைக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிவாய்க்கால் பிரச்சினை

கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

ஆரம்ப காலங்களில் எமது முன்னோர்கள் விவசாயத் தொழிலைத் தமது பிரதான தொழிலாக மேற்கொண்டு வந்தனர். இதனால் விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் விவசாய நிலங்களில் பொதுக் கிணறுகளை அமைத்து அவற்றிலிருந்து ஒரு ஒழுங்கு முறைக்கமைய கிணற்றை அண்டியுள்ள தோட்டச் சொந்தக்காரர்கள் தமது தோட்டக் காணிகளுக்கு நீர்ப் பாய்ச்சி வந்தனர். தனித்தனித் தோட்ட நிலங்களுக்கும் நீர்ப் பாய்ச்சலை மேற்கொள்ள அமையும் வழிவாய்க்கால்களுக்கும் காணிக்காறர்களுக்கு உருத்துண்டு என்பது அந்தக் காணிகளுக்கான உறுதியிலும் குறிப்பிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்.

இந்தப் பொதுக் கிணறுகளில் இருந்து நீரைப் பாய்ச்சி விவசாயிகள் விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர். பொதுக்கிணறு உள்ள சுற்று வட்டாரத்தில் பலரது விவசாயக் காணிகள் காணப்படுவதால் விவசாயக் காணிகளுக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு வழிவாய்க்கால் பாதையை அமைத்தனர். வழிவாய்க்கால் பாதையைப் பயன்படுத்தி பொதுக் கிணற்றில் இருந்து நீரை எடுத்து விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர். அந்தக்கால கட்டத்தில் இந்த வழி வாய்க்கால் பாதை முறைமையால் எந்த வொரு பிரச்சினையும் எழவில்லை.

சமீப காலமாக வழி வாய்க்கால் பிரச்சினை பல இடங்களில் எழுந்துள்ளது. விவசாய நிலங்களாகக் காணப்பட்டதால் ஒருவருடைய காணியின் ஒரு புறத்து எல்லையில் இன்னொருவருடைய காணிக்கு வழிவாய்க்கால் பாதை செல்கிறது. இதனால் வழிவாய்க்கால் பாதை சிலருடைய காணியின் ஒரு புறத்து எல்லையால் செல்வதை விரும்பாத காணிக்காரர்களால் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இந்த விடயத்தில் விவசாயியொருவர் தமது காணியின் எல்லையில் அடுத்த காணிக்குச் செல்லும் வழிவாய்க்கால் மூலம் அடுத்த காணிக்காரர் நீர் பாய்ச்சுவதைத் தடுத்ததால் பக்கத்துக் காணிக்காரர்கள் பொதுக் கிணற்றில் இருந்து நீரை எடுக்க முடியாமல் போக விவசாயத்தையும் கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்த வழிவாய்க்கால் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வந்து செயற்படுவார்கள் ஆயின் இந்தப் பிரச்சினைக்கு வழி பிறக்கும். இல்லாது போயின் வழிவாய்க்கால் பிரச்சினையில் விவசாயிகளுக்கு இடையில் மோதல்கள் அதிகரிக்கும் என்பது உண்மை. வழிவாய்க்கால் பிரச்சினையில் இணக்க சபை முழுமையான நடவடிக்கையை எடுக்குமாயின், இந்தப் பிரச்சினையை இல்லாது ஒழிக்க முடியும். கண்டும் காணாமலும் இணக்க சபை தமது பணியை மேற்கொள்ளுமாயின் இந்தப் பிரச்சினை அதிகரித்துச் செல்வதற்கு வழிவகுக்கும்.

வழிவாய்க்கால் பாதையை ஒருவர் தடுக்கும் நிலையில் பொதுக் கிணற்றையே மூடிவிடும் அளவுக்கு பிரச்சினை உச்சம் அடையும் வழி வாய்க்கால் பாதையூடாக நீர்பாய்ச்சி விவசாயத்தை மேற்கொண்டு வந்தவர்கள் மீண்டும் தமது விவசாயத்தொழிலை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உண்டு.

வலிகாமப் பகுதியில் 60 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயிகள் பொதுக் கிணற்றில் இருந்து வழிவாய்க்கால் வழியே நீர் எடுத்து விவசாயம் செய்து வருகின்றனர். ஆனால் இப்பொழுது தான் இவர்களுக்கு வழிவாய்க்கால் பிரச்சினை பெரும் பிரச்சினையாக எழுந்துள்ளது.

கடந்த வாரம் மாலை 5 மணி இருக்கும். வலிகாமப் பகுதி ஒன்றில் 40 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயத்தை மேற்கொண்டுவரும் விவசாயி ஒருவரைச் சந்தித்தேன். அவரது விவசாயத் தொழில் எப்படி இருக்கிறது? வாழ்க்கைக்கு இந்தத் தொழிலின் மூலம் கிடைக்கும் வருமானம் போதுமானதா? என்று விசாரித்தேன். அவரோ, "இந்தக் காலத்தில் விவசாயத் தொழிலில் பெரிய அளவில் இலாபத்தை ஈட்ட முடியாமல் இருக்கிறது.

விவசாயத் தொழிலை பரம்பரையாக மேற்கொண்டு வருவதால் இந்தத் தொழிலை விட முடியாமலும் இருக்கிறது. ஆரம்பக் காலங்களில் விவசாயிகள் மத்தியில் ஒற்றுமையும் கூட்டு மனப்பாங்கும் நிலவின. இப்பொழுது இந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்கும் ஒருவரும் இல்லை. அதிகாரிகள் பேருக்கு வந்து பார்த்து ஏதோ எழுதிக் கொண்டு போகிறார்கள். அவ்வளவுதான். ஊக்குவிப்புக்கான செயற்பாடு எவையும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை" என்றார். நானோ "இந்தத் தொழிலை மேற்கொள்வதால் உங்களுக்கு வேறு ஏதாவது பிரச்சினை இருக்கிறதா?" என்று கேட்டேன். அவரோ "வழி வாய்க்கால் பிரச்சினை பெரும்பாடாக இருக்கிறது. எனது காணியின் எல்லையில் உள்ள வழிவாய்க்காலால் எனது காணிக்கு நீர் பாய்ச்ச இயலாது என்று சொல்லி முன் காணிக்காரர் வழிவாய்க்கால் பாதையை தடுத்துவிட்டார். இதனால் காணியில் நான் போட்டிருந்த கீரை நீர் இன்றிக் கருகி அழிந்துவிட்டது" என்றார். நானோ "இணக்க சபைக்கு போக வேண் டியதுதானே" என்றேன்.

அவரே "போனேனே; கடந்த மாதம் இணக்க சபையில் போய் வழக்குப் பதிவு செய்தேன். இணக்க சபையோ என்னையும் வழிவாய்க்கால் பாதையை தடுத்த முன் காணிக் காரரையும் ஒரு நாள் அழைத்து இருவருடைய காணி உறுதிகளையும் பரிசீலித்தது. இரு வருடைய காணி உறுதிகளிலும் வழிவாய்க்கால் பாதை இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தியது. இதனால் வழிவாய்க்கால் பாதையை முன் காணிக்காரர் தடுக்க இயலாது என்று இணக்க சபை ஒரு முடிவுக்கு வந்தது. ஆனாலும் முன் காணிக்காரரோ நான் விடமாட்டேன் என்று இணக்க சபைக்கு முன்னிலையிலேயே கத்தி கூச்சலிட்டு விட்டுச் சென்றார். அவர் கூச்சலிட்டுக் கத்தியதைப் பார்த்தால் கண்டிப்பாக வழிவாய்க்கால் பாதையைப் பயன்படுத்த என்னை விடமாட்டார் போலிருக்கிறதே என்று இணக்க சபைக்குச் சொன்னேன். அவர்களோ அப்படி நடந்தால் திரும்பவும் தம்மிடம் முறையிடுமாறு சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள். ஆனாலும் எனது காணியில் விவசாயத்தை மேற் கொள்ள முடியாமல்தான் இருக்கிறது. ஏனெனில் முன் காணிக்காரர் அடிக்கடி நான்கு ஐந்து பேரைக் கூட்டிக் கொண்டு வந்து மிரட்டும் தொனியில் அச்சுறுத்துகிறார்" என்றார்.

நானோ "மறுபடியும் இணக்க சபையில் முறையிட வேண்டியதுதானே என்றேன் அவரோ" இணக்க சபையினரிடம் சொன்னேன். அவர்களோ வழிவாய்க்கால் பாதையை தடுத்தால் பொலிஸாரைக் கூட்டிக்கொண்டு வரும்படியும் தாங்களும் அங்கு வந்து ஆராய்ந்து முடிவெடுப்பதாகவும் என்று சொல்லி இருக்கினம். இணக்க சபையே முன் வந்து பொலிஸாரை அழைத்து இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு விடைபெற்றுச் சென்றார்.

வழிவாய்க்கால் பிரச்சினை, பாரம்பரியமாகச் செய்து வந்த இவரது விவசாயத் தொழிலையே பாதிக்கும் அளவுக்கு வந்து விட்டது. இப்படியான வழிவாய்க்கால் பிரச்சினைக்கு முகம்கொடுத்து நிற்கும் விவசாயிகளின் பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டு வர இணக்க சபைகள் முழு முயற்சி எடுத்துச் செயற்பட்டு நீதியை நிலைநாட்ட வேண்டியது இன்றைய காலத்தின் தேவை.

பொலிஸ், நீதிமன்றம், வழக்கு என்று பிரச்சினையை நீட்டிக் கொண்டு செல்லாமல், இத்தகைய சிறுசிறு சிக்கல்களை நியாயமான விதத்தில் தீர்த்து வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட முறை மையே இந்த இணக்க சபைகள் நடைமுறை.

மேற்சொன்ன விடயத்தில் சம்பந்தப்பட்ட இணக்கசபை நீதியாக, நியாயமாகச் செயற்பட்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலும் என எதிர்பார்க்கலாம். இதன் மூலம் அவர்கள் விவசாயத்தையும் காத்தவர்கள் ஆவார்கள்

---

# சமையற் கலையின் அவசியம்

மகிந்தினி விஜயகுமார்,
நீர்வேலி.



உலகிலுள்ள ஜீவராசிகளுள் சிந்திக்கும் ஆறறிவு படைத்த மனித இனம் மாத்திரமே இயற்கைப் பொருள்களைச் சமைத் துண்ணும் வழக்கத்தைக் கொண்டது. உணவினை சுவையுடன் சமைத்தல் என்பதை ஒரு கலை என்றே கூறலாம். எமது கலாசாரக் கூறுகளில் சமையலும் ஒரு கலையாகப் பேணப்படுகின்றது. சமையற் கலையில் தமிழர்கள் தமக்கென ஒரு தனித்துவத்தைப் பின்பற்றினர். காலதேச வர்த்தமானங்களுடன் பொருந்திய தமிழர் தம் சமையற்கலை அறிதற்கும் அனுபவித்தற்கும் உரிய ஒன்று என்பதில் ஐயமில்லை. சுவையையும் ஆரோக்கியத்தையும் முக்கியப்படுத்தும் தமிழர்களின் சமையற்கலை தமிழர்களின் மற்றைய கலைகளைப் போலவே மிக நுட்பம் பொருந்தியது.

மனிதன் உயிர்வாழ்வதற்கு உணவு மிகவும் இன்றியமையாதது. இத்தகைய உணவு ஆரோக்கியம் நிறைந்ததாகவும் சுவையுடையதாகவும் அமைய வேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சியாக உணவருந்தலாம். வெறும் பசிக்காக உணவருந்துவது என்பது உடல் நலத்துக்குத் தீங்கினை விளைவிக்கும் செயலாகும். எனவே தான் நாம் உண்ணும் உணவு உடல் ஆரோக்கியம் தருவதாகவும் அமையவேண்டும்.

இத்தகைய சமையற் கலையை பெண்கள் அறிந்தும் அனுபவித்தும் வைத்திருக்க வேண்டியது மிக மிக அவசியமான தொன்றாகும். இல்லற வாழ்வில் இல்லம் சார்ந்தவேலைகள் பெண்களுக் கென வகுக்கப்பட்டதால் தமிழர் மரபில் சமையற் கலை பெரும்பாலும் பெண்களுக்கே உரிய தாயிற்று. காலமாற்றத்தால் தமிழ்ப் பெண்கள் சமூகப் பொறுப்புக்களில் பங்கு கொள்வதாலும், வேலைப் பழுவாலும் சமையற்கலையைப் பேணும் வாய்ப்பு நாடளவில் மங்கிப் போகின்ற நிலைமையைப் பார்க்கின்றோம். இந்த நிலை மாற வேண்டும். பெண்கள் சமையற் கலையில் தமக்கென ஒரு தனியான இடத்தைத் தமதாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பெண்களும் சமையற் கலையில் வல்லவர்களாகத் திகழ வேண்டும். படிக்கும் பெண்களாக இருந்தாலும் சரி, வேலைகளுக்குச் செல்லும் பெண்களாக இருந்தாலும் சரி திட்டமிட்டு வேலைகளைச் செய்யப் பழகிக் கொண்டால் தாமாகவே சமைத்து உண்ணும் செயற்பாட்டைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். அனைவரும் ஆரோக்கியமாகவும் நோய் நொடியின்றியும் வாழலாம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றார் எம் தமிழ் மூதாட்டி ஔவை. எவ்வளவு உண்மை பொதிந்த கூற்று. நோய் நொடியின்றி வாழ முதலில் நாம் உணவுப் பழக்கத்தைச் சீர்செய்துகொள்ள வேண்டும். உடல் ஆரோக்கியம் நிறைந்த உணவுகளை விதம் விதமாகவே எமது கைப்படவே நாம் சமையல் செய்ய வேண்டும்.

சமைக்கத் தெரியாது, நேரம் [illegible] யாது என்று கூறிக்கொண்டு [illegible] பல பெண்கள் வீட்டில் சமைக்காது உணவகங்களிலும் கண்ட கண்ட இடங்களிலும் உணவையும் சிற்றுண்டிகளையும் வாங்கி தாமும் உண்டு, தமது குடும்பத்தினருக்கு வழங்கி பெருமளவு பணத்தையும் விரயம் செய்து, நோயையும் வாங்கிக் கொள்கின்றனர். இந்தத் தீங்கான நிலைமையிலிருந்து பெண்கள் மாறவேண்டும். பெண்களுக்கே உரித்தான தார்மீக கடமையை உணர வேண்டும்.

பல வீடுகளிலே உறவினர், நண்பர்கள் [illegible] தயாரிக்கப்பட்ட உணவை வாங்கிக் கொடுப்பதை இன்று பல இடங்களில் காணலாம். அவர்கள் அந்த நேரங்களில் படும் சங்கடங்களையும் அறியலாம். விருந்திற்கு என்று நாம் அழைக்கும்போது அவர்களுக்கு எமது கைப்படவே ஆக்கி உணவளிப்பதே சிறந்தது. அவர்கள் விருப்பமும் அதுவாகத்தான் இருக்கும். பொதுவாகவே உணவளிப்பது என்பது பக்குவத்தோடு சமையல் செய்து முக மலர்ச்சியோடு வழங்கப்பட வேண்டிய தொன்றாகும். அப்போதுதான் அவர்களின் பாராட் டையும் பெற்றுக் கொள்ளலாம். நாமாகவே தயாரித்த உணவை ஒருவர் உண்டபின் நன்று என்று கூறிவிட்டால் எமக்கு ஒருவித மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கையே.

எனவே" ஒவ்வொரு பெண்களும் சமையற் கலையின் அவசியத்தையும் தார்ப்பரியத்தையும் உணர்ந்து, புரிந்து சமையல் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். இந்தக் கலையின் நுட்பங்களை அனுபவம் மூலம் அறிந்து கொள்ளுங்கள். உறவுகளை மகிழ்ச்சிப்படுத்துங்கள். எல்லோரையும் அசத்தி ஆனந்தமாக வாழப் பழகுங்கள். உங்கள் வாழ்க்கையிலும் வசந்தம் வீசட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களை முடக்கி போட்டு விட்ட கணினி யுகம்.....

- நிலா

இன்று செல்போனும், கணினியும் இல்லாத வீடே இல்லை. இவையிரண்டும் இல்லாவிட்டால் மனித குலத் தின் செயல்பாடுகளே முடங்கி விடும் என்பதே இன்றைய வாழ்க்கை முறை.



இன்றைய நவீன வாழ்வியல் தேவைகளில் தகவல் தொடர்பு மின்னணு சாதனங்கள் மனித வாழ்வில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. இவை இல்லாத மனித வாழ்வை யாரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு அவை எம் வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்டன.

காடுகளிலும், மலைகளிலும் விலங்குகளோடு விலங்குகளாக அலைந்து திரிந்து கொண்டிருந்த மனிதன் சைகைகளின் மூலமும் ஓசைகளின் மூலமும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டான். இதுவே தகவல் தொழில்நுட்பத்தின் முதல் படி. அன்று தொடங்கிய இதனது வளர்ச்சி, இன்று பல்வேறு துறைகளிலும் தன் விழுதுகளைப் பாய்ச்சி, உலகின் எந்த மூலையில் எது நடந்தாலும், அதை அடுத்த நொடியே நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தி, உலகத்தையே நம் உள்ளங்கைக்குள் சுருக்கிவிட்டது.

அதிலும் இன்று செல்போனும், கணினியும் இல்லாத வீடே இல்லை. இவை இரண்டும் இல்லாவிட்டால் மனித குலத்தின் செயற்பாடுகளே முடங்கிவிடும் என்பதே இன்றைய வாழ்க்கை முறை.

கோடிக்கணக்கான ரூபாய்களை வரவு - செலவு செய்யும் வங்கிகள் தொடங்கி, ஆயிரக்கணக்கான பயணிகளை ஓரிடத் திலிருந்து மற்றோர் இடத்துக்கு அழைத்துச்செல்லும் ரயில் போக்குவரத்து, வியாபாரம், கல்வி, மருத்துவம் என கணினி கால் பதிக்காத துறையே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

கல்வித்துறையில் கணினி பயிலும் மாணவர்கள் மட்டுமே கையாளும் கணினிகளை, இன்று அனைத்துப் பிரிவு பள்ளி, கல்லூரி மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் தமிழகத்தில் அரசே அதனை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது.

இன்று நாட்டில் நடைபெறும் பெரும்பாலான கொலை, கொள்ளைச் சம்பவங்களில் பொலிஸார் துப்புதுலக்கி குற்ற வாளிகளைக் கைது செய்வதற்கு செல்போன் மற்றும் கண்காணிப்பு கமராக்கள் பெரிதும் பயன்படுகின்றன. சுனாமி, புயல், வெள்ளம், கனமழை என அனைத்து வகையான இயற்கைச் சீற்றங்களையும் முன்கூட்டியே அறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து நம்மைத் தற்காத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

மருத்துவத் துறையிலும் முன்புபோல உடலைக் கிழித்து செய்யும் அறுவைச் சிகிச்சைகளுக்குப் பதிலாக உடலில் ஒரே ஒரு துளை போட்டு அத் துளையின் வழியே உடல் உள்ளுறுப்புகளைப் பார்த்து செய்யும் அறுவைச் சிகிச்சைகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. மூளையையும், உடல் உள் உறுப்புகளையும் பல கோணங்களில் படம்பிடித்துக் காட்டக் கூடிய நவீன அறிவியல், மனிதன் முழுமையாகக் கணினிமயமாகி விட்டதைத்தான் காட்டுகிறது.



இவ்வாறு மனித வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட கணினி யுகம் பல்வேறு குறைகளையும், தீமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எந்தவொரு கண்டுபிடிப்பையும் நன்மைக்காகப் பயன்படுத்துவ்தும், தீமைக்காகப் பயன்படுத்துவதும் எம் கையில் தானே இருக்கிறது?

அதில் மிக முக்கியமான பிரச்சினை, பெருகிவரும் சைபர் கிரைம்' என்றழைக்கப்படும் தகவல் தொழில்நுட்பக் குற்றங்கள் தொடர்பானதாகும். வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமலேயே அவர்களின் வங்கிக் கணக்கிலிருக்கும் பணத்தை இணையத்தளம் வழியாகத் திருடுவது; மற்ற நிறுவனங்கள் மற்றும் அரசின் தகவல்களைத் திருடுவது, ரயில்கள் மற்றும் கோயில் போன்ற இடங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது, பெண்களுக்கு ஆபாசமான குறுஞ்செய்திகளை அனுப்புவது என பெருகிவரும் 'சைபர்' குற்றங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.



கணிசமான இளைஞர்கள் இணையத் தேடல்களில் சினிமா, கிரிக்கெட் செய்திகளுக்கு முக்கியத்துவம் தருகின்றனர். நண்பர்களுடன் வெட்டியாக அரட்டை அடிக்கவும் பயன் படுத்துகின்றனர். ஆக்கபூர்வமான அறிவுத் தேடல்கள் மேற்கொள்வோர் மிகமிகக் குறைவு.

பெருகிவரும் மக்கள்தொகை, வேலையில்லாத் திண்டாட்டத்தில் எமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, வாழ்வை முன்னேற்றிக் கொள்ள இளம் தலைமுறையினர் சிந்திக்க வேண்டுமே தவிர, தங்களின் ஆற்றலை இப்படி வீணான விடயங்களில் விரயமாக்கக் கூடாது.

அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் உள்ள இந்தியக் கணினியியல் வல்லுநர்களை நாம் மீண்டும் நம் நாட்டுக்கு அழைத்துக் கொண்டால், அந்த நாடுகளின் இயக்கமே கணிசமாக நின்றுபோகுமளவுக்கு இந்தியர்களின் மூளைகளே அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருக்கின்றன. சுமார் 35 சதவீதத்துக்கும் மேலான இந்தியர்கள் வெளிநாடுகளில் கணினித் துறையில் பணியாற்றி வருகின்றனர் என்றால், நமது திறமையின் அளவை நாமே எடை போட்டுக் கொள்ளலாம்.

பாலை உறிஞ்சி, நீரை ஒதுக்கும் அன்னப் பறவைபோல நன்மையைப் பயன்படுத்தி, தீயவற்றை நீக்கும் மனப் பக்குவம் நம் அனைவருக்கும் வந்தால்தான், முன்னேற்றம் என்பது சாத்தியப்படும்.



- ஜனா

# இணையத்தில் தீயாய் பரவுகிறது 'கோபம்'

உலகை ஒன்றாக இணைத்திருப்பதன் மூலம் தகவல் தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கும் இணையத்தில், கோபம் தான் மிக வேகமாகப் பரவும் மனித உணர்வு என்று சீனாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

மனிதர்கள் மத்தியில் இன்று மிகவும் பிரபல்யமாகி, வாழ்வுடன் ஒன்றிப் போயிருக்கும் ஒரு சமூக இணையத் தளம் டுவிட்டர். குறிப்பிட்ட ஒரு விடயத்தைப் பற்றி, மக்கள் தூண்டப்பட்டதும் தமது கருத்துக்களை அவர்கள் டுவிட்டரில் சென்று பதிந்து விடுகிறார்கள்.

உதாரணமாக சர்ச்சைக்குரிய ஒரு கருத்து, அது ஒரு சினிமா நடிகை கூறிய கருத்தாக இருக்கலாம் அல்லது அரசியல்வாதியின் உளறலாகவும் இருக்கலாம். அந்த கருத்தைக் கேள்விப்பட்ட அல்லது பார்த்த அல்லது படித்த உடனே டுவிட்டர் ஆர்வலர்கள் தமது கருத்துக்களை பதிந்து விடுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட விவகாரம் குறித்து பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள்? அவர்கள் மத்தியில் என்ன கருத்துகள் நிலவுகின்றன? என்பதை அறிய விரும்பும் ஆய்வாளர்கள், முதலில் நாடுவது டுவிட்டர் போன்ற இணையத்தளங்களைத்தான். இப்படிப்பட்ட உலக சமூக இணையத்தளங்களில் ஒன்றுதான், வே-போ. மேற்குலகின் டுவிட்டர் போன்றது சீனாவின் இந்த வே-போ. ஐந்நூறு மில்லியன் மக்கள் இதனைப் பயன்படுத்துகிறார்கள்.

நூறு மில்லியன் கருத்துகள் தினமும் இதில் பதிவாகின்றன. தமது சீன நாட்டின் இந்த வே-போ இணையத்தளம் பற்றி, தலைநகர் பீஜிங்கிலுள்ள பே ஹாங் பல்கலைக்கழகம் நடத்திய ஆராய்ச்சியில் சில சுவாரஸ்யமான விஷயங்கள் வெளி யாகியுள்ளன.

வே-போ பயனீட்டாளர்களின் சொற்பிரயோகம், எமோட்டிகான்' என்கிற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கேலிச்சித்திரப் பிரயோகம் ஆகியவற்றை ஆராய்ந்த பல்கலைக்கழக ஆய்வாளர்கள், வே-போவில் வெளியிடப்படும் கருத்துக்களை கோபம், சோகம், குதூகலம், விரக்தி என்று நான்கு பிரிவுகளாக பிரித்துத் தொகுத்தார்கள்.

அவற்றை அவர்கள் ஆய்வுசெய்தபோது, கோபமூட்டும் பதிவுகளே மக்கள் மத்தியில் அதிக அளவில் பகிர்ந்து கொள்ளப்பட்டதை கண்டறிந்தார்கள். இதற்கு காரணம், கோபக்கார பதிவர்களுக்குக் கோபக்கார நண்பர்கள் ஏராளமாக இருப்பதாகக் கூட இருக்கலாம். சீனாவிலுள்ள சமூகப் பிரச்சினைகள், வெளிநாடுகளுடனான இராஜந்தந்திர தகராறுகள், இவை போன்ற தகவல்கள் வே-போ தளத்தில் ஆத்திரத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன என்று ஆய்வுகள் காட்டின.

கோபமூட்டும் பதிவுகளே மக்கள் மத்தியில் அதிக அளவில் பகிர்ந்து கொள் ளப்பட்டதை கண்டறிந்தார்கள். இதற்கு காரணம், கோபக்கார பதிவர்களுக்குக் கோபக்கார நண்பர் கள் ஏராளமாக இருப்பதாகக் கூட இருக்கலாம். சீனாவிலுள்ள சமூகப் பிரச்சினை கள், வெளிநாடுகளுடனான இராஜந்தந்திர தகராறுகள், இவை போன்ற தகவல்கள் வே-போ தளத்தில் ஆத்திரத்துடன் பகிர்ந்து கொள்ளப் பட்டன என்று ஆய்வுகள் காட்டின.

2010 ஆம் ஆண்டில் ஆறு மாத காலம் சுமார் இரண்டு லட்சம் வே-போ பாவனையாளர்களின் எழுபது மில்லியன் பதிவுகள் ஆராயப்பட்டு இந்த முடிவுகள் எட்டப்பட்டன.

இதேபோல, பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் சிலர் கண்டுபிடித்துள்ள ஒரு கணினி தொழில்நுட்பம் டுவிட்டர் தளத்தின் மூலம், ஒரு நாட்டின் உணர்வை அறிய முடிகிறது, ஒரு விடயத்தைப் பற்றி ஒருவர் ஆத்திரம் கொண்டிருந்தால், அதே ஒத்த கருத்தை உள்ளவர்களுடன் அவர் இணைவது இயற்கை தான் என்று தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







செயற்றிறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் நாமும் நமக்கோர் நலியாக் கலையுடை யோம் எனும் தொனிப் பொருளிலான இளையோர் நாடகவிழா இரண்டு காட்சிகளாக வெள்ளிக்கிழமை யாழ்.பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலே இடம்பெற்றன. இந்த நாடக விழாவிலே வார்த்தைகளை நறுக்காகப் பேசி படிமங் களூடாக கதைபேசும் நான்கு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. 'கருப்பைத் தறுக்கணிப்பு' என்ற நாடகம் தாய்நிலம் மடைாடுதல் பற்றி பேசுகின்றது. 'வெப்பக் குடுவை' தாயை தொலைத்து தாயைத் தேடும் பிள்ளைகள் பற்றியும் அவர்களின் துயரம் பற்றியும் பேசுகின்றது. நல்லதாங்காள் என்ற ஓராள் அறங்காற்றுகை தனித்திருக்கும் பெண்களின் பஞ்சம் பற்றியும் பேசுவதோடு பட்டினி போக்க தம்மைத் தொலைப் பது பற்றியும் பேசுகின்றது. அதேபோன்று கடலில் கிடந்த பெருமூச்சு என்ற ஓராள் அரங்காற்றுகை கடலை நம்பி வாழ்பவர்களின் துயரம் பற்றி பேசுகின்றது. இந்த நாடகங்களுக்கான எழுத்துரு, நெறியாள்கையை செயற்றிறன் அரங்க இயக்கத்தின் இயக்குநர் தே.தேவானந் மேற்கொண்டுள்ளார். நாடக விழாவிலே பாடசாலை மாணவர்கள், பல்கலை மாணவர்கள், நாடக ஆசிரியர்கள், நாடக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விண்வெளி வானிலையால் தொலைத்தொடர்புக்கு ஆபத்து

பூமிக்கு அருகில் புதிதாக விண்வெளி வானிலை எனப்படும் 'ஸ்பேஸ் வெதர்' உருவாகலாம் என விஞ்ஞானி கள் தெரிவித்துள்ளனர். சூரியனிலி ருந்து வெளியேறும் சூரிய புயல் மற் றும் புவியின் காந்தப்புலத்தால் இந்த 'ஸ்பேஸ் வெதர்' உருவாகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்பட்டால் தொலை தொடர்பு அமைப்புகள், ஜி பி எஸ் தொழில்நுட்பக் கோளாறு, மிகப் பெரிய மின் தடை, செயற்கைகோள் செயலிழப்பது போன்றவை ஏற்பட லாம் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட இந்த புதிய ஆய்வு, பூமியை சுற்றியுள்ள விண்வெளி சூழலை அறிந்து கொள்ள உதவியாக இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறினர்.

சூரியனிலிருந்து வெளியாகும் சக்தியானது புவியின் காந்தப்புலத்தில் சேமிக்கப்படுகிறது என்றும் விண் வெளி வானிலை என்பது புவி காந்தப் புலத்தில் உருவாகிறது என்றும் அவர்களது ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். விண்கலங்கள் அனுப்பிய சமிக்ஞைகளிலிருந்து தகவல்கள் பெறப்பட்டு ஆய்வு நடத்தப்படுவதாக தெரிவித்தனர்.




31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
30.08.1944

உதிர்வு
02.09.2013

திதி:
அபரபட்ச துவாதசி
(02.10.2013)

அமிர்தலிங்கம் ஜெயராஜசிங்கம்

(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர், SHYAAM BUILDERS உரிமையாளர்)

02.09.2013 அன்று இறைபதமடைந்த அமிர்தலிங்கம் ஜெயராஜ சிங்கம் அவர்களின் மரணச் செய்திகேட்டு அனுதாபம் தெரிவித்ததோடு, அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகளை மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்வ துடன், அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை நாளை (03.10.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் இதில் அனை வரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P: 077 3931710

என்றும் நினைவால் வாடும்
அன்பு மனை...,
மருமக்கள், பேரப்...

(32536)(3.6.10)






RIVER BRAND
Zinc Aluminium Colour/Non-Colour Roofing & Cladding

மழையோ, வெயிலோ, காற்றோ..
நாம் நிழல் தந்து உங்களைப் பாதுகாப்போம்.

*தென்கொரியாவில் இருந்து இறக்குமதியாகும் சர்வதேச தரத்துடன் கூடிய உற்பத்திகள்
*நீடித்து நிலைக்கும் நிலைபேறு. *பரந்த தெரிவுகளும் நிறங்களும்

மற்றுமொரு தரமான உற்பத்தியைத் தரும்
என்.வைத்தியலிங்கம் அண்ட் கோ (ப்ரைவேற்) லிமிட்டெட்
... மாவத்தை, கொழும்பு 13. தொலைபேசி: 2433143-5, 2328842, 4616021-2
... 448-450, பழைய சோனகத் தெரு, கொழும்பு 12. தொலைபேசி: 2327488, 2459963
... தொலைபேசி: 024 4925809, விற்பனை நிலையம் ... – தொலைபேசி: 4380859, 072 5284029, மின்னஞ்சல்: nvcgroup@sltnet.lk

NINETY ONE YEARS OF EXCELLENCE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடலைப் பாதுகாப்போம்



ஒவ்வொருவரும் தத்தம் கடமை என உணர்ந்து செயற்பட்டால் சூழல் சுத்தம் பேணப்படும். மற்றும் நாம் மற்றவர்களது சுக நலங்களையும் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். கண்ட கண்ட இடங்களில் குப்பை போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

மனித நல்வாழ்வுக்கு சுற்றாடலே முதல் காரணமாக அமைகிறது. மனிதனின் எல்லாவிதத் தேவைகளுக்கும் சுற்றாடலே இருப்பிடமாகும். எனவே எமது வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய சுற்றாடலைப் பாதுகாப்பது அவசியமாகும். எம்மைச் சூழவுள்ள நிலம், நீர், வளி அனைத்தும் சுற்றாடலே ஆகும். மனிதன் தனது தேவைக்காக இவற்றை மாசடையச் செய்கின்றான். இயற்கை வளங்களை அழிக்கின்றான். இவ்வாறான செயற்பாட்டைத் தடுத்து சுற்றாடலைப் பாதுகாத்தல் அவசியமாகும்.

மரங்களை அதிகளவு அழிப்பதால் மழை குறைவடைவது மாத்திரமன்றி, உயிரினங்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒட்சிசன் வாயுவின் செறிவும் வளிமண்டலத்தில் குறைவடைந்து செல்கின்றது. அதிகரித்த போக்குவரத்துச் சாதனங்கள் வெளியிடும் புகை, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை போன்றவற்றால் வளி மாசடைகிறது. விண்வெளி ஓடங்கள் வளிமண்டல ஓசோன் படையை பாதிப்படையச் செய்கின்றது. இவற்றை தவிர்த்து நாம் சுற்றாடலைப் பாதுகாத்தல் வேண்டும்.

மனிதனது சிந்தனையற்ற செயல்களால் நீர் பெரிதும் மாசடைகிறது. உலக நாடுகள் பலவற்றிலும் இது பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அருகிலுள்ள நீர் நிலைகளில் கலந்து விடுகிறது. இதனால் குடிதண்ணீர் மாசடைகின்றது. இக் குடி தண்ணீரை அருந்துவதனால் வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. எனவே இவற்றிற்கான மாற்று வழிகளைக் கண்டுபிடித்து அவற்றை நடைமுறைப்படுத்தி சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும்.

சுற்றாடலை மாசடையவிடாது பாதுகாக்கும் பெரிய பொறுப்பு மக்கள் அனைவருக்கும் உண்டென்பதை மறந்து விடக்கூடாது. ஒவ்வொருவரும் தத்தம் கடமை என உணர்ந்து செயற்பட்டால் சூழல் சுத்தம் பேணப்படும். மற்றும் நாம் மற்றவர்களது சுக நலங்களையும் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். கண்ட கண்ட இடங்களில் குப்பை போடுவதைத் தவிர்க்க வேண்டும். கழிவு நீர் வாய்க்காலில் அசுத்த நீர் தேங்கி நிற்காதவாறு அவற்றை உடனுக்குடன் அகற்றும் நடவடிக் கையில் ஈடுபட வேண்டும்.

பற்பல மரங்களை நட்டு மழை வளத்தையும் வளி வளத்தையும் சிறப்பாகப் பேண வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சுற்றாட லைப் பாதுகாக்க முடியும். எனவே மக்கள் அனை வரும் சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும். சுற்றா டலைப் பாதுகாப்பதே சுக வாழ்வுக்கு அடித்தளம் என்பதை உணர்ந்து செயற்படுவோமாக

சு.ஆர்த்திகா, தரம்-9 'டி'
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# விவேகானந்தரின் பொன் பொழிகள்



- எந்த வேலையையும் தனது விருப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றுபவன் அறிவாளி.
- மலைபோன்ற சகிப்புத்தன்மை, இடைவிடாத முயற்சி, எல்லையற்ற நம்பிக்கை இவை தான் நற்காரியத்தில் வெற்றி தரும்.
- நீங்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
- நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்லுங்கள். நீங்கள் உறுதியுடன் இருந்தால் பாம்பின் விடம் கூடச் சக்தியற்றதாகிவிடும்.
- நமது நெற்றியில் சுருக்கங்கள் விழட்டும், ஆனால் இதயத்தில் சுருக்கம் விழக்கூடாது. ஏனெனில் இதயம் ஒருபோதும் கிழடு தட்டக்கூடாது.

சி. சிந்து,
சுதுமலை.

# மிதக்க முடியாத மீன்



சுறா மீனுக்கு உடலினுள் நீந்து பை கிடையாது. எனவே இதனால் ஓரிடத்தில் நிலைத்து மிதக்க முடியாது. இது உயிரோடு இருக்க வேண்டுமானால் காலம் முழுவதும் ஓரிடத்தில் கூட நிற்காமல் நீந்திக் கொண்டே இருக்க வேண்டும். ஆயுள் முழுவதும் நீந்திக் கொண்டே இருக்கும் மீன் சுறாமீன் .

# வெளிச்சம்



ஓர் ஊரில் ஒரு மனிதர் இருந்தார். அவர் மிக நல்லவர். யாருக்காவது எதையாவது கொடுக்க வேண்டும் என நினைப்பவர்.

தினமும் யாராவது ஒருவருக்கு ஏதாவது கொடுக்க வில்லை என்றால் அவருக்கு நித்திரை வராது. அப்படி ஒரு பழக்கம். அது மட்டுமல்ல, அவர் கொடுப்பது அடுத்தவர்களுக்குத் தெரியாது. இரகசியமாகக் கொடுப்பார். வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது என்று எண்ணுபவர் அவர்.

ஒரு நாள் இரவு அவர் ஏற்கெனவே தயாராகக் கட்டி வைத்திருந்த பணமுடிச்சைக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியில் வந்து தெருவில் நடந்தார். இன்று யாருக்குத் தருமம் செய்வது என்று யோசித்துக் கொண்டே இருட்டில் நடந்து கொண்டிருந்தார். எதிரில் ஒருவர் வருவது தெரிந்தது. உடனே அவரிடம் போனார். தன்னிடம் இருந்த பண முடிச்சை அவசர அவசரமாக அவர் கையில் திணித்து விட்டுத் திரும்பி வந்துவிட்டார்.

"அப்பாடா... ஒரு வழியாக யாருக்கும் தெரியாமல் இன்றைக்குத் தருமம் செய்தாகி விட்டது!" என்ற மகிழ்ச்சி, மனநிறைவு அவர் முகத்தில். நிம்மதியாக நித்திரை கொண்டு எழுந்தார். மறுநாள் காலையில் ஊர் முழுவதும் ஒரே பேச்சு! "நேற்று இரவு ஒரு திருடன் கையிலே யாரோ ஒருவர் பணத்தைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்!" என்று எல்லோரும் பேசிக் கொண் டிருந்தார்கள். இதைக் கேள்விப்பட்டதும் அந்தப் பெரியவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அடடா! போயும் போயும் ஒரு திருடனுக்கா உதவி செய்திருக்கிறேன். பிரயோசனமில்லாமல் போய் விட்டதே! என்று நினைத்தார்.

சரி, இன்று யாருக்காவது உதவி செய்வோம் என்று முடிவு செய்தார். இரவும் வந்தது. அவர் வழக்கம் போல் கையில் பண முடிச்சுடன் தெருவில் இறங்கி நடந் தார். எதிரில் ஒரு பெண் உருவம் மங்கலாகத் தெரிந் தது. இவர் உடனே அந்தப் பெண்ணிடம் பணத் தைக் கொடுத்து விட்டுத் திருப்தியாகத் திரும்பி வந்து விட்டார். மறுநாள் காலையில் "நேற்று இரவு நெறித வறி நடக்கும் ஒரு பெண்ணின் கையில் யாரோ ஒருவர் பணத்தைக் கொடுத்திருக்கிறார்" என்று ஊர் முழுவதும் பேசிக் கொண்டார்கள். அடடா! இன்றைக்கும் தவறுதலாக நடந்து விட்டதே என்று வருத்தப்பட்டார்.

"இருக்கட்டும்.. இன்றாவது ஏதாவது தருமம் செய்வோம் என்று நினைத்துக் கொண்டார். மூன்றாம் நாள் இரவில் புறப்பட்டார். இப்போதும் எதிரில் ஒருவர் வந்தார். இவர் பணத்தைக் கொடுத்து விட்டு வந்தார். மறுநாள் மக்கள் பேசிக் கொண்டனர். "நேற்று இரவு ஒரு செல்வந்தர் கையில் யாரோ ஒருவர் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருக் கிறார்" என்று. அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. என்ன இது... தினம் இப்படி ஆகிறது என்று நினைத்துக் கொண்டே படுத்துத் தூங்கினார். அன்று இரவு ஒரு கனவு. அந்தக் கனவில் இறைவன் வந்தார்.

"இதோ பார் நீ கொடுத்த தர்மம் வீணாகவில்லை. உன்னிடம் பணம் வாங்கிய அந்தத் திருடன் திருந்தி விட்டான். அந்தப் பெண்ணும் திருந்தி விட்டாள். அந்தச் செல்வந்தனும் கொடையாளி ஆகிவிட்டான் என்று கூறி மறைந்தார்.

அன்று முதல் [illegible] தொடர்ந்து [illegible].

நா.ஸ்ரீகிருஷ்னா,
யாழ்ப்பாணக் கல்லூரி.

# கொதிநீரூற்று



புவியின் பாறைக் குழம்பை அண்டிய நீர் கொதித்து கொதி நீராவியாக மாறி அதிக அமுக்கத்துடன் மேல் நோக்கிச் சிதறுவதுண்டு. இது கொதிநீரூற்று எனப்படும். பிரபல்யம் வாய்ந்த கொதி நீரூற்றுக்கள் நியூசிலாந்து, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன.

சி.கஜானி, தரம்-9டி,
கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்வைக் கோளாறும் கற்றலுக்கு ஆபத்து

சரியாகப் படிப்பதில்லை;எழுதுவதில்லை என்று பிள்ளைகளைப் பற்றி ஆசிரியர்களும், பெற்றோர்களும் சொல்கின்றனர். இதற்கு படிப்பில் ஆர்வமில்லாதது மட்டுமே காரணம் என்று அர்த்தமில்லை. பார்வைக் கோளாறும் காரணமாக இருக்கலாம். பார்வைக்கோளாறு ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்படாவிட்டால் பெரிய ஆபத்தில் முடியலாம்.

கண்களில் அரிப்போ, சிவப்போ, இருந்தால் கண்களைப் போட்டு கசக்காமல் சுத்தமான குளிர்ந்த தண்ணீரில் கழுவி விட்டு தாமதிக்காமல் கண் மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும்.

# இறந்த நேரத்தை காட்டும் 'கடிகாரம்'



விபத்து மற்றும் கொலை உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் இறந்த நேரம் என்பது விசாரணைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

ஆனால், தற்போதுள்ள முறையில் இறந்த நேரம் உத்தேசமாகவே கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் இறந்த நேரத்தை துல்லியமாகக் கணக்கிட உதவும் வகையில் ஒரு கடிகாரத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இது குறித்து ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறுகையில், இறந்தவரின் உடலில் ஏற்படும் பக்றீரியாக்களின் மாற்றத்தைக் கொண்டு அவர் இறந்த நேரத்தை துல்லியமாக அறிய முடியும்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கடிகாரத்தில், அதி நவீன தொழில்நுட்பம் மூலம் ஜீன்களை பகுத்தாய்வு செய்ய முடியும். அதன் மூலம் 48 மணி நேரத்தில் இருந்து நான்கு நாள்கள் வரையிலான கால கட்டத்துக்குள் இறந்த நேரத்தை கண்டறிய முடியும் என்று அவர் கூறினார்.

# 'பதற்றம்' இல்லாமல் வாழ்வது எப்படி?



பதற்றம் இல்லாம மகிழ்ச்சியாக எப்பவுமே இருக்க ஆசையா? ஆசை மட்டும் இருந்தால் போதாது. அதற்கு நாம் சில விடயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான், நம்மால் பதற்றம் இல்லாமல் இருக்க முடியும். உங்களுக்கு பிறர் தீங்கு செய்யும் போது, அந்தத் தவறை நீங்கள் மன்னித்து விடுங்கள். தவறு செய்வது மனித இயல்பு. "போன தடவை அவன் தவறு செய்யும் போது மன்னித்தேன்; இனி என்னால் முடியாது" என்று கூறாதீர்கள். நீங்கள் பிறரை மன்னிக்க மன்னிக்க உங்கள் மனம் பண்படும். அதுமட்டுமல்லாமல் உங்களால் நிம்மதியாகவும் இருக்க முடியும். இதற்கு மருத்துவ ரீதியாகவும் நல்ல பயன் உண்டு. மறப்போம் மன்னிப்போம் என்பதைத் தாரக மந்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் மன்னிக்க முடியாமல் இருக்கும் அவரைப் பார்த்த உடனே அவர் மீது கோபம் வந்து அந்தக் கோபம் பதற்றமாக மாறும். இந்தப் பதற்றம் பலவிதமான நோய்களை ஏற்படுத்தும். இதனால் எமது ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. அதே போல், நீங்கள் செய்யும் தவறுகளுக்கு மற்றவர்களிடம் மன்னிப்புக் கேட்கத் தயங்காதீர்கள். தெரிந்தோ; தெரியாமலோ பல வகைகளில் நாம் தவறு செய்கிறோம். அப்படிச் செய்யும் போது அவரிடம் மன்னிப்புக் கேட்கத் தயங்காதீர்கள்.

வயது வித்தியாசம் பார்க்காமல் உங்கள் தவறை மட்டும் மனதில் கொண்டு மன்னிப்புக் கேளுங்கள். அப்படிக் கேட்கும்போது உங்கள் எதிரி நிச்சயம் பெருந்தன்மையாக நடந்து கொள்வார். அப்படி மன்னிக்காவிட்டாலும், கவலையை விடுங்கள்.

உங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டபோதே நீங்கள் மன்னிக்கப்பட்டு விட்டதாக உள்ளூர நம்புங்கள். அதனால் மன அமைதி கிடைக்கும். தவறு செய்யும் நமக்கு மன்னிக்கும் மனப்பான்மை மற்றும் மன்னிப்புக் கேட்கும் தன்மை ஆகிய இரண்டும் வேண்டும். அவை உங்களை பண்புள்ளவராகக் காட்டும். இதெல்லாம் செய்யத் தயாரானால் வாழ்க்கையில் பதற்றம்மே வராது.

# குண்டு மனிதர்களுக்கு ஒற்றை தலைவலி அதிகம்

**குண்டாக உள்ளவர்களுக்கு, தலைவலி வரும் வாய்ப்பு 81 சதவீதம் அதிகமாக உள்ளது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**




உடல் பருமன் உள்ளவர்களுக்கு 'மிக்ரேன்' எனும் ஒற்றைத் தலைவலி வரும் அபாயம் உள்ளது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவின், பால்டிமோரில் உள்ள ஜான்ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தலைவலி குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதிக உடல் எடை கொண்டவர்களுக்கு, அடிக்கடி அல்லது எப்போதாவது ஒற்றை தலைவலி வரும் ஆபத்துள்ளது. சாதாரணமானவர்களைவிட குண்டாக உள்ளவர்களுக்கு தலைவலி வரும் வாய்ப்பு 81 சதவீதம் அதிகமாக உள்ளது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெர்க்மனின் திரைப்படத்துக்கு மொழி அவசியமில்லை




ருஷ்ய இலக்கியவாதியும் சாகாவரம் படைத்த 19 ஆம் நூற்றாண்டு எழுத்தாளனுமான தஸ்தாயே வெஸ்கியைப் போலவே சினிமாத்துறையில் இயக்குநராக பயணித்தவர் இங்மர் பெர்க்மன். வாழ்வில் ஏற்படும் துன்பங்களை மையப்படுத்தி அவற்றுக்கு ஊடான ஒரு தேடலை உருவாக்கும் கருவே இவரது படங்களின் கதை. சினிமாத்துறைக்குள் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தான் இயக்கும் திரைப்படங்கள் ஒவ்வொன்றையும் கடின உழைப்பின் மத்தியில் அழகாக எடுத்து பார்வையாளர்களை பிரமிப்பூட்டி இருக்கிறார்.

1918 இல் சுவீடனில் ஒரு தீவிர கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த பெர்க்மன் சிறுவயதில் சிறைக்குள் வளர்ந்தார். அந்த சிறை அவரது கவனங்களை திசை திருப்ப விடாமல் அமைந்தது. தந்தையின் கண்டிப்பான குரல் சிறு வயதில் அவருடைய மனதில் வடுக்களாக ஆழப்பதிந்து போனது. அந்த வடுதான் இவரது திரைப்படங்களில் காணப்படும் காட்சிகளில் மையமாக அமைந்தன.

இவரது திரைப்படங்கள் அனைத்துமே தனிமை, அந்நியமாதல் என தீராத வலியைப் பற்றிப் பேசும் கதையாக உள்ளன. இதுவே அவரை சினிமா உலகில் புகழுக்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டுக்களாக அமைந்தன. கற்பனைக் கதைகளைவிட தான் அனுபவித்து வாழ்ந்த நாள்களை கதைகளாக எடுத்து இயக்கி இருப்பது, ஒவ்வொரு பார்வையாளரின் வாழ்வில் ஏற்பட்ட பிரமையை ஏற்படுத்தி இருக்கிறது.

இயக்குநர் பெர்க்மனின் படத்தை பார்ப்பதற்கு எமக்கு மொழி அவசியமில்லை. படத்தில் நடிப்பவர்கள் என்ன பேசுகிறார்கள். கதை எங்கே நகர்கிறது என்ற குழப்பம் எமக்கு ஏற்படாது. படத்தின் காட்சிகள் எமது விரலைப் பிடித்து அழைத்துச் செல்லும். படத்தின் இசை எம்மை அறியாமலேயே எம்மை வேறு உலகத்துக்குள் கொண்டு சென்று மனித மனங்களின் இருண்மைக்குள் அலைவதை உணர முடியும்.

பெர்க்மன் வாழ்க்கையில் ஒரு மைல்கல்லாக 'வைல்ட் ஸ்ரோ பெரிஸ்' படம் அமைந்தது. இறப்புக்காகக் காத்திருக்கும் வயோதிபனின் மனதுக்குள் செல்லும் கமெரா எம்மை தனிமையின் ஆழத்துக்குள் அழைத்துச் சென்று விடுகிறது. மேலும் த்ரூ த கிளஸ் டார்க்கி, சி. சைலன்ஸ், பெர்சோனா, வெர்ஜின் ஸ்பரிங் க்ரைஸ் அண்ட விஸ்பர்ஸ் போன்ற படங்கள் பெர்க்மனின் கைவண்ணத்தில் உலக சினிமாவுக்கு மாபெரும் நன் கொடையாக கிடைத்தன.

1983 இல் அவரது வாழ்க்கையை அடியொற்றி எடுத்த பேனி அண்ட் அலெக்ஸாண்டர் எனும் அவரது திரைப்படம் உலகளவில் பிரமாண்ட வெற்றியை பெற்றதோடு அவரது வாழ்நாளில் மிகச் சிறந்த படமாகவும் புகழ் பெற்றது. சிறுவயதில் தந்தையிடம் வாங்கிய அடிகள், மிரட்சிகள் உண்டாக்கிய மன வலிகளை படத்தில் காட்சிப் படுத்தி பார்வையாளனுக்குள் மறக்க முடியாத வடுக்களை ஏற்படுத்தினார்.

சிறுவயதில் இருந்து எமக்கு அழுத்தப்பட்ட பல்வேறு உணர்வுகளை கிளர்த்தெழச் செய்வதுதான் பெர்க்மனின் வெற்றி. படத்தில் எந்தக் காட்சியில் உணர்வு தோன்றுகிறது என்பதை அறியா வண்ணம் பார்வையாளர் ஒவ்வொருவரும் வாழ்வில் தமக்கு விழுந்த அடிகளை உணரச் செய்ததைத்தான் பெர்க்மனின் மகத்தான வெற்றியாக உலக சினிமா விமர்சகர்கள் கருதுகின்றனர்.

ஆஸ்கார், கேன்ஸ், கோல்டன் குளோப், பாப்டா, பெர்லின் தங்க கரடி போன்ற பல விருதுகளை பெர்க்மன் பெற்றுள்ளார். 1955இல் இவர் இயக்கத்தில் வெளியான ஸ்னமல்ஸ் ஆப் சம்மர் னநட்குட்டி எனும் திரைப்படம்தான் பெர்க்மனின் முழு ஆளுமையை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியது.

தி.செவன்த் சீல் கூடநூ மற்றும் வைல்டு ஸ்ரோ பெரிஸ் போன்ற படங்கள் மகத்தான காவியங்கள். 35 நாள்களில் எடுத்த படமான செவன்தீ சீல் உலகின் தலை சிறந்த பரிசான கேனஸ் விருதைப் பெற்றது. வைல்ட் ஸ்ரோபெரிஸ் ஐம்பதுகளில் வெளியான உலகின் தலை சிறந்த படமாக கணிக்கப்பட்டது.

பெர்க்மன் தனது திரைப்படங்களுக்கு உலகமெங்கும் வரவேற்பை கண்ட போதிலும் அவரது ஸ்வீடனின் நாட்டில் தொடர்ந்து அவமானப்படுத்தப் பட்டு வந்தார். சக இயக்குநர்கள் அவர் மேல் கடும் விமர்சனங்களை வைத் தனர். இது மட்டுமல்லாமல் 1976 இல் வருமான வரி கட்டவில்லை என்று பொலிஸார் அவரை கைது செய்தனர். இதனால் மன உளைச்சலுக்கு ஆளான பெர்க்மன் நரம்புத் தளர்ச்சி நோய்க்கு ஆளானார். இதனால் தனது ஸ்ரூடியோக்களை மூடி விட்டு ம்யூனிச்சிற்குச் சென்றார்.



சிறிது காலம் கழித்து மீண்டும் ஸ்வீட னுக்குள் பெர்க்மென் திரும்பியபோது 'அரசு பெரும் குற்ற உணர்ச்சியுடன் அவரை வரவேற்று அவர் பெயரில் ஒரு திரைப்பட பயிற்சி நிறுவனத்தை உருவாக்கியது. 1988 இல் தனது வாழ்க்கை வரலாற்றை மேறிக் லாண்டர்ன் எனும் பெயரில் எழுதிய பெர்க்மன் 1993இல் பெஸ்ட் இண்டென் ஷன்ஸ் எனும் பெயரில் நாவல் ஒன்றை எழுதி அந்தக் கதையை திரைப்படமாகவும் வெளியிட்டுள்ளார். உலக சினிமா விமர்சகர்கள் இவரை மைக்கேல் ஏஞ்சலோ ஆண்டனியோவுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். 30.07.2007 ஆம் திகதி ஒரே நாளில் இருவரது இறப்புச் செய்திகளும் அடுத்தடுத்து வந்து உலக சினிமா ரசிகர்களையும் பார்வையாளர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கின. அவரது படங்கள் இன்றும் வரை வாழ வைத்துக் கொண்டு இருக்கின்றன.

பார்வையாளன்.

> 1955இல் இவர் இயக்கத்தில் வெளியான ஸ்னமல்ஸ் ஆப் சம்மர் னநட்குட்டி எனும் திரைப்படம்தான் பெர்க்மனின் முழு ஆளுமையை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியது.

# அமெரிக்காவின் 'கிறீன்காட்' விண்ணப்பம்

அமெரிக்காவின் குடியுரிமை பெறுவதற்கான குலுக்கல் தெரிவு முறைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட ஆரம்பித்து விட்டன. இந்த நிலையில் அமெரிக்க தூதரக விசா அதிகாரி சாலி ஸ்ரேனல் இங்கு விளக்குகிறார்

**அதிர்ஷ்ட குலுக்கல் மூலம் பல்வகைமை குடியேற்ற வீசா (கிறீன் காட் லொட்டரி) (DV) என்றால் என்ன?**

அதிர்ஷ்டக்குலுக்கல் மூலமாகப் பல்வேறு குடியேற்ற வீசாக்களை வழங்குதல் ஐக்கிய அமெரிக்க அரசின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாகும். இலங்கை, மாலை தீவு உட்பட குறிப்பிட்ட சில நாடுகளில் பிறந்தோர், ஐக்கிய அமெரிக்காவில் சட்டரீதியான நிரந்தரக் குடியுரிமைகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க விரும்பும்பட்சத்தில், அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டமே இது. அமெரிக்காவில் சட்ட ரீதியாகவும் நிரந்தரமாக வும் வாழ்வோர் அங்கு வாழவும், தொழில் செய்யவும், பாடசாலைக்குச் செல்லவும் அனுமதிக்கப்படுவர். அமெரிக்காவின் பல் வகைமைத் தன்மையை அதிகரிப்பதற்கு உதவுவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். அமெரிக்காவின் குடிவரவுச் சனத்தொகையில் குறைந்த பிரதிநிதித்துவம் கொண்டுள்ள நாடுகளில் பிறந்தவர்களிடமிருந்தே இந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2013 ஒக்ரோபர் 1 ஆம் திகதிக்கும் நவம்பர் 2 ஆம் திகதிக்கும் இடையில் இந்த அதிர்ஷ்டக் குலுக்கல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும். இக்கால எல்லையில் இணையத் தளம் ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

மேலும் www.dvlottery.state.gov. என்ற உத்தியோகபூர்வ இணையத் தளத்தை மாத்திரம் பயன்படுத்தியே விண்ணப்பிக்க முடியும்.

மேலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விவரமான தகவல்களை http://srilanka.usembassy.gov/visas/diversity-visa-lottery-program.html.என்ற இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இந்த இணையத்தளத்தில் சிங்களம் - தமிழ் ஆகிய மொழிகளில் விண்ணப்பிப்பதற்கான ஆலோசனைகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**ஒருவர் வெற்றி பெற்றால் ஐக்கிய அமெரிக்காவிற்கான வீசா அவருக்குக் கிடைக்குமா?**

அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரே காரணத்துக்காக ஒருவர் வீசா பெற்றதாகக் கருதமுடியாது. அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டால், வீசா உத்தியோகத்தருடன் நேர்காணல் நடத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும். இதில் வெற்றி பெறுபவர்களுக்கு மாத்திரமே வீசா வழங்கப்படும்.

இதற்கான கல்வித் தகைமை பின்வருமாறு இருத்தல்வேண்டும்:

(பொது ஆங்கிலம் நீங்கலாக) க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

மேலும் இதற்கென வயதெல்லை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், கல்வித் தகைமை காரணமாக அநேகமானோர் ஆகக் குறைந்தது 18 வயதில் தகைமை பெறுவர்.

மேலும் திருமணமானவராயின் வாழ்க்கைத் துணையை உள்ளடக்க வேண்டும். திருமணமாகாத 21 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பெயர்களையும் விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் உள்ளடக்க வேண்டும்.

மேலும் இணையத்தளம் ஊடாக இலவசமாக விண்ணப்பிக்கலாம். அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் வெற்றியாளராகத் தெரிவு செய்யப் பட்டிருந்தால், வீசா நேர்காணலுக்காக, அமெரிக்க தூதுவராலயத்தில் ஓர் அமெரிக்கப் பேராளர் (U.S.Consular Officer) ஒரு வருடனான நேர்காணலின் போது ஒரு குறிப்பிட்ட கட்டணத் தைச் செலுத்த நேரிடும்.

**தெரிவுக்கான வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு ஒருவர் பல முறை விண்ணப்பிக்கலாமா?**

ஒரே வருடத்தில் பல முறை விண்ணப்பித்தால் எவ ரும் தகைமையிழந்து விடுவர்.

> இணையத்தளம் ஊடாக இலவசமாக விண்ணப்பிக்கலாம். அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் வெற்றியாளராகத் தெரிவு செய்யப் பட்டிருந்தால், வீசா நேர் காணலுக்காக, அமெரிக்க தூதுவராலயத்தில் ஓர் அமெரிக்கப் பேராளர் (U.S.Consular Officer) ஒரு வருடனான நேர்காணலின்போது ஒரு குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்த நேரிடும்.



# சின்னப் பாரதி இலக்கிய விருது எழுத்தாளர் டேவிட்டுக்கு

இந்தியாவிலுள்ள 'நாமக்கல் சின்னப்ப பாரதி அறக் கட்டளை அமைப்பு' கடந்த நான் காண்டுகளாக ஒவ்வொரு வருடமும் பிரசுரமாகும் நூல்களுக்கு விருதுகள் வழங்கி வருகின்றது. கடந்த 2012 ஆம் ஆண்டுக்கான ஐந்தாவது வருட நூல் தேர்வில் இலங்கை எழுத்தாளரான கே.ஆர். டேவிட் அவர்களது "மண்ணின் முனகல்" என்ற சிறு கதைத் தொகுதி இவ் விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நாமக்கல், செல்வம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் இவ்விருது வழங்கும் விழாவை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.



யாழ்.சாவகச்சேரி மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கே.ஆர்.டேவிட் தற்போது ஆனைக்கோட்டையை வதிவிடமாகக் கொண்டுள்ளார். 1966 இல் சிறுகதை எழுத்தாளராக இலக்கியப் பிரவேசம் செய்த இவர் இதுவரையில் ஏழு நூல்களை வெளியீடு செய்துள்ளார். 2012 இல் இவரால் வெளியீடு செய்யப்பட்ட 'பாடுகள்', 'மண்ணின் முனகல்' என்ற இரண்டு சிறுகதைத் தொகுதிகளில் 'மண்ணின் முனகல்' என்ற சிறு கதைத் தொகுதிக்கே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

நாவல், குறுநாவல், சிறுகதை, உருவகக்கதை, இலக்கிய ஆய்வு, அரசியல் ஆய்வு போன்ற பல்துறை ஆற்றல் கொண்ட டேவிட் அவர்களின்'எழுதப்படாத வரலாறு' என்ற சிறு கதையொன்று தற்போது நடைமுறையிலுள்ள 'ஆண்டு- 8 தமிழ் மொழியும் இலக்கியமும்' பாடநூலில் இடம் பெற்றுள்ளது.

முப்பதுக்கு மேற்பட்ட இலக்கியப் பரிசில்களைப் பெற்றுள்ள இவர் 2006-2008 ஆம் ஆண்டுகளுக் குரிய 'கனகசெந்தி கதாவிருதையும்', 2011 இல் 'அரச கலாபூஷணம்' விருதையும், 2013 இல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் சிறந்த எழுத்தாளர்களுக்கான 'இதழியல் விருதையும்' பெற்றுள்ளார். இவர் சாவகச்சேரி உதவிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றி 2004 இல் ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூச்சு



அதிக மக்கள் கூட்டத்தில் நாம் இருக் கும்போது. ஒட்சிசன் எமக்குக் கிடைப் பது குறைந்து விடுகிறது. அதாவது 10 பேர் இருக்க வேண்டிய இடத்தில் நூறு பேர் இருந் தால் நமக்கு ஒட்சிசன் குறைவாகக் கிடைக்கும். அதே நேரத்தில் எல்லோ ரும் சுவாசித்து விட்டு காற்றை வெளியே விடும் போது அந்த இடத்தில் காபன் டை ஒக்சைட் வாயு அதிகமாகி விடுகிறது.

நாம் ஒவ்வொருவரும் ஒரு நிமிடத்தில் சராசரியாக 12 முதல் 14 தடவை மூச்சை உள்ளிழுத்து. உள் நிறுத்தி. வெளிவிடுகிறோம்.ஒரு முறை மூச்சை உள்ளே இழுக்கும் போது குறைந்த பட்சம் அரை லீற்றர் காற்று உள்ளிழுக்கப் படுகிறது.இவை எல்லாம் இயல்பு நிலையில் நடைபெறும் மூச்சின் கூறுகள் ஆகும். ஒருவரின் உடல் அமைப்பு. உடலின் தேவை, உடலின் செயல்பாடுகளைப் பொறுத்து இந்த அளவு மாறுபடும். உடலமைப்பைப் பொறுத்து நுரையீரலின் கொள்ளளவும். உள்ளிழுக்கப்படும் காற்றின் அளவும் மாறுபடும். அடிப்படையில் நம்மில் ஏவருமே முழுமையான சுவாசம் செய்வதில்லை என்பதுதான் உண்மை.

இதற்கிடையில் - மூச்சு வாங்குது.
- மூச்சுத் திணறுது.
- மூச்சுவிடக் கஷ்டமா இருக்கு.
- மூச்சு நின்றுவிட்டது.

இவ்வாறு மூச்சு, மூச்சு என்று அடிக்கடி எல்லோரும் சொல்வதை நீங்களும் கேட்டிருப்பீர்கள். மூக்குவழியாக காற்றை உள்ளிழுத்து வெளியே விடுவதைத் தான் 'மூச்சு' என்று சொல்லிப் பழகி விட்டோம். இதையே 'சுவாசித்தல்' என்றும் நாம் சொல்வதுண்டு.நம்மை அறியாமலே. இயற்கையாக, தன்னிச்சையாக, சுவாசித்தல் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அதைப் பற்றி நாம் யாரும்கண்டுகொள்வதில்லை. கணக்கில் எடுத்துக் கொள்வதும் இல்லை.

சுவாசித்தல், நுரையீரல் என்னும் உறுப்பு மூலமாகத்தான் நடைபெறுகிறது. நுரையீரல் எமது உடலில் மார்பின் இரண்டு பக்கமும் நிறைந்திருக்கிறது. மார்பிலுள்ள இரண்டு நுரையீ ரல்களிலும், கண்ணுக்குத் தெரியாதளவில் மிகமிகச் சிறிய பலூன் போன்ற காற்றுப்பைகள் சுமார் முப்பது கோடி எண்ணிக்கையில் இருக்கின்றன. வெளியிலிருந்து உள்ளே இழுக் கப்படும் காற்று, இந்த முப்பது கோடி காற்றுப் பைகளுக்குள்ளும் சென்றுதான் மாற்றமாகி மறுபடியும் வெளியே வருகிறது. உலகமெங்கும் பரவியிருக்கும் காற்றைத்தான், நாம் பிறந்த நாளிலிருந்து இறக்கும்நாள் வரை சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். காற்று கண்ணுக்குத் தெரியாதது. ஆனால் எங்கும் நிறைந்து இருப்பது. செடி, கொடிகள் அசையும் போது நாம் காற்று அடிக்கிறது என்று சொல்கிறோம். காற்றை நம்மால் உணர மட்டும் தான் முடியும்.

காற்றை நாம் சுவாசிப்பதால்தான் உயிர் வாழ்கிறோம். சுவாசித்தல் நின்று விட்டால், உயிரும் நின்று விட்டதாக கருத்து. 'தூங்கும் போதே வாங்குகிற மூச்சு, சொல்லாமல் நின்றாலும் போச்சு' இரவு தூங்கி, காலையில் எழுந்தால்தான் உயிர் நிச்சயம் என்று சுவாசித்தலைப் பற்றி கிராமத்திலுள்ள பெரியவர்கள் கூறுவதுண்டு.

காற்றில் கலந்திருக்கும் 'பிராணவாயு' என்ற ஒட்சிசன் வாயு தான், நாம் உயிர்வாழ பெரிதும் உதவுகிறது. இந்த கண்ணுக்குத் தெரியாத காற்றில் ஒட்சிசன் தவிர இன்னும் அதிக வாயுக்கள் இயற்கையாகக் கலந்துள்ளன. அதாவது காற்றில்78சதவீதம்நைதரஜன்வாயுவும். 21 சதவீதம் ஒட்சிசன் வாயுவும் இருக்கின்றன. மீதமுள்ள ஒரு சதவீதத்தில் 0.93 சதவீதம் ஆர்கன், 0.039 சதவீதம் கார்பன் டை ஒக்ஸைடு மற்றும் நியான். ஹீலியம், மீதேன், கிரிப்டான், ஹைட்ரஜன், நைட்ரஸ் ஒக்ஸைடு, காபன் மொனக்ஸைட்டு. நைதரஜன் டை ஒக்ஸைடு. ஓஸோன், அயோடின், அம்மோனியா போன்ற சுமார் பதினாறு வகையான வாயுக்கள் கலந்திருக்கின்றன. காற்றில் 21 சதவீதம் இருக்கும் ஒக்ஸிஜன் வாயுதான். எம்மை உயிர்வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த 21 சதவீத ஒட்சிசன் வாயு ஒரு சதவீதம் குறைந்தால் கூட உடலில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும். ஐந்து சதவீதம் குறைந்தால் எல்லோர் உயிருக்கும் ஆபத்துதான்.

இந்த 21 சதவீத ஒட்சிசனே உலகிலுள்ள அனைவரும் உயிர்வாழ போதுமானது. இதைக் கெடுக்காமல், இது இன்னும் குறையாமல்பார்த்துக்கொள்ளவேண்டும். காற்றின் அழுத்தமும் காற்றின் அடர்த்தியும் உயரம் அதிகரிக்கும் போது குறைந்து கொண்டே போகும். பத்தா யிரம் மீற்றருக்கு மேலே போகும்போது காற்றில் உள்ள வாயுக்களின் சதவீதம் மாறும். நீருக்குள் காற்று இருக்கிறது. நீருக்குள்ளேயே வாழும் உயிரினங்கள் அனைத்துமே, தனக்குள்ள 'கில்ஸ்' என்று சொல்லக்கூடிய விசேட நுரையீரலைப் பயன்படுத்தி. தண் ணீரிலுள்ள காற்றிலிருந்து. ஒட்சிசனை மட்டும் பிரித்தெடுத்து சுவாசிக்கின்றன.

விண்வெளியில் ஒட்சிசன் வாயு கிடையாது. எனவே விண்வெளி வீரர்கள், ஒட்சிசன் சிலிண்டர்களை உடன் எடுத்துச் சொல்கிறார்கள். வானத்தில் 'ஓஸோன் திரை' என்று சொல் லக்கூடிய இடம் வரைக்கும் தான் ஒட்சிசன் வாயு உண்டு. அதற்கு மேல் சில ஆயிரம் மீற்றர் தூரத்திற்கு காற்று இருக்கும். ஆனால் ஒட்சிசன் வாயு இருக்காது.

பூமிக்கடியில் அதிக ஆழத்திலுள்ள சுரங்கத்தில் வேலை செய்பவர் களுக்கு. 'வென்டிலேடிஸ் ஷாப்ட்' என்று சொல் லக்கூடிய மிகப்பெரிய இராட்சத குழாய், பூமியிலிருந்து சுரங்கத்துக்குள் நுழைக்கப்பட்டு. தரையிலுள்ள இயற்கைக்காற்று உள்ளே அனுப்பப்படுகிறது. இதன் மூலம்தான் சுரங்கத் தொழிலாளர்கள் சுவாசிக்கிறார்கள்.

மனிதன் ஒட்சிசன் வாயுவை சுவாசித்து. (அதாவது உள்ளே இழுத்து) காபன் டை ஒக்சைட்டு என்கிற வாயுவை வெளியே விடுகிறான். இதற்கு நேர்மாறாக எல்லா செடி, கொடிகளும் காபன் டை ஒக்சைட்டு வாயுவை உள்ளே இழுத்து. ஒட்சிசன் வாயுவை வெளியேற்றுகிறது. சூரிய வெளிச்சம் இருந்தால் தான் இவ்வாறு நடக்கும். சூரிய வெளிச்சம் இல்லாத நேரத்தில் அதாவது இரவில், மனிதனைப் போல தாவரங்களும் ஒட்சிசன் வாயுவை உள்ளே இழுத்து. காபன் டை ஒக்ஸைட்டு வாயுவை வெளியே விடுகின்றன.

ஒட்சிசன் வாயு நமக்கு தேவை. கார்பன் டை ஒக்சைட்டு வாயு எமக்குத் தேவையில்லை. பகலில் ஒட்சிசன் மரத்தடியில் கிடைக்கும். அதனால் பகலில் மரத்தடியில் படுக்கலாம். இரவில் ஒட்சிசன் மரத்தடியில் கிடையாது. காபன் டை ஒக்சைட்டுதான் கிடைக்கும். இரவில் மரத்தடியில் படுக்கக்கூடாது என்று சொல் வதன் காரணம் இதுதான். என் நண்பர் ஒருவர் நடந்து செல்லும் போகும்போதும் வழியிலிருக்கும் செடி, கொடிகளின் அருகில் போய் இலைகளுக்கு பக்கத்தில் மூக்கைக் கொண்டு போய் நன்றாக மூச்சை உள்ளே இழுத்துவிட்டு வருவார். "என்ன சேர் இது! வழியெல்லாம் செடி கொடிகளைமோப்பம்பிடித்துக்கொண்டே வருகிறீர்கள் என்று மருத்துவர் ஒருவர் கேட்டார்.

எல்லாச் செடி கொடிகளும் பகலில் ஒட்சிசனை வெளியே விடும். இவைகளிலிருந்து வெளியே வரும் இந்த சுத்தமான ஒட்சிசன் எமக்குத் தேவை. அதனால்தான் இலைகளின் கிட்டே போய் அந்த சுத்தமான, கலப்படமில்லாத ஒட்சிசனை உள்ளே இழுத்து உடம்பை தெம்பாக்கிக் கொள்கிறேன்" என்றார் அந்த நண்பர். அவர் செய்வது சரிதான்.

அதிக மக்கள் கூட்டத்தில் நாம் இருக் கும்போது. ஒட்சிசன் எமக்குக் கிடைப் பது குறைந்து விடுகிறது. அதாவது 10 பேர் இருக்க வேண்டிய இடத்தில் நூறு பேர் இருந்தால் நமக்கு ஒட்சிசன் குறைவாகக் கிடைக்கும். அதே நேரத்தில் எல்லோரும் சுவாசித்து விட்டு காற்றை வெளியே விடும்போது அந்த இடத்தில் காபன் டை ஒக்சைட் வாயு அதிகமாகி விடுகிறது. சன நெரிசலில் மூச்சுத் திணறல் ஏற்பட்டது என்று சொல்வது இதனால் தான்.

# விலங்குகளின் பாதுகாப்பு நடவடிக்கை

விலங்குகள் எதிரிகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையும், உயிரினங்களில் காணப்படும் அற்புதங்களில் ஒன்றாகும். பல உயிரினங்கள் தங்களுக்கு வரக்கூடிய இடையூறுகளைப் பற்றி மதிப்பிட்டு அதனை தடுக்கக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்டுபிடிக்கும் திறமைகளைக் கொண்டுள்ளன.

உதாரணத்திற்கு முந்தைய தொடரில் நாம் ஏற்கெனவே அறிந்த கறையான்கள் உருவாக்கும் புற்றின் சுவர்கள் ஒரு பெரிய கடப்பாரையைக் கொண்டு தகர்க்க முடியாத அளவுக்கு கனமும், பலமும் கொண்டவை. தூக்கணாங்குருவிகள் தங்களது பிரதான எதிரியான பாம்புகள் கூட நுழையமுடியாத அளவுக்கு தங்களது கூடுகளின் வாசலை அமைத்துக் கொள்கின்றன. சில வகை சிலந்திகள் தங்கள் வலைகளில் அறியாமல் நுழைந்து விடும் பிற பூச்சியினங்களுக்கென தனியாக ஒரு பகுதியை அமைத்து, அதில் அந்த பூச்சியினங்களை சிறைப்படுத்திவிடுகின்றன.

## தூக்கணாங்குருவி கூடு

தேனீக்களும் தங்களை பாதுகாத்துக்கொள்ள பிரத்தியேக பாதுகாப்பு முறையை கையாளுகின்றன. தேன்கூட்டை பாதுகாப்பதற்கு என நியமிக்கப்பட்டிருக்கும் தேனீக்கள், தேன்கூட்டின் மேல் பகுதியில் இருந்துகொண்டு, தங்களது கூட்டில் உள்ள தேனீக்களைத் தவிர பிற பூச்சியினங்கள் எவற்றையும் உள்ளே அனுமதிப்பதில்லை. தேன்கூட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் ஒரு தேனீ வெளியேறும்போது. மற்றொரு தேனீ அந்த பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் இந்த தேனீக்கள் தங்களது சொந்த உயிரை பணயமாக வைத்தே பாதுகாப்பு பணியை மேற்கொள்கின்றன.

ஆங்கிலத்தில் பீவர்' ( Beaver) என அழைக்கப்படும் எலி இனத்தைச் சார்ந்த ஒருவகை விலங்கினம். தனது தங்குமிடத்தை தண்ணீருக்கு அடியில் அமைத்துக் கொள்கிறது. அவைகளின் தங்குமிடத்தை அடைய வேண்டுமெனில், பீவர்;' கள் மட்டுமே அறிந்திருக்கக் கூடிய ரகசியமான சுரங்கம் வழியாக மாத்திரமே அவைகளின் தங்குமிடத்தை அடைய முடியும். சுரங்கத்தின் உட்பகுதியில் உள்ள கடைசிப் பகுதியில் அவைகள் தங்கள் குடும்ப சகிதம் குடியிருப்பதைக் காணலாம்.

## பீவர் என்ற விலங்கின் கூடு

உயிரினங்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள எடுக்கும் உயரிய பாதுகாப்பு நடவடிக்கைகளிலிருந்து உயிரினங்களிடம் தங்களை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய நுண்ணிறவு உள்ளது என அறிந்து கொள்ளலாம். அதற்கு அத்தாட்சியாக மேலே சுட்டிக்காட்டப்பட்ட உதாரணங்கள் மாத்திரம் நமக்கு போதுமானது. தவிர. ஓர் இனத்தின் எதிரி மற்றொரு இனமே என்பதை நீங்கள் உங்களது கவனத்தில் கொள்ள வேண்டும். எப்படியிருப்பினும், ஒவ்வொரு உயிரினமும் தங்களது எதிரி யார் என்பதை நன்றாக அறிந்து வைத்திருப்பதோடு. அவைகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கென விலாவாரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றன. கறையானோ அல்லது தூக்கணாங்குருவியோ அவைகளுக்கு அறிவுபூர்வமாக சிந்தித்து செயல்படக்கூடிய சிந்தனைத் திறன் இல்லாவிட்டாலும், தங்களது எதிரிகளைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்து வைத்திருக்கின்றன என்பது மிகவும் வியப்பானதுதான்.

## சிலந்தி அமைத்திருக்கும் சிறை

இதனை முழுமையாக புரிந்து கொள்ள வேண்டுமெனில் நீங்கள் உங்களையே உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இதுவரை அறிந்திராத அல்லது பார்த்திராத ஒரு விலங்கினத்தைப் பற்றிய அல்லது இப்போதுதான் முதன் முறையாக நீங்கள் பார்க்கின்ற ஒரு விலங்கினத்தைப் பற்றிய முழு குணநலன்களையும் உடனடியாக கூறிட முடியுமா? நீங்கள் பார்க்கின்ற அந்த விலங்கினம் உண்ணும் உணவு என்ன? அது எப்படி வேட்டையாடும்? அதன் எதிரிகள் யார்? என்ற விவரங்களை அந்த விலங்கினத்தை பார்த்த மாத்திரத்தில் உங்களால் கூறிட முடியுமா? கண்டிப்பாக முடியாது. நீங்கள் முதன்முதலாக பார்த்த அந்த விலங்கினத்தைப் பற்றிய முழு விவரங்களையும் நீங்கள் அறிய வேண்டுமெனில் அந்த விலங்கினத்தைப் பற்றி எழுதப்பட்ட ஒரு புத்தகம் உங்களுக்குத் தேவைப்படும். அல்லது அந்த விலங்கினத்தைப் பற்றி முன்னரே அறிந்திருக்கும் யாராவது ஒருவர் உங்களுக்கு விவரங்கள் அறிவிக்க வேண்டும். ஆனால் சிந்தித்து செயலாற்றும் திறன் இல்லாத இந்த விலங்கினங்கள் மற்றொரு உயிரினத் தைப் பார்த்ததும், அவை களைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொள்கி றதே. இது எப்படி சாத்தியம்? அவைகள் தங்கள் எதிரிகளின் பழக்கவழக்கங்கள், அவைகள் வேட்டையாடும் முறை பற்றி முன்னரே தெரிந்து கொண்டு, அவைகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய முறைகளை தங்களுக்குள்ளே வளர்த்துக் கொள்கின்றனவா? நிச்சயமாக இல்லை.

மனிதனைத் தவிர எந்த விலங்கினமும் சிந்தித்து செயல்படக்கூடிய திறன் படைத்தவை அல்ல. அத்தோடு, விலங்கினங்களுக்கு தங்கள் எதிரிகளைப் பற்றிய விவரங்கள் எதேச்சையாகக் கிடைத்திருக்கும் என்று கூறுவது நடைமுறைக்கு ஒவ்வாததும், அறிவுக்கு எட்டாதததுமாகும். ஏனென்றால் விலங்கினங்கள் தங்கள் எதிரிகளைப் பற்றி ஆய்வு செய்ய எடுக்கும் முதல் முயற்சியே அதன் மரணமாகும்.

## தேனீ

நிச்சயமாக விலங்கினங்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள எடுக்கும் நடவடிக்கைகளையும், அதன்படி அமையும் அவைகளின் செயல்பாடுகளையும் முடிவு செய்பவன் வல்ல அல்லாஹ் ஒருவனே. நாம் அன்றாடம் நம் வாழ்வில் காணும் விலங்கினங்கள் மட்டுமின்றி, உலகில் வாழுகின்ற ஒவ்வொரு உயிரினமும் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட மதிநுட்பத்தைக் கொண்டுதான் தங்களை பாதுகாத்துக் கொள்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org